விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு

# வலம்புரி
## Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே

சங்கு 16 வள்ளுவர் ஆண்டு 2046 ஆவணி 28 திங்கட்கிழமை (14.09.2015) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 269

# ஐ.நா கூட்டத் தொடர் இன்று ஆரம்பம்!

## இலங்கை தொடர்பிலும் உரை நிகழ்த்தப்படும்

(ஜெனிவா)

**ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் 30-வது மாநாடு இன்றைய தினம் ஜெனிவாவில் ஆரம்பமாகிறது. இலங்கையில் இடம்பெற்றதாக கூறப்படும் யுத்தக் குற்றங்கள் குறித்த நிபுணர்களின் அறிக்கை இந்த மாநாட்டில் முன்வைக்கப்படவுள்ள நிலையில் இலங்கைக்கு இது முக்கியமான மாநாடாக அமைந்துள்ளது.**

இன்றைய மனித உரிமைகள் மாநாட்டின் ஆரம்ப உரையின் போது இலங்கை குறித்த விடயங்களை மனித உரிமைகள் ஆணையாளர் செயிட் ராட் செயிட் அல் ஹூசைன் முன்வைப்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அதேநேரம், இலங்கை சார்பில

24 ஆம் பக்கம் பார்க்க....

## ஐ.நா ஆணையாளருக்கு சம்பந்தன் கடிதம்




(கொழும்பு)

இலங்கையில் இடம்பெற்ற போர்க்குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் சர்வதேச விசாரணைப் பொறிமுறை அமைக்கப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தி ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் செயிட் அல் ஹுசேனுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வலியுறுத்திக் கடிதம் அனுப்பியுள்ளது.

போர்க்குற்ற விசாரணை தொடர்பான அமெரிக்காவின் நிலைப்பாடு, இந்த விவகாரத்தில் சம்பந்தப்பட்ட ஒரு தரப்பான தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு உதவும் வகையில் இருக்காது

24 ஆம் பக்கம் பார்க்க....

## ஐ.நா கூட்ட தொடரில் பங்கேற்க சுமந்திரன் தலைமையில் குழு

ஐ.நா. மனித உரிமை ஆணைக குழுவின் 30 ஆவது கூட்டத் தொடர ஜெனிவாவில் இன்று ஆரம்பமாக வுள்ள நிலையில் அதில் பங்கேற்ப தற்காக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் மற்றும் சட்டத்தரணிகள் அடங்கிய குழுவினர் ஜெனிவா சென்றுள்ளனர்.

எனினும் இவர்களது பயணத் திகதி குறித்த தெளிவான தகவல்கள் ஊடகங்களுக்கு தெரிவிக்கப்படவில்லை.

இதேவேளை ஜெனிவா சென்றுள்ள சுமந்திரன் தலைமையிலான குழுவினர் அங்கு ஐ.நா உறுப்பு நாடுகளின் பிரதிநிதிகளைச் சந்தித்து கலந்துரையாடல்களில் ஈடுபடவுள்ளதாக அறிய முடிகிறது.

மேலும் எதிர்வரும் நாட்களில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஏனைய உறுப்பினர்களும ஜெனிவா பயணமாகவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ-12)

## மகிந்தவின் இணையத்தளம் முடக்கப்பட்டது

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் தகவல்களை கொண்டுள்ள www.mahinda.info என்ற இணையத்தளம் இலங்கை அரசாங்கத்தினால் முடக்கப்பட்டுள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமையன்று இந்த இணையத்தளம், ஸ்ரீலங்கா டெலிகொமின் உரிமையான மொபிடெல் நிறுவனத்தினால் முடக்கப்பட்டது.

ஸ்ரீலங்கா டெலிகொம் நிறுவனத்தின் தலைவராக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் சகோ

24 ஆம் பக்கம் பார்க்க....

## இரண்டு மாத கால பகுதியில் படிப்படியாக மீள்குடியேற்றம்

### அமைச்சர் சுவாமிநாதன் உறுதியளிப்பு

(யாழ்ப்பாணம்)

இன்னும் இரண்டு மாத கால அவகாசத்தில் படிப்படியாக மீள் குடியேற்ற விடயத்தை முன்னெடுத்துச் செல்வதுடன் மக்களை குடியேற்றுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதாகவும் புனர்வாழ்வு மீள்குடியேற்ற இந்து மத அலுவல்கள் அமைச்சர் எம்.சுவாமிநாதன் தெரிவித்துள்ளார்.

புதிய அரசின் அமைச்சரவையில அமைச்சராகப் பதவி ஏற்ற பின்னர் முதல் தடவையாக நேற்று ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம் வருகை தந்த அமைச்சர் மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலயத்தில் வழிபாடுகளை மேற்கொண்டார்.

அதன் பின்னர் இடம்பெயர்ந்தோர் நலன்புரி சங்கத்தின் தலைவர் எஸ்.குணபாலசிங்கம் மற்றும் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடிய போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

முன்னதாக மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலயத்தில் அமைச்சர் வழிபாடுகளை மேற்கொண்டார். காலையில் இடம்பெற்ற விசேட பூசை வழிபாடுகளில் கலந்துகொண்டதுடன் அவரை சந்திக்க வந்த பொது மக்களுடனும் கலந்துரையாடினார். (செ-12)

## ஐ.நா விசாரணை அறிக்கையில் இருதரப்பு மீதும் குற்றச்சாட்டு!

(ஜெனிவா)

இலங்கையில் இடம்பெற்ற போரின் போது புரியப்பட்ட சர்வதேச மனிதவுரிமை மற்றும் மனிதாபிமான மீறல்கள் குறித்து ஐ.நா மனிதவுரிமைகள் ஆணையாளர் பணியகம் மேற்கொண்ட விசாரணை அறிக்கையில் போரில ஈடுபட்ட விடுதலைப்புலிகள் மற்றும் அரசபடையினர் ஆகிய இருதரப்பு மீதும் கடும் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அதேவேளை, இந்த சர்வதேச சட்டமீறல்கள் தொடர்பில் இந்த அறிக்கையில் எவரினது பெயர்களும் தெரிவிக்கப்படவில்லை என்று இராஜதந்திர வட்டாரங்களை மேற்கோள்காட்டி கொழும்பு ஊடகம் குறிப்பிட்டுள்ளது.

இலங்கையில் இடம்பெற்ற போர்க்குற்றங்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்கள் ஐ.நா மனிதவுரிமைகள் ஆணையாளர் பணியகம் மேற்கொண்ட விசாரணை அறிக்கையின் பிரதி இலங்கை அரசாங்கத்திடம் கடந்த வெள்ளிக்கிழமை அதிகாரபூர்வமாக கையளிக்கப்பட்டுள்ளது.

இவ்வறிக்கையில் இலங்கையில் இடம்பெற்ற போரின் போது மனிதவுரிமை மீறல்களில் ஈடுபட்டவர்கள் எவரினது

24 ஆம் பக்கம் பார்க்க....




## ஆயுத குழுவுக்கு மகிந்த அரசால் ரி-56 துப்பாக்கிகள் வழங்கப்பட்டன!

### குற்றப்புலனாய்வு விசாரணையில் தகவல்

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கத்தினால் துணை ஆயுதக் குழு ஒன்றுக்கு ஆயிரம் ரி-56 துப்பாக்கிகள் சட்ட விரோதமான முறையில் வழங்கப்பட்டுள்ளதாக குற்றப்புலனாய்வுப் பிரிவு மேற்கொண்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

குற்றப்புலனாய்வுப் பிரிவு துணை ஆயுதக் குழுவொன்றின் தலைவராக முன்னர் இருந்து, பின்னர் அரசியலுக்கு வந்த ஒருவரிடம் மேற்கொண்ட விசாரணையின் போதே இவ்விடயம் தொடர்பில் தெரியவந்துள்ளது.

முன்னைய அரசாங்க உயரதிகாரிகளின் உத்தரவின் பேரிலேயே, ஆயிரக்கணக்கான இந்தத் துப்பாக்கிகள் குறிப்பிட்ட துணை ஆயுதக் குழுவுக்கு வழங்கப்பட்டுள்ளன.

இந்நிலையில், முன்னைய அரசாங்கத்தால்

24 ஆம் பக்கம் பார்க்க....

### சர்வதேச விசாரணை

## நடைபயணம் நிறைவு இன்று

(யாழ்ப்பாணம்)

இலங்கையில் நடைபெற்ற இறுதிப் போரில் இடம்பெற்ற மனித உரிமை மீறல் மற்றும் போர்க் குற்றங்களுக்கு சர்வதேச விசாரணை வேண்டும் என வலியுறுத்தி நேற்று மூன்றாவது நாளாகவும் தொடர்ந்த நடைப்பயணம் இன்று யாழ்.கிட்டு பூங்காவில் நிறைவடையவுள்ளது.

இலங்கை மீது இடம்பெற்ற

24 ஆம் பக்கம் பார்க்க....

நடுவுநிலை தவறா நன்நெறி காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கே.பியின் சொத்துக்களுக்கு என்ன நடந்தது?-ஜே.வி.பி

(கொழும்பு)

கே.பி என்ற குமரன் பத்மநாதனிடம் இருந்த பணம், நகைகள் மற்றும் கப்பல்கள் என்ற பெருமளவு சொத்துக்களுக்கு என்ன நடந்தது என்று ஜே.வி.பி கேள்வி எழுப்பியுள்ளது.

ஜே.வி.பியின் பிரசார செயலாளர் விஜித ஹேரத், இந்தக்கேள்வியை தொடுத்துள்ளார்.

கே.பிக்கு எதிராக ஜே.வி.பி தாக்கல் செய்திருந்த வழக்கு தொடர்பில் நீதிமன்றத்துக்கு தகவல் வெளியிட்டுள்ள சட்டமா அதிபர், கே.பியின் மீது சுமத்தப்பட்டுள்ள 46 குற்றச்சாட்டுக்கள் தொடர்பான வழக்கை தொடர்வதற்கு உரிய சாட்சியங்கள் இல்லை என்று தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் கருத்துரைத்துள்ள விஜித ஹேரத், முன்னாள் இராணுவ தளபதி சரத் பொன்சேகா, கே.பி தொடர்பில் தகவல்களை




தர முன்வந்துள்ள போதும் அவரின் வாக்கு மூலம் பெறப்படவில்லை.

இந்தநிலையில் கே.பியிடம் இருந்த பணம் தங்கம் மற்றும் கப்பல்களுக்கு என்ன நடந்தது என்று விஜித கேள்வி எழுப்பியுள்ளார்.

இதேவேளை எதிர்க்கட்சியில் இருந்த போது ஐக்கிய தேசியக்கட்சி, கே.பி தொடர்பில் சத்தமிட்ட போதும் தற்போது அமைதியை கடைப்பிடிப்பதாகவும் ஹேரத் குற்றம் சுமத்தியுள்ளார்.

(செ-12)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



திருமதி விஜயகலா மகேஸ்வரன் அவர்கள் கடந்த 09-09-2015 அன்று சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சராக பதவியேற்றதையிட்டு பாராட்டி வாழ்த்துவதுடன் அவ் அம்மையாரின் அயராத சேவை மேன்மேலும் தொடர மனதார வாழ்த்துகின்றோம்.

(C-2154)

கல்லுவம் கிராம அபிவிருத்திச் சங்கம்
மற்றும் கல்லுவம் ஞான வைரவர், சித்திவிநாயகர்
ஆலய பரிபாலன சபையினர்


## Apex Kingdom (PVT) LTD.

Promotion Raffle prize winners numbers list. 31-08-2015

| | |
|---|---|
| WINNING NO : 271 | WINNING NO : 059 |
| WINNING NO : 192 | WINNING NO : 411 |
| WINNING NO : 018 | WINNING NO : 527 |
| WINNING NO : 155 | WINNING NO : 030 |
| WINNING NO : 024 | WINNING NO : 813 |
| WINNING NO : 008 | WINNING NO : 019 |
| WINNING NO : 352 | WINNING NO : 883 |
| WINNING NO : 310 | WINNING NO : 050 |
| WINNING NO : 864 | WINNING NO : 358 |
| WINNING NO : 208 | WINNING NO : 412 |
| WINNING NO : 367 | WINNING NO : 832 |
| WINNING NO : 441 | WINNING NO : 755 |
| WINNING NO : 263 | WINNING NO : 811 |
| WINNING NO : 513 | |
| WINNING NO : 052 | |
| WINNING NO : 760 | |
| WINNING NO : 026 | |
| WINNING NO : 281 | |
| WINNING NO : 040 | |

(சி-2151)

HOT LINE NO:- 0094 776 411 920

APEX KINGDOM (PVT) LTD SRI LANKA.

APEX KINGDOM (PVT) LTD


# மரண அறிவித்தல்

## திருமதி பொன்னையா நாகமுத்து (பிள்ளையம்மா)



**மலர்வு:-12.03.1934** **உதிர்வு:-11.09.2015**

அல்லிப்பளை, பளையைப் பிறப்பிடமாகவும் பேராலையை வதிவிடமாகவும் தற்போது கனடாவை வசிப்பிடமாகவும் கொண்டிருந்த திருமதி பொன்னையா நாகமுத்து (பிள்ளையம்மா) 11.09.2015 அன்று கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை-தெய்வானை தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்ற (சேமன்) சின்னையா-அன்னமுத்து தம்பதிகளின் மருமகளும், காலஞ்சென்ற பொன்னையாவின் மனைவியும், காலஞ்சென்ற நாகம்மா, செல்லம்மா, பூபதி ஆகியோரின் சகோதரியும், காலஞ்சென்ற கணேஷ் (இலங்கை வங்கி), மகேந்திரராஜா (மகேந்திரம்-மீசாலை), இலக்குமிதேவி (கனடா), புனிதமலர் (கொழும்பு), தெய்வேந்திரராஜா (காந்தி-கனடா), றஞ்சிதமலர் (கனடா) ஆகியோரின் தாயாரும், பத்மராணி, புவனேஸ்வரன், வேலாயுதபிள்ளை (சிவம்), இந்திரா காந்தி, சுகதாஸ் ஆகியோரின் மாமியாரும், சஜிதா, ஆதிபரன், யனார்த்தனன், கிருஷாந்தன், ஈசராஜ், பதஞ்சலிராஜ், கேசவன், வஜிதா, மகிஷா, கணன், சரண் ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 20.09.2015 (ஞாயிறு) அன்று கனடா டொரன்டோவில் நடைபெறும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

**தகவல்:-**

பொ.மகேந்திரராஜா (மகேந்திரம்)
தொலைபேசி:-0772557761
ஐயா கடை, மண்டுவில் அம்மன் வீதி, மீசாலை.
பேராலையான் மர அரிவு ஆலை (மிருசுவில்)
உரிமையாளர்,
வேலாயுதபிள்ளை (சிவம்) புனிதமலர்,கொழும்பு.
தொலைபேசி:-0777684008

(1762)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பல்கலைக்கழக மாணவர்களுக்கான தலைமைத்துவப் பயிற்சிகள் இரத்து

## அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவிப்பு

(கொழும்பு)

**பல்கலைக்கழக மாணவர்களுக்காக வழங்கப்பட்டு வந்த தலைமைத்துவ பயிற்சிகள் இரத்து செய்யப்படவுள்ளதாக பல்கலைக்கழக மற்றும் பெருந்தெருக்கள் அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.**



இலங்கையில் பல்கலைக்கழகங்களுக்கு தெரிவாகும் மாணவர்களுக்கு கடந்த காலங்களில் இராணுவ முகாம்களில் தலைமைத்துவ பயிற்சிகள் வழங்கப்பட்டு வந்தன.

இதனை உயர்கல்வித் துறை முன்னாள் அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க அறிமுகப்படுத்தினார்.

இதன்போது சில மாணவர்கள் உயிரிழந்த சம்பங்களும் இடம்பெற்றன.

இந்த நிலையில் இதற்கு செலவழிக்கும் காலத்தை, சர்வதேச மொழிகளை கற்பதற்கு செலவழிக்கலாம் என்று கண்டியில் வைத்து அமைச்சர் தெரிவித்துள்ளார். (இ-7)

## வடக்கில் வருமான மேற்பார்வையாளர் 50 பேருக்கு முதற்கட்டமாக நியமனம்

வடக்கு மாகாணத்துக்குரிய வருமான மேற்பார்வையாளர் பதவிக்கு முதற்கட்டமாக 50 பேருக்கு நியமனங்கள் வழங்கப்படவுள்ளதாக வடக்கு மாகாண பிரதம செயலாளர் அ.பத்திநாதன் தெரிவித்துள்ளார்.

வட மாகாண உள்ளூராட்சி அமைச்சின் கீழ் உள்ள வருமான மேற்பார்வையாளர் பதவிக்கு வடக்கு மாகாணத்தில் இருந்து 82 பேர் பரீட்சை மூலம் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களில் முதற்கட்டமாக 50 பேருக்கு எதிர்வரும் செவ்வாய்க்கிழமை 12.30 மணிக்கு வட மாகாண முதலமைச்சரால் அவரது அலுவலகத்தில் வைத்து நியமனங்கள் வழங்கப்படவுள்ளன.

இந்த நியமனங்களுக்குரிய கடிதங்கள் உரியவர்களுக்கு தபால் மூலம் அனுப்பிவைக்கப்பட்டு ள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)

## குழந்தையின் சடலம் மீட்பு

கம்பஹா, கொட்டதெனிய பிரதேசத்தில் நேற்று முன்தினம் காலை காணாமற் போயிருந்த குழந்தை நேறறு சடலமாக மீட்கப்பட்டுள்ளது.

கொட்டதெனிய பிரதேசத்தில் பெற்றோருடன் வீட்டில் தூங்கிக் கொண்டிருந்த நான்கரை வயதுக் குழந்தையொன்று காணாமற் போயிருப்பதாக நேற்று முன்தினம் வெளிவந்த தகவல் இலங்கை முழுவதும் பரபரப்பை ஏற்படுத்தியிருந்தது. இது தொடர்பான தகவல் வெளியானவுடன் சமூக ஆர்வலர்கள் மற்றும் சிவில் அமைப்புகள் எனபனவும் அரசியல்வாதிகள் மற்றும் பொலிஸாரிடம் சம்பவம் தொடர்பில் துரித விசாரணைகளைமுன்னெடுக்குமாறு அழுத்தம் கொடுத்திருந்தனர்.

இதனையடுத்து பல்வேறு தரப்பினரின் அழுத்தங்களின மத்தியில் நேற்று முன்தினம் மாலை தொடக்கம் காணாமற போன குழந்தையைக் கண்டு பிடிக்க விசேட பொலிஸ் குழுவொன்று களத்தில் இறக்கப்பட்டது.

இந்நிலையில் விசாரணைகளுக்காக களமிறக்கப்பட்ட விசேட பொலிஸ் குழு, காணாமற் போன குழந்தையின் சடலத்தை நேற்று கண்டுபிடித்துள்ளதாக அறிவித்துள்ளனர.

காணமற்போன குழந்தையின் வீட்டுக்கு அருகாமையில் இருக்கும் வயற்பிரதேசம் ஒன்றில் இருந்து குழந்தையின் சடலம் மீட்கப்பட்டுள்ளதாக அறியக் கிடைத்துள்ளது. (இ-7)

## 30 இலட்சம் பெறுமதியான தங்கக் கட்டிகள் பறிமுதல்

(கொழும்பு)

சட்டவிரோதமாக சுமார் 30 இலட்சம் ரூபாய் பெறுமதியான தங்கக் கட்டிகள் 6ஜ வெளிநாட்டுக்கு எடுத்துச் செல்ல முயற்சித்த நபர் ஒருவரை கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வைத்து கைது செய்துள்ளதாக சுங்கத் திணைக்களம் தெரிவித்தது.

கொழும்பு மட்டக்குளியை சேர்ந்த 51 வயதான சந்தேக நபர் 122 என்ற விமானத்தில் சென்னையை நோக்கி நேற்று முற்பகல் 10.50 புறப் பட்டுச் செல்லவிருந்ததாக விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.

குறித்த சந்தேகநபர், நேற்று முன்தினம் சனிக்கிழமை கைதுசெய்யப்பட்டதுடன் மேலதிக வீசாரணைகளை சுங்கத் திணைக்கள அதிகாரிகள் மேற்கொண்டுள்ளனர். (இ-7)

## யானைத்தந்தம் கடத்திய நால்வருக்கு விளக்கமறியல்

அனுமதிப்பத்திரமின்றி யானைத்தந்தங்களை திருகோணமலைக்குக கொண்டு சென்றதாகக் கூறப்படும் நான்கு பேர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப் பட்டுள்ளதாக புல்மோட்டை பொலிஸார் தெரிவித்தனர்.

முல்லைத்தீவிலிருந்து இரண்டு யானைத்தந்தங்களை கொண்டு வந்த வேளையில்இவர்கள் பொலிஸரால்கைது செய்யப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

## தொழுநோயாளர்கள் அதிகமாகவுள்ள நாடுகளுக்குள் இலங்கை உள்ளடக்கம்

தொழுநோயாளர்கள் அதிகமாக உள்ள முதல் ஆறு நாடுகளில் இலங்கையும் ஒன்றாகும்என உலக சுகாதார அமைப்பு குறிப்பிட்டுள்ளது.

இலங்கை, நேபாளம், பங்களாதேஷ், இந்தோனேஷியா மற்றும் மியன்மார் ஆகிய நாடுகள் தொழு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துச் செல்லும் நாடுகள் என சுகாதார அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

இந்தியாவில் மட்டும் ஒரு இலட்சத்து 26 ஆயிரம் தொழுநோயாளிகள் இருப்பதாக குறிப்பிடப்படுகின்றது.

ஏனைய ஆறு நாடுகளில் ஆண்டு தோறும் ஆயிரத்திற்கும் மேற்பட்ட தொழுநோயாளர்கள் பதிவாவதாக உலக சுகாதார அமைப்பின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

## மகிந்தவின் புதிய திட்டம் சு.க.பிளவடைவது உறுதி

ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியை மேலும் வலுவிழக்க செய்வதற்காக மகிந்த ராஜபக்ஷ, விமல் வீரவன்ச, தினேஷ் குணவர்தன, உதய கம்மன்பில, வாசுதேவ நாணயக்கார ஆகியோரின் பங்களிப்புடன் புதிய திட்டமொன்றை ஆரம்பித்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

இந்த திட்டத்திற்கமைய ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியில் தேசிய அரசாங்கத்திற்கு எதிரான உறுப்பினர்கள் முதலில் நாடாளுமன்றில் எதிர்க்கட்சியில் ஆசனம் பெற்றுக்கொள்ளவுள்ளனர்.


அதன் பின்னர் அவர்கள் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியில் இருந்து சுயாதீனமாக பிறிதொரு முன்னணியில் செயற்பட ஆயத்தமாகின்றனர் என தெரியவந்துள்ளது.

இதுவரையில் தேசிய அரசாங்கத்திற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் 30 பேர் எதிர்க்கட்சியில் ஆசனம் பெற்றுக்கொள்ளவுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

அவர்களின் கையொப்பத்துடனான கடிதத்தை இம்மாதம் 22ஆம் திகதிக்கு முன்னர் கட்சி தலைவர் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் ஒப்படைத்து எதிர்க்கட்சியில் ஆசனம் பெற்றுக்கொள்ளவுள்ளனர்.

அந்தக் குழுவுடன் முன்னணியின் பங்குதாரரான மகிந்த ராஜபக்ஷ தரப்பினை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற குழு அதனுடன் இணையவுள்ளதாக தெரியவந்துள்ளது. (இ-7)

## சர்வதேச விருதை வெற்றி கொண்ட இலங்கை பெண் பொலிஸ் அதிகாரி



(கொழும்பு)

சர்வதேச மகளிர் பொலிஸ் அமைப்பினால் வழங்கப்படும் **International Recognition & Scholarship** என்ற விருதினை இலங்கை பொலிஸ் திணைக்களத்தின் மகளிர் உதவி பொலிஸ் அதிகாரி திருமதி பெரிய பெரும வெற்றி பெற்றுள்ளார்.

இந்த விருதினை வெற்றி பெறுவதற்காக பல நாடுகளைச் சேர்ந்தவர்கள் போட்டியிட்டு தோல்வியடைந்துள்ளனர்.

இவ்வாறானதொரு விருதினை இதற்கு முன்னர் எந்த ஒரு மகளிர் பொலிஸ் அதிகாரியும் பெற்றுக் கொண்டதில்லை. அத்துடன் இந்த விருது இலங்கை பொலிஸ் திணைக்களத்திற்கு மிக சிறந்த அங்கீகாரமாகும்.

விருது வழங்கும் விழா ஐக்கிய இராஜ்ஜியத்தில் வெல்ஸ் காடிப் என்ற இடத்தில் இடம்பெற்றுள்ளது.

சர்வதேச மகளிர் பெண் பொலிஸ் அமைப்பின் தலைவரினால் மகளிர் உதவி பொலிஸ் அதிகாரி திருமதி பெரியபெருமவிடம் குறித்த விருது வழங்கப்பட்டுள்ளது. (இ-7)

## நுளம்பு பெருகும் அபாயமுள்ள பகுதிகளுக்கு சிவப்பு அறிவித்தல் வழங்கும் புதிய திட்டம்

டெங்கு நுளம்புகள் பெருகும் அபாயமுள்ள பகுதிகளுக்கு சிவப்பு அறிவித்தல் வழங்கும் புதிய திட்டமொன்றை ஆரம்பித்துள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள டெங்கு ஒழிப்பு வாரத்தை முன்னிட்டு இந்த திட்டம் ஆரம்பிக்கப் பட்டுள்ளதாக அமைச்சின் டெங்கு ஒழிப்புப் பிரிவின் பணிப்பாளர் விசேட வைத்தியர் ஹசித திசேரா தெரிவித்தார்.

அதன்படி டெங்கு நுளம்புகள் பெருகும் அபாயமுள்ள 7500 பகுதிகளுக்கு சிவப்பு அறிவித்தல் வழங்கப்பட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார்.

இவ்வாறு இனங்காணப்பட்ட பகுதிகளை சுத்தப்படுத்துவதற்கான காலஅவகாசம் வழங்கப்பட்டுள்ளதாகவும் சுகாதார அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

கடந்த 10 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட தேசிய டெங்கு ஒழிப்பு வாரத்தின் இதுவரையான காலப்பகுதியில் 1700 பேருக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

அத்துடன் நுளம்புகள் பரவக்கூடிய வகையிலான 52,000 இடங்கள் இனங்காணப்பட்டுள்ளதாகவும், 6200 பகுதிகளில் நுளம்புக் குடம்பிகள் காணப்படுகின்றமை இனங்காணப்பட்டுள்ளதாகவும் சுகாதார அமைச்சின் டெங்குஒழிப்புப் பிரிவின் பணிப்பாளர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

## இளைஞர்கள் கைது

நெல்லியடி வதிரி சந்தியில் பாடசாலை மாணவிகளுடன் தகாத முறையில் நடக்க முயன்ற இரண்டு இளைஞர்கள் நெல்லியடி பொலிஸாரினால் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட இளைஞர்கள் இருவரும் பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்ட போது அவர்களை நாளை 15 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிபதி மா. கணேசராஜா உத்தரவிட்டுள்ளார். (இ-3-60)

## பொலிஸாரிடம் மாட்டிய வங்கிக் கொள்ளையன்

வங்கியொன்றின் பாதுகாப்புப் பெட்டகத்தை உடைத்து பணத்தைத் திருட முயன்ற நபரொருவரை வங்கிக்குள் வைத்தே பொலிஸார் மடக்கிப் பிடித்த சம்பவம் ஒன்று நேற்று முன்தினம் நடைபெற்றுள்ளது.

களுத்துறை மாவட்டத்தில் இங்கிரிய பிரதேசத்தில் அமைந்துள்ள மக்கள் வங்கிக் கிளையிலேயே இந்தக் கொள்ளை முயற்சி சம்பவம் இடம்பெற்றுள்ளது.

வங்கியின் உள்ளே புகுந்த திருடன் பாதுகாப்புப் பெட்டகம் இருந்த அறையின் கதவில் ஓட்டை போட்டு உள்ளே நுழையும்போது பாதுகாப்பு அலாரம் செயற்பட்டு, இங்கிரிய பொலிஸில் அபாய எச்சரிக்கை மணியை ஒலித்துள்ளது.

இதனையடுத்து விரைந்து செயற்பட்ட பொலிஸார் வங்கியை விட்டு திருடன் வெளியேற முன்பதாகவே அவனை மடக்கிப்பிடித்துள்ளனர். (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடன்பொறியில் சிக்கவைக்கும் திட்டமிடாத செலவுகள்

முன்பெல்லாம் கை நிறைய பணம் கொண்டு சென்றோம், பை நிறைய பொருட்களை வாங்கி வந்தோம் என்று பெரியவர்கள் சொல்லக் கேட்டிருப்போம். இது சும்மா பேச்சு வழக்குக்காக சொல்லப்பட்டதல்ல, அதுதான் உண்மை. ஆனால் இப்போதோ பை நிறைய பணம் கொண்டு சென்றாலும், கையளவு பொருட்களைத்தான் வாங்க முடிகிறது. எந்தவிதமான திட்டமும் இல்லாமல் செலவிட நேரும்போது உடனே பர்சில் கை வைத்து பார்க்க வேண்டியிருக்கிறது. வரவுக்கு மீறி செலவு செய்வது நம்மை கடன்பொறியில் சிக்க வைக்கும் என்பதுதான் அனுபவ உண்மை.

இந்த மாதம் வீட்டுச் செலவுக்கு ஒதுக்கிய தொகையைப் போல அடுத்த மாதத்துக்கு ஒதுக்க முடியவில்லை. அடுத்த மாதத்தில் 1,000 ரூபாயாவது கூடுதலாக ஒதுக்கினால்தான் விலைவாசி ஏற்றத்தைச் சமாளிக்க முடியும் என்பதாக இருக்கிறது.

ஆண்டுக்கு ஒருமுறைதான் வருமானம் அதிகரிக்கிறது. ஆனால், பொருள்களின் விலையோ நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே இருக்கிறது. இந்த நிலைமையை சமாளிக்க ஒவ்வொருவரும் ஒரு வழிமுறைகளை கடைப்பிடிக்கின்றனர். சிலர் செலவுகளை கட்டுப்படுத்துகின்றனர், சிலர் சேமிப்பை குறைக்கின்றனர். சிலரோ செலவுகளைக் குறைக்காமல் கூடுதல் நேரம் உழைத்து வருமானத்தை அதிகரித்துக் கொள்கின்றனர்.

அதாவது நிலவுகின்ற பொருளாதார நெருக்கடிகளை நம்மால் தவிர்க்க முடியாது. என்னதான் கட்டுப்படுத்தினாலும் விலைவாசியை இனிமேல் குறைக்கவும் முடியாது. அதனால் விலை ஏற்றத்திற்கு பழகிக்கொள்வதும், அதை சமாளிப்பதற்கான வழி தேடுவதுமே புத்திசாலித்தனமாக இருக்க முடியும். ஆனால் இதற்கு தனியாக திட்டமிட வேண்டாம். கொஞ்சம் முயற்சி இருந்தால் மட்டும்போதும். இதற்கேற்ப வாழ்க்கை தரத்தை திட்டமிட்டுக் கொள்வதும், செலவுகளை அமைத்துக் கொள்ளவும் வேண்டும்.

தவிர்க்க முடியாத அத்தியாவசிய செலவுகளைக் குறைக்க வேண்டிய அவசியம் இல்லை என்றாலும், நம்மையும் அறியாமல் அல்லது திட்டமில்லாமல் செய்கின்ற செலவுகளை தவிர்க்கக் கற்றுக்கொள்ள வேண்டும். மருத்துவம், கல்வி, சேமிப்பு போன்றவற்றில் சமரசமில்லாமல், பெட்ரோல், ஹோட்டல் செலவு போன்ற விடயங்களில் கறாராக இருந்தால் நமது செலவுகளை கட்டுப்பாடாக வைத்திருக்க முடியும்.

**திட்டமிடுவது**

கட்டுப்பாடாக செலவு செய்வது என்கிற விடயத்தில் பலருக்கும் அலட்சியம்தான். முக்கியமாக பலருக்கு வரவு செலவு குறித்து தெளிவான திட்டமே கிடையாது. குடும்ப வருமானத்தில் அவசர செலவுகள், உடனடி தேவைக்குரிய செலவுகள், எதிர்கால திட்டத்திற்குரிய செலவுகள், கல்வி, மருத்துவ செலவுகள் போன்றவற்றை கணக்கிட்டு தெளிவாக ஒதுக்க வேண்டும். மாத சம்பளத்தை மட்டும் கணக்கிலெடுப்பார்கள். பிற சொத்துகள் மூலம் சில்லறையாக வரும் வருமானங்களை கணக்கில் சேர்க்காமல் செலவு செய்து செய்து கொண்டிருப்பார்கள். இதைத் தவிர்க்க வேண்டும்.

**சேமிப்பு**

எந்த நெருக்கடியிலும் சேமிப்பை விட்டுவிடக்கூடாது. அவசரத்துக்கு இதுதான் உதவும். பத்து வருடத்துக்கு முன்பு சேமிக்கத் தொடங்கியிருந்தால் இன்று அது பெரும் தொகை. இது அவசர காலத்துக்கு மட்டுமல்ல, எதிர்கால பணவீக்கத்துக்கு ஏற்ப உங்களது செலவுகளை சமாளிப்பதற்கும் உதவும்.

**கடன்**

நமது வருமானத்தை தாண்டி செலவு செய்யாமல் பார்த்துக் கொள்வது முக்கியம். மேலதிகமாக செலவு செய்கிறோம் என்றால் கடனுக்கு வழி செய்கிறோம் என்று அர்த்தம். கிடைத்தாலும் நமது வருமானத்தையும் தாண்டி வாங்குவதை தவிர்க்கலாம். கடனே வாங்கக் கூடாது என்று முடிவெடுங்கள்.

**கிரெடிட் கார்ட்டு**

அவசரத்துக்கு என்று கிரெடிட் கார்ட்டு பயன்படுத்தத் தொடங்கி இப்போது எதற்கெடுத்தாலும் கிரெடிட் கார்ட்டு நீட்டுவதை வழக்கமாக வைத்திருப்பது செலவுகளை அதிகரிக்கவே செய்யும். ஒரு வருடத்தின் கிரெடிட் கார்ட்டு பயன்பாட்டை கணக்கிலெடுத்து அதற்கு எவ்வளவு வட்டி கட்டியிருக்கிறோம் என்பதைப் பாருங்கள். கிரெடிட் கார்ட்டு கையிலிருப்பது அவசியம் இல்லாத பொருட்களையும் வாங்கத் தூண்டும் என்பதும் ஞாபகத்தில் இருக்கட்டும்.

**வாகனப் பயன்பாடு**

தனிநபர் செலவில் கணிசமான தொகையை சாப்பிடுவது வாகனங்கள்தான். எரிபொருள், பராமரிப்பு என மாதம் ஒரு தொகை வைக்க வேண்டும். அக்கம் பக்கத்து தெருவுக்கு செல்ல வேண்டும் என்றாலும் வாகனத்துக்கு பழகி வருகிறோம். பொதுப் போக்குவரத்துக்கு பழகுவதும், நமது சொந்த வாகனங்களை தேவைக்கு ஏற்ப பயன்படுத்துவதற்கும் பழக வேண்டும்.

**ஷொப்பிங்**

வீட்டுக்குத் தேவையான பொருட்களை சில்லறையாக வாங்காமல் மொத்தமாக வாங்குவது நல்லது. அதுபோல எந்தப்பொருளை எவ்வளவு வாங்க வேண்டும் என்பதிலும் தெளிவு வேண்டும். அடுத்த மாதம்தான் ஒரு பொருளுக்கு பயன் இருக்கிறது என்றால் அதை இப்போதே வாங்கி இருப்பு வைத்துக் கொள்ளக்கூடாது.

**தள்ளுபடி**

ஷொப்பிங் சலுகைகளை தாராளமாகப் பயன்படுத்தலாம். ஆனால் தள்ளுபடி பயனுள்ளதாக இருக்க வேண்டும். சலுகை விலையில் கிடைக்கிறது என்பதற்காக பல பொருட்களையும் வாங்கிக் குவிப்பதை தவிர்க்க வேண்டும். சில பொருட்களை 3 வாங்கினால் 1 இலவசம் கொடுப்பார்கள். நமக்கு 2 பொருள் இருந்தாலே அதிகம் என்கிற பட்சத்தில் 2 வாங்கினால் மட்டும் போதும். ஷொப்பிங் நேரத்தில் அந்த நேர முடிவுகளில் அதிக கவனமாக இருந்தால் திட்டமில்லாச் செலவுகளைத் தவிர்க்கலாம்.

**பொழுதுபோக்கு**

நகரத்தில் வசிக்கும் மக்களுக்கு வாரந்தோறும் ஏதேனும் ஒரு இடத்துக்கு குடும்பத்துடன் வெளியே செல்லும் கலாசாரம் தவிர்க்க முடியாத அம்சமாக மாறி வருகிறது. இதைத் தவிர்க்க முடியாது என்றாலும், அடிக்கடி செல்வதை குறைத்துக் கொள்ளலாம். கணவன், மனைவி, இரண்டு குழந்தைகள் கொண்ட குடும்பம் ஒரு முறை ஹோட்டல் சென்றால் குறைந்தபட்சம் 1,000 ரூபாயாவது செலவாகிறது.

**மின்சாரம்**

மின்சாரத்தை செலவு செய்வதிலும் நம்மிடம் அலட்சியம் உள்ளது. இதன் மூலமும் செலவுகள் அதிகரிக்கிறது. குறிப்பாகக் குறைந்த மின்சாரத்தை எடுத்துக்கொள்ளும் மின் விளக்குகளை பயன்படுத்தினால் மின்சார செலவுகளை கட்டுப்படுத்தலாம். அவசியம் இருந்தால் மட்டுமே ஏசி பயன்படுத்த வேண்டும். தண்ணீரை சிக்கனமாக பயன்படுத்தினால் மோட்டார் இயக்குவதற்கான மின்சாரம் சிக்கனமாகும் என்கிற கண்ணோட்டத்திலும் யோசிக்க வேண்டும்.

**செல்போன்**

பண்டிகை நாட்களில் சகட்டு மேனிக்கு வாழ்த்து குறுஞ் செய்திகளை அனுப்புவார்கள். வழக்கத்தைவிட அதிகக் கட்டணம் என்றாலும் தெரிந்தே செய்யும் இந்த பழக்கம் தவிர்க்க வேண்டியதில் முக்கியம். எந்த வகையில் செலவு செய்தாலும் நமது தேவையிலிருந்தே எல்லாவற்றையும் அணுகு வேண்டும். இதனால் திட்டமில்லாத செலவுகளை தவிர்க்க முடியும்.

ஒவ்வொரு செலவையும் நமது தேவையை ஒட்டியே இருப்பதுபோல திட்டமிடுங்கள். திட்டமில்லாத செலவுகளை தவிர்ப்பதற்கு அதுவே சிறந்த வழி.?





## ஒரு நாள் நட்டம்

பங்குச் சந்தை ஒரு சூதாட்டம் என அதைப் பற்றி முழுவதும் தெரியாதவர்கள் கூறுகின்றனர். ஆனால் இதில் காணப்படும் சீரற்ற தன்மை, உள்நாட்டு பொருளாதார சூழல் மட்டுமின்றி, பிற நாடுகளில் ஏற்படும் பொருளாதார ஏற்றத்தாழ்வு காரணமாகவும் பெரும் சரிவை ஏற்படுத்தி உலகளவில் பெரும பொருளாதார பாதிப்பை ஏற்படுத்துகிறது.

கடந்த ஒகஸ்ட் 24-ம் திகதி சர்வதேச பங்குச் சந்தைகளிலும் கடும் சரிவு ஏற்பட்டது. சிறு முதலீட்டாளர்கள் மட்டுமின்றி பெரும கோடீஸ்வரர்களும் நட்டத்தைச் சந்தித்தனர்.

$ இந்திய பங்குச் சந்தையில் அன் றைய ஒரு நாள் நஷ்டம் ரூ.7 லட்சம் கோடி.
$ நிறுவனர்கள் வசமிருந்த பங்குகளின மதிப்பு ரூ.4 லட்சம் கோடி சரிந்தது.
$ அந்நிய முதலீட்டு நிறுவனங்களுக்கு ஏற்பட்ட நஷ்டம் 1.5 லட்சம் கோடியாகும்.
$ இந்திய சில்லறை முதலீட்டாளர்களுக்கு ஏற்பட்ட நட்டம் ரூ.75 ஆயிரம் லட்சம்.
$ நிறுவன முதலீட்டு நிறுவனங்களுக்கு ஏற்பட்ட நஷ்டம் ரூ.1 லட்சம் கோடியாகும்.




## மாற்றத்தின் வழியே முன்னேற்றம்

இன்றைய நவீன உலகில், புதுமை என்பது அன்றாட வாழ்வில் நாம் எதிர்கொள்ளும் சாதாரண விடயமாகி விட்டது. புதிய யோசனைகளும், திட்டங்களுமே முன்னேற்றம் என்னும் வண்டியின் சக்கரங்கள் என்கிறார் "ஐடியாஷிப்" என்ற இந்த புத்தகத்தின் ஆசிரியர் "ஜாக் ஃ போஸ்டர்". மாறிவரும் காலத்திற்கேற்ற புதிய புதிய திட்டங்களும், மாற்றங்களுமே பொருளாதாரத்தை வழிநடத்தவும், தொழில்களை மேம்படுத்தவும் மற்றும் வேலைவாய்ப்புகளை உருவாக்கவும் அடித்தளமாக அமைகின்றன. அப்படிப்பட்ட புதிய சிந்தனைகள் நம் மனதிலும், நம்மைச் சுற்றியுள்ளவர்களின் மனதிலும் ஏற்படுவதற்கான சாத்தியக்கூறுகள் மற்றும் அதற்கேற்ற சூழ்நிலைகள் பற்றிய வழிமுறைகளைச் சொல்கின்றது இந்த புத்தகம்.

**சக பணியாளர்கள்!?**

நீங்கள் ஒரு நிறுவனத்தில் பணியாற்றுகிறீர்கள். உங்களுடன் பலரும் பல்வேறு நிலைகளில் பணியாற்றுகிறார்கள். அது உங்களுடைய மேலதிகாரியோ அல்லது உங்களுடைய உதவியாளர்களோ, யாராக இருந்தாலும் அவர்களுக்கான மதிப்பையும், அங்கீகாரத்தையும் கொடுக்க வேண்டியது மிகவும் அவசியம். ஒன்றுபட்ட, மகிழ்ச்சியான சூழ்நிலையே புதிய எண்ணங்களை உருவாக்கும் என்பதை ஒருபோதும் மறந்து விடக்கூடாது. ஆக, மற்றவர்களை நம்மோடு சேர்ந்த மனிதர்களாக மட்டுமே பார்க்க வேண்டுமே தவிர ஒருபோதும் தொழிலாளியாகவோ, உதவியாளராகவோ, பயிற்சியாளராகவோ, ஊழியராகவோ, தாழ்ந்தவராகவோ, உயர்ந்தவராகவோ பார்க்கக்கூடாது.

நீங்கள் எந்த கண்ணோட்டத்துடன் அவர்களை பார்க்கிறீர்கள் என்பதை பொறுத்தே உங்களுக்கான அவர்களின் செயல்பாடு அமையும் என்பதே உண்மை. அவர்களுடனான உங்களின்சரியான அணுகுமுறையே, உங்கள் மீதான அவர்களின நம்பிக்கை, உங்களுக்கான அவர்களின் உதவி, உங்களது [illegible] கொள்ளும் மனோபாவம் ஆகியவற்றைப் பெற்றுத தரும் என்பதில் எந்தவித சந்தேகமும் இல்லை. அவ்வளவு ஏன், உங்களது தவறுகளைக்கூட மறந்துவிடும் மன நிலையை பெற்றிருப்பார்கள்.

**நம்பிக்கையினை ஏற்படுத்துங்கள்!?**

வீடோ அல்லது அலுவலகமோ, நம்மீது மற்றவர்களுக்கு நம்பிக்கையை ஏற்படுத்திவிட்டால போதும். மற்றவையெல்லாம் தானாக, சரியாக நமக்கு வந்து சேர்ந்துவிடும். உங்களது சரியான அணுகு முறையால், மற்றவர்கள் உங்களை முழுமையாக நம்பும்போது, உங்களது அனைத்து செயல்பாடுகளுக்கும் ஆதரவளிக்க தொடங்கிவிடுவார்கள். அந்த செயல்பாடுகளில் அவர்களுக்கு விருபபம் இல்லாவிட்டாலும் கூட. அதேசமயம், உங்களது தவறான அணுகுமுறையால், மற்றவர்கள் உங்களை முழுமையாக நம்பத்யாராக இல்லாத போது, உங்களது செயல்பாடுகளுக்கு துணை நிற்க முன்வரமாட்டார்கள். அந்த செயல்பாடுகளில் அவர்களுக்கு விருப்பம் இருந்தாலும்கூட என்கிறார் ஆசிரியர்.

**பழியும் பாராட்டும்!?**

ஒரு குழுவிற்கான தலைமை பொறுப்பில் இருக்கிறீர்கள். இதில் பழியை மட்டும் உங்களிடம வைத்துக் கொண்டு, பாராட்டை உங்கள் குழுவினருக்கு அளித்துவிட வேண்டும் என்கிறார் ஆசிரியர். தலைமைப் பண்பிற்கான மிகச சிறந்த காரணியாகவே இது பார்க்கப் படுகின்றது. மேலும், இது உங்கள்மீதான மதிப்பை மட்டுமல்லாமல் உங்கள் குழுவினரின் செயல்பாட்டினையும் அதிகரிக்கும்.

**உங்கள் உதவி, உங்கள வெற்றி!?**

உங்கள் பணியாளர்களுக்கு நீங்கள் செய்யும் சிறு சிறு உதவிகளே, அவர்களின் செயல்பாட்டை விரைவாக்கி, பெரிய வெற்றியாக உங்களிடம் வந்து சேர்க்கிறது. உங்கள் பணியாளர்களின் தேவைகளைக் கண்டறிந்து, அவற்றை அவர்கள் பெறுவதற்கான உதவிகளை நேரடியாகவோ, மறைமுகமாகவோ செய்வது அவசியமான ஒன்று. இது குறுகிய காலத்தில் அவர்களுக்கான உதவி என்றாலும், நீண்ட கால நோக்கில் பார்க்கும்போது, நிறுவன வெற்றிக்கான செயல்பாடாகவே அமையும்.

**குறுக்கீடு செய்யாதீர்கள்!?**

ஒரு இடத்திற்கு செல்வதற்காக வாடகை கார் ஒன்றில் பயணம் செய்கிறீர்கள். நீங்கள் செல்ல வேண்டிய இடத்தை மட்டுமே ஓட்டுனரிடம் சொல்வீர்களே தவிர காரை எப்படி ஓட்ட வேணடும் என்று சொல்லமாட்டீர்கள் அல்லவா!. அது போலதான், பணியாளர்களுக்கான இலககினை மட்டும் அவர்களுக்கு கொடுங்கள், அவரகளது செயல்பாட்டு முறைகளில் குறுக்கீடு செய்யாதீர்கள், இலக்கிற்கான பாதையை அவர்களே தேர்ந்தெடுத்துக்கொள்ள உதவி செய்யுங்கள்.

பணியாளர்களோ அல்லது நம்மைச்சுற்றி உள்ள மற்றவர்களோ, யாராக இருந்தாலும் அவர்களுக்கான மதிப்பு, அங்கீகாரம், சுதந்திரம ஆகியவற்றை அளிக்கும்போது மட்டுமே, முன்னேற்றத்திற்கான பல புதிய சிந்தனைகளும், திட்டங்களும் தோன்றிக்கொண்டே இருக்கும்.

## பங்குச் சந்தை விபரம்

CSE COLOMBO STOCK EXCHANGE

(வார இறுதியில்)

| துறை | கடந்த வாரம் | இந்த வாரம் |
|---|---|---|
| அனைத்துப் பங்கு விலைச்சுட்டி | 7,215.11 | 7,153.49 ⇩ |
| எஸ் & பி 20 சுட்டி | 3,957.83 | 3,914.27 ⇩ |

**விலை அசைவுகளின் அடிப்படையில்** | புரள்வு (ரூபா.மில்.) 2,740.474

***உயர்வடைந்த பங்குகள்(ரூ.):*** புளூ டைமன்ட்ஸ்(X)(0.60),பிசி பார்மா(0.90), சிஐஎப்எல்(0.90),பலாங்கொட(22.40),நமுனுகுல(73.50).

***சரிவைக் கண்டிருந்த பங்குகள்(ரூ.):*** பிசி ஹவுஸ்(0.10),ஜே.கே.எச்.(W)(17.20), களனி வேலி(60.50),கெல்சே(50.40),எல்.எம்.எப்(150.00).

**மேலதிக தகவல்கள்: www.cse.lk**


## வெளிநாட்டு நாணயமாற்று வீதம்

(வார இறுதியில்)

| நாணயம் | கொ/வு விலை ரூபா. | வி/னை விலை ரூபா. |
|---|---|---|
| ஐக்கிய அமெரிக்க டொலர் | 136.32 | 141.23 |
| பவுண்ட்(ஐக்கிய இராச்சியம்) | 209.70 | 218.71 |
| யூரோ (ஐரோ.ஒன்றியம்) | 152.81 | 160.07 |
| சுவிஸ் பிராங் | 139.00 | 145.89 |
| கனேடிய டொலர் | 102.37 | 107.42 |
| அவுஸ்திரேலிய டொலர் | 95.44 | 100.68 |
| சிங்கப்பூர் டொலர் | 96.20 | 100.65 |
| ஜப்பான் யென் | 1.12 | 1.17 |
| இந்திய ரூபாய் | சுட்டி விலை 2.09 | |
| ஐக்.அரபு இராச்சிய டிராம் | சுட்டி விலை 37.83 | |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





வல்லிபுர ஆழ்வார் கோவில் வருடாந்த திருவிழா நேற்று முன்தினம் கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. பெருந்திரளான பக்தர்கள் இதில் கலந்து கொண்டனர். (படங்கள்: தும்பளை, கரணவாய் செய்தியாளர்கள்)

# சிறந்த சுற்றுலாத்தளம் இலங்கை பிரித்தானிய பத்திரிகை புகழாரம்

இந்த ஆண்டுக்கான சிறந்த சுற்றுலாத்தளமாக இலங்கை காணப்படுவதாக பிரித்தானிய பத்திரிகையொன்று புகழாரம் சூட்டியுள்ளது.

பிரித்தானியாவில் அதிகூடிய விற்பனையைக் கொண்ட சண்டே டைம்ஸ் என்ற பத்தி ரிகையின் ஆசிரியர் டிம் சிப் மன் எழுதியுள்ள கட்டுரையொன்றில் இலங்கை குறித்து மேற்கண்டவாறு புகழாரத்தைச் சூட்டியுள்ளார்.

இணையத்தள சுற்றுலாத தேடல்கள் மற்றும் விமான முன்பதிவுகள் என்பவற்றின் மூலம் இந்த ஆண்டில் சுற்றுலாப் பயணிகளில் பெரும்பாலானவர்கள் இலங்கையை தமது சுற்றுலாத்தளமாக தெரிவு செய்வதில் காட்டும் ஆர்வத்தை கொண்டு இந்த புகழாரம் சூட்டப்பட்டுள்ளது. இதுகுறித்த தகவல்களை வெளியிட்டுள்ள இலங்கை சுற்றுலா அபிவிருத்தி சபையின் தலைவர் ரொஹான்த அத்துகோரள, இலங்கைத் தேயிலையின் சுவை காரணமாகவே பெரும்பாலானவர்கள் இலங்கைக்கான சுற்றுலாவை தெரிவு செய்வதாகத் தெரிவித்துள்ளார்.

அதனை மதிக்கும் வகை யல்இலங்கைத்தேயிலையின தரத்தைப் பாதுகாத்துக்கொள் வதற்கான செயற்பாடுகளை முன்னெடுக்கவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

மேலும்பிரித்தானிய பிரஜை யான ஜேம்ஸ் டெய்லர் இலங் கையில் முதன்முதலில் தேயிலை பயிரிட்ட லூல்கந்துறை பிர தேசம் மற்றும் லீட்டன் தேயிலை பயிரிட்ட தம்பதென்ன பகுதி களை யுனெஸ்கோவின் பாரம் பரியப் பெருமைக்குரிய இடங்களாக அறிவிக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித் துள்ளார். (இ-7)

**டயானா பிளாஸ்ரிக் மீள் சுழற்சி**

சகல விதமான உடைந்த பிளாஸ்ரிக் போன்றவை உத்தரவாதத்துடன் ஒட்டிக் கொடுக்கப்படும்.

☀ **பழைய பிளாஸ்ரிக் விலைக்கு வாங்கப்படும்.**

**108, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.**
**T.P 077 5925088, 021 222 8680**

(C-1812)

# மலசலகூட வசதி இன்மையால் பயணிகளுக்கு பெரும் சிரமம்

(கரணவாய்)

நெல்லியடி நகரில் புதிதாக அமைக்கப்பட்ட பேருந்து நிலையத்தில் மலசலகூட வசதி இல்லாததால் பயணிகள் பெரிதும் சிரமங்களை எதிர்கொள்ள நேரிடுவதாக கவலை தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன் புதிதாக அமைக்கப்பட்ட பேருந்து நிலையத்திற்கு மின் விளக்குகள் இல்லாததனால் இரவு வேளையில் பயணிகள் பேருந்து நிலையத்திற்கு வெளியே நிற்க வேண்டியுள்ளதாக விசனம் தெரிவிக்கப்படுகின்றது.

எனவே உள்ளூராட்சி வாரம் நெருங்குவதை முன்னிட்டு வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபையினர் இது விடயத்தில் கவனமெடுத்து ஆவன செய்யுமாறு பயணிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (இ-3-60)

**கல்யாண மாலை**

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம் பூரட்டாதி<br>கி.பா: 49 செவ் 2 இல் உயரம்: 5’6”<br>தகைமை/தொழில்: HNDM/ தனியார் தொழில்<br>தொ.இ: B/3962 | பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: அவிட்டம் 4<br>கி.பா: 20 1/4<br>தகைமை/தொழில்: O/L<br>தொ.இ: G/3987 |
| பிறப்பு: 1980 இந்து<br>நட்சத்திரம்: உத்தரம்<br>கி.பா: 7 3/4<br>உயரம்: 5’4"<br>தகைமை/தொழில்: MBBS வைத்தியர்<br>தொ.இ: B/3964 | பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: கார்த்திகை 2<br>கி.பா: 60 1/4 செவ் 8இல்<br>உயரம்: 5’4”<br>தகைமை/தொழில்: B.com<br>தொ.இ: G/3988 |
| பிறப்பு: 1975 இந்து<br>நட்சத்திரம்: பூரட்டாதி<br>கி.பா: 37 செவ் 1 இல்<br>உயரம்: 5’9"<br>தகைமை/தொழில்: A/L/ கிராம அலுவலர்<br>தொ.இ: B/3966 | பிறப்பு: 1975 இந்து<br>நட்சத்திரம்: புனர்புசம் 3<br>கி.பா: 30 1/4<br>உயரம்: 5’3”<br>தகைமை/தொழில்:B.A M.A தொழில் வழிகாட்டல் உத்தியோகத்தர்<br>தொ.இ: G/3990 |
| பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: திருவாதிரை<br>கி.பா: 47 செவ் 2இல்<br>உயரம்: 5’9"<br>தகைமை/தொழில்: BSC பொறியியளாளர் (லண்டன்)<br>தொ.இ: B/3968 | பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: அச்சுவினி 1<br>கி.பா: 19 1/4 செவ் 1 இல்<br>உயரம்: தகைமை/தொழில்: மருத்துவபீட மாணவி இறுதியாண்டு<br>எதிர்பார்ப்பு: சைவபோசனம் மிக முக்கியம்<br>தொ.இ: G/3991 |

**கல்யாண மாலை**
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
( ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம் )

**30 ஆண்டுகால தனித்துவமிக்க பயிற்சி நிலையம்**
**1985ம் ஆண்டிலிருந்து இன்று வரை....**



யாழ். **கலாலயா** பயிற்சியகம்
**விக்ரோறியா வீதி, யாழ்ப்பாணம்.**
**(யாழ். போதனா வைத்தியசாலை பின் புற வீதி)**

**மகளிருக்கான 3 மாத பயன்மிகு பயிற்சிகள் ஆரம்பமாகின்றன!**

**A/L பெறுபேற்றை எதிர்பார்த்திருப்பவர்களுக்கு,**
**வெளிநாடு செல்லவிருப்பவர்களுக்கு,**
**சொந்தமாக தொழில் செய்ய விரும்புவர்களுக்கு,**
**மற்றும் ஆர்வமுள்ள மகளிருக்கானது.**

✌ கேக் ஐசிங், உணவு தயாரித்தல்,
✌ Hair Dressing & Styling
(கூந்தல் வடிவமைப்புகளும் முடி சிராக்குதலும்)
✌ முக அழகுக் கலை (Facials)
✌ Pedicure, Manicure (கைகள்,கால்கள், விரல்கள், நகங்கள் அழகு படுத்துதல்)
✌ இந்து, கிறிஸ்தவ, இஸ்லாம் முறைகளில் மணப்பெண் அலங்காரம், வித்தியாசமான 7 முறைகளில் சேலை அணிதல்,



மேற்படி அனைத்துப் பயிற்சிகளின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.

✌ பிளவ்ஸ், சாறி பிளவ்ஸ், சுரிதார், தைக்கும் சான்றிதழ் அற்ற தையல் பயிற்சிகள். (கிழமை நாட்களில் மட்டும்)

சனி, ஞாயிறு பிரிவுகள் ஆரம்பம்: 20.09.2015 (ஞாயிறு)
கிழமைநாள் பிரிவுகள்: 23.09.2015 (புதன்)
மேலும் விபரங்களை நேரில் அறிந்து கொள்ளவும்
-இயக்குநர்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலக சிறுவர் தின நிகழ்வுகள் இம்முறை யாழ்.மாவட்டத்தில்

## இராஜாங்க அமைச்சர் விஜயகலா தெரிவிப்பு



**உலக சிறுவர் தின நிகழ்வுகள் இம்முறை யாழ். மாவட்டத்தில் நடத்தப்படவுள்ளதாக சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.**

சில மாதங்களுக்கு முன்னதாக யாழ்ப்பாணத்தில் சிறுவர் தின நிகழ்வுகளை நடத்த தீர்மானிக்கப்பட்டது. அதற்கான ஆயத்தப்பணிகள் 50 வீதம் பூர்த்தியாகியுள்ளன.

வித்தியா என்ற பாடசாலை மாணவியின் மரணம், வடக்கில் இடம்பெற்று வரும் அதிகளவான பாலியல் வன்கொடுமைச் சம்பவங்கள் போன்ற காரணிகளினால் பிரதேச சிறுவர், சிறுமியரை தெளிவுபடுத்த உலக சிறுவர் தின நிகழ்வுகளை ஓர் சந்தர்ப்பமாக பயன்படுத்திக்கொள்ள முடியும்.

சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சராக பதவிப் பிரமாணம் செய்து கொண்டதன் பின்னர் மேற்கொள்ளும் முதலாவது நிகழ்வாக உலக சிறுவர் தின நிகழ்வுகளை யாழ்ப்பாணத்தில் ஏற்பாடு செய்யும் பணி அமைந்துள்ளது என அவர் தெரிவித்தார்.

அத்துடன் இன்று காலை செத்திரிபாய பத்தரமுல்லையில் அமைந்துள்ள புதிய கட்டடத்தின் 3 ஆம் மாடியில் உத்தியோகபூர்வமாக தனது கடமைகளை பொறுப்பேற்கவுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (இ-9)

# அமெரிக்க மாணவர் குழு யாழ்ப்பாணத்திற்கு விஜயம்

(யாழ்ப்பாணம்)

பேராதனை பல்கலைக் கழகத்தில் கல்வி கற்கும் 9 பேர் கொண்ட அமெரிக்க மாணவர் குழுவினர் யாழ்.மாவட்டத்துக்கு 3 நாட்கள் கல்விச் சுற்றுலா ஒன்றினை மேற்கொண்டிருந்தனர்.

யாழ். மாவட்டத்திற்கு கடந்த வெள்ளிக்கிழமை வருகை தந்த இவர்கள் தமிழ் மக்களின் பாரம்பரிய கலை கலாசாரங்களை அறிந்து கொள்வதற்கும் அவர்களுடைய வாழ்வியலை நேரில் பார்வையிடுவதற்கும் இச் சுற்றுலாவை மேற்கொண்டுள்ளனர். இக் குழுவினர் வலி.வடக்கு மீள் குடியேற்றப் பகுதி, சபாபதிப் பிள்ளை நலன்புரி முகாம், சுற்றுலாத் தளங்கள், பாரம்பரிய சமயத் தலங்கள் என்பவற்றைப் பார்வையிட்டுச் சென்றுள்ளனர். (இ-9)

## கரவெட்டியில் நடமாடும் சேவை மூலம்

# 148 பேருக்கு காலம் கடந்த பிறப்பு,இறப்பு சான்றிதழ்கள்

கரவெட்டி பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட 148 பேருக்கு காலங்கடந்த பிறப்பு,இறப்பு சான்றிதழ்கள் நடமாடும் சேவை மூலம் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளன.

சட்ட உதவி ஆணைக்குழுவின் அனுசரணையுடன் கரவெட்டிப் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்டவர்களுக்கான நடமாடும் சேவை அண்மையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

கரவெட்டி பிரதேச செயலர் தலைமையில் நடைபெற்ற இந்த நடமாடும் சேவையில் 200 பேர் வரை பங்கு பற்றினர்.

இதில் 132 பேருக்கு காலம் கடந்த பிறப்பு, இறப்பு சான்றிதழ்களும் 16 பேருக்கு திருமண பதிவுச் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. (இ-3-60)

## கும்பாபிஷேகம்

நயினாதீவு 7ஆம் வட்டாரத்தில் அமைந்துள்ள அருள்மிகு ஸ்ரீ பால ஞான வைரவர் கோவில் மஹா கும்பாபிஷேகம் நாளை மறுதினம் 16ஆம் திகதி புதன்கிழமை நடைபெறவுள்ளது.

இன்று திங்கட்கிழமை அதிகாலை 5.30 மணிக்கு கர்மாரம்பம் நடைபெறும். அத்துடன் மாலை வேளை பூஜை வழிபாடுகள் நடைபெறும்.

நாளை செவ்வாய்க்கிழமை காலை விநாயகர் வழிபாட்டுடன் காலை 8 மணி முதல் மாலை 4 மணி வரை எண்ணெய்க்காப்பு சாத்துதல் இடம் பெறும்.

நாளை மறுதினம் புதன் கிழமை விநாயகர் வழிபாட்டுடன் முற்பகல் 9:10 மணி முதல் 10:20 மணிவரையுள்ள துலா லக்கின சுபமுகூர்த்த வேளையில் கும்பாபிஷேகம் நடைபெற்று மகேஸ்வர பூஜை இடம்பெறும். (இ-3)

# மின்சார வசதியின்மையால் படகை நிறுத்துவதில் சிக்கல்

(யாழ்ப்பாணம்)

அவசர சிகிச்சைகளுக்காக நோயாளிகளை அம்புலன்ஸ்படகில் கொண்டு வரும்போது இரவு நேரங்களில் வெளிச்சம் இல்லாது இருப்பதனால் அம்புலன்ஸ்படகை துறைமுகத்தில் உரிய இடத்தில் நிறுத்துவதற்கு சிரமங்களை எதிர்நோக்க வேண்டியுள்ளதாக ஊழியர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

நயினாதீவிலிருந்தோ அல்லது நெடுந்தீவிலிருந்தோ இரவு நேரங்களில் நோயாளிகளைக் கொண்டு வரும் போது இந்நிலைமை ஏற்படுகிறது. மின் வெளிச்சம் இல்லாத நேரங்களில் படகு இறங்குதுறைப் பகுதியில் அணைக்க முடியாது கஷ்டப்படுவதாகவும் சில நேரங்களில் ஆபத்தை எதிர்கொள்ள நேரிடுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இரவில் குறிப்பிட்ட நேரங்களில் மட்டும் படையினர் மின்சாரம் வழங்குகின்றனர்.

இதேவேளை புங்குடுதீவுக்கு மின்சாரம் வழங்கப்பட்டுள்ள போதும் குறிகாட்டுவான் இறங்குதுறைக்கு மின் இணைப்பு இது வரை வழங்கப்படவில்லை.

எனவே இது விடயத்தில் மின்சாரசபை கூடிய கவனம் செலுத்தி குறிகாட்டுவான் இறங்குதுறை வரை மின்சாரவசதி கிடைக்க ஆவன செய்யுமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (இ-3)

# பால்நிலை சமத்துவம் தொடர்பான பயிற்சிப்பட்டறை சர்வோதயத்தில்




(யாழ்ப்பாணம்)

கொழும்பைத் தலைமையகமாக கொண்டு இயங்கும் பெண்கள் நிலையத்தினால் பால்நிலை சமத்துவம் தொடர்பிலான பயிற்சிப்பட்டறை சர்வோதயம் அமைப்பின் யாழ்.மாவட்ட அலுவலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இப் பயிற்சிப்பட்டறையில் பால்நிலை சமத்துவம் தொடர்பில் தெளிவுபடுத்தப்பட்டது. இதன் பிரதான நோக்கமாக யுத்தத்தின் பின்னரான காலப்பகுதியில் பெண்களின் ஆற்றல், திறன் மற்றும் ஆளுமை என்பவற்றினை மேம்படுத்துவதும் ஆணாதிக்க சமூக கட்டமைப்பிற்கு ஏற்ப பெண்களை வலுப்படுத்துவது தொடர்பாக விளக்கமளிக்கப்பட்டது.

வடக்கு,கிழக்கு மாகாணங்களின் மட்டக்களப்பு, வவுனியா, முல்லைத்தீவு மற்றும் மன்னார் மாவட்டங்களிலும் இதுபோன்ற பயிற்சி பட்டறைகள் முன்னெடுக்கப்பட்டிருக்கின்றன.

இதேபோன்று சுதந்திர வர்த்தக வலய பகுதிகளான கட்டுநாயக்க, கொக்கல, வத்துப்பிட்டிய மற்றும் பியகம பகுதிகளில் பணியாற்றும் பெண்களை இலக்காகக்கொண்டும் பால் மற்றும் பால்நிலை சமத்துவம் தொடர்பிலான பயிற்சிப்பட்டறைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

இதேவேளை பாலியல் சுகாதாரம், தலைமைத்துவம், தொழிலாளர் உரிமை, ஆய்வுகள் தொடர்பிலும் பெண்கள் நிலையம் பயிற்சிகளை வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-9)

# பாலியல் துஷ்பிரயோக முயற்சி; இளைஞர்கள் இருவர் மறியலில்

(கரணவாய்)

வடமராட்சி இராஜகிராமத்தில் மனநிலை பாதிக்கப்பட்ட பெண் மீது பாலியல் துஷ்பிரயோகத்தில் ஈடுபட முயன்ற பொழுது அதனை தடுக்க முயன்ற பெண்ணின் தாயார் தாக்குதலுக்கு உள்ளாகி படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளார்.

கடந்த வாரம் இடம்பெற்ற மேற்படி சம்பவம் தொடர்பாக நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது.

சம்பவம் தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார் கடந்த வெள்ளிக்கிழமை சந்தேகத்தின் பேரில் இரண்டு இளைஞர்களைக் கைது செய்து பருத்தித்துறை நீதிமன்றில் ஆஜர் செய்தனர்.

சந்தேக நபர்களான இரண்டு இளைஞர்களையும் நாளை செவ்வாய்க்கிழமை வரை விளக்கமறியலில் வைக்குமாறு பருத்தித்துறை மாவட்ட நீதிபதி மா. கணேசராஜா உத்தரவிட்டுள்ளார். (இ-60)





## தெய்வீக இசையரங்கில் இன்று வில்லுப்பாட்டு

நல்லூர் துர்க்கா மணிமண்டபத்தில் இளங்கலைஞர் மன்றம் நடத்தும் தெய்வீக இசையரங்கில் இன்று மாலை 6.45 மணிக்கு யாழ்.யோகா அரங்கம் வழங்கும் யோகா ஆசன அசைவுகளும் தொடர்ந்து சிறுப்பிட்டி சத்தியதாஸ் வில்லிசைக் குழுவினர் வழங்கும் வள்ளி திருமணம் வில்லுப்பாட்டு இடம்பெறும். (இ-3-7)







இந்தியாவிலிருந்து வருகை தந்த பிரபல வீணை இசைக் கலைஞர் ஸ்ரீமதி ரேவதி கிருஷ்ணா குழுவினரின் வீணாகான பயிற்சிப் பட்டறை யாழ் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது. இதில் வடக்கு மாகாணத்தில் உள்ள பாடசாலை மாணவர்கள் கலந்து கொண்டனர். (படங்கள்:- பொ.சோபிகா)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தகவல் அறியும் உரிமைச்சட்டம் விரைவில் நடைமுறைக்கு வரும்

(கொழும்பு)

**தகவல் அறியும் உரிமைச் சட்டம் நாடாளுமன்ற ஒப்புதலுடன் விரைவில் நடைமுறைப் படுத்தப்படும் என்று ஊடக அமைச்சர் கயந்த கருணாதிலக தெரிவித்துள்ளார்.**

தகவல், ஊடகத்துறை அமைச்சர் கயந்த கருணாதிலக நேற்று முன்தினம் கண்டிக்கு விஜயம் செய்து அஸ்கிரிய மற்றும் மல்வத்து பீட மகாநாயக்கர்களைச் சந்தித்து ஆசி பெற்றுக் கொண்டார்.

அதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அமைச்சர்,

கடந்த 100 நாட்கள் அரசாங்கத்தில் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தை நிறை வேற்றிக் கொள்ள முயற்சித்தும், பல்வேறு காரணிகளால் அந்த விடயம் தடைப்பட்டுப் போனது.

தற்போது தேசிய அரசாங்கம் அமைக்கப்பட்டுள்ள நிலையில் அதற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. மிக விரைவில் நாடாளுமன்றத்தின் ஒப்புதல் பெற்று தகவல் அறியும் உரிமைச் சட்டம் நடைமுறைப்படுத்தப்படும் என்று தெரிவித்துள்ளார். இதற்கிடையே நேற்று முன்தினம் அமைச்சர் அர்ஜுன ரணதுங்கவும் கண்டிக்கு விஜயம் செய்து அஸ்கிரிய மற்றும் மல்வத்து பீட மகாநாயக்கர்களைச் சந்தித்து ஆசி பெற்றுக் கொண்டார். (இ-7)

## குடும்பஸ்தர் சிகிச்சை பலனின்றி மரணம்

(யாழ்ப்பாணம்)

தனக்கு தானே தீ மூட்டி தீக்காயங்களுக்குள்ளான நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த இளம் குடும்பஸ்தர் ஒருவர் சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளார்.

கிளிநொச்சி, ஸ்கந்தபுரம், கண்ணகிபுரத்தை சேர்ந்த விக்கினேஸ்வரன் சசிகரன் (வயது- 29) என்பவரே மரணமடைந்தவராவர்.

கடந்த 9 ஆம் திகதி மனைவியை காணாது தேடிய இவர் மனைவியின் சகோதரனின் வீட்டிற்கு தன்மீது மண்ணெண்ணெயை ஊற்றி விட்டு சென்று மனைவியை கேட்டுள்ளார். அங்கு மனைவி வரவில்லையென தெரிவிக்கப்பட்டதும் அந்த இடத்திலேயே தனக்குத் தானே தீ மூட்டியுள்ளார்.

தீக்காயங்களுக்குள்ளானவரை காப்பாற்றி அக்கராயன் வைத்தியசாலைக்கு கொண்டு சென்று, அங்கிருந்து கிளிநொச்சி வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார். பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு கடந்த 10 ஆம் திகதி அனுமதிக்கப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டிருந்த நிலையில நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளார்.

இவரது மரணம் தொடர்பாக யாழ். போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் விசாரணையை மேற்கொண்டிருந்தார். பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (இ-9)


ஓராண்டு நினைவு நாள்

அமரர் சின்னவன் இராசேந்திரன்

பிறப்பு 25 - 06 - 1945



இறப்பு 26 - 08 - 2014

ஓராண்டு காலங்கள் ஓடி மறைந்தாலும்
கண்டிப்பும் கலகலப்புமான முகம்
நேற்றுவரை நிலைத்தது போல் இருக்குதப்பா
ஆரவாரமின்றி சுதந்திரமாக
இறைவனடி சேர்ந்து விட்டீர்கள்
உங்களுடைய ஆத்மா சாந்தி பெற பிரார்த்திக்கிறோம்.

கரவெட்டி தெற்கு

இங்ஙனம்
குடும்பத்தினர்.



## மரண அறிவித்தல்



வாழ்நாள் பேராசிரியர்

**கந்தையா குணரத்தினம்**

B.Sc (Hons) Ph.D (London), FRAS (London)
Hon D.Sc (Jaffna)

முன்னாள் 3-வது உபவேந்தர் யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம் - (1994.04.01 - 1996.06.30)

ஏழாலை வடக்கை பிறப்பிடமாகவும், கோண்டாவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட வாழ்நாள் பேராசிரியர் கந்தையா குணரத்தினம் (முன்னாள் உபவேந்தர், யாழ். பல்கலைக்கழகம், பௌதீகவியல் பேராசிரியர்) 09.09.2015 அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - சிதம்பரம் தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான ஓவசியர் கந்தையா - யோகம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற புஸ்பவதியின் அன்புக்கணவரும், வைத்திய கலாநிதி தயாபரன், குமுதினி, வைத்திய கலாநிதி ஜெயந்தினி ஆகியோரின் அன்புத் தந்தையும், வைத்திய கலாநிதி பிரியதர்சினி, பாலகுமார், கணேஸ்குமார் ஆகியோரின் அன்பு மாமனாரும், கிருஷ்ணி, செந்தூரன், சக்தியாள் ஆகியோரின் பாசமிகு பேரனும், காலஞ்சென்றவர்களான செல்லம்மா, ஆறுமுகம், இராசம்மா, இராசரட்ணம் மற்றும் பேரம்பலம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், நேசமணி, காலஞ்சென்றவர்களான கந்தையா, சிவமணி, சந்திரசேகரம்பிள்ளை, ராஜேஸ்வரி மற்றும் கணேஷராஜா, கமலாதேவி, மகானந்தன், வைத்திய கலாநிதி மங்கலேஸ்வரி, பேராசிரியர் குகனேசராஜா, புனிதவதி, ஞானதிலகம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 14.09.2015 இன்று திங்கட்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கோண்டாவில் காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சமூகத்தினர் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

பாடசாலை ஒழுங்கை,
கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில், யாழ்ப்பாணம். (1730)

தகவல்:
குடும்பத்தினர்
தொ.பே இல: 077 735 3740


## ராசி பலன்

14.09.2015
(ஆவணி 28, திங்கட்கிழமை)
சூரிய உதயம் காலை 6.02 மணிக்கு
பிரதமை பிற்பகல் 2.25 மணிவரை
உத்தரம் பிற்பகல் 4.59 மணிவரை
இராகுகாலம் 7.33-9.03 மணிவரை
சுபநேரம் 12.03-1.33 மணிவரை

வளவன்

| | | | |
|---|---|---|---|
| கேது | | | |
| | கிரகநிலை சந்திராஷ்டமம் அவிட்டம், சதயம் மேல்நோக்கு நாள் | | செவ் சுக் |
| | | | குரு சூரி |
| | சனி | | ராகு புதன் சந் |

**மேடம்:** கலகலப்பான செய்திகள் வந்து சேரலாம், தேகநலன் கருதி எடுத்த முயற்சிகள் வெற்றி தரும், மற்றவர்களின் மனநிலையை அறிந்து செயற்படுவீர்கள்.

**இடபம்:** பிள்ளைகளின் தேவையறிந்து செயற்படுவீர்கள், மன மகிழ்ச்சியோடு செயற்படும் நாள், தொழிலை விருத்தி செய்ய முற்படுவீர்கள், சுபகாரியப் பேச்சுக்கள் முடிவுக்கு வரலாம்.

**மிதுனம்:** நண்பர்கள் மத்தியில் நல்ல பெயர் கிடைக்கும், பயணங்களில் பிரபலமானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், பொருளாதார நிலையில் முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள்.

**கடகம்:** புதிய பொருட் சேர்க்கையுண்டு, புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும், செய்தொழில் மேன்மையுண்டு, உடன் பிறப்புக்கள் வழியில் உதவிகள் கிடைக்கும் வாய்ப்புண்டு.

**சிம்மம்:** புண்ணிய காரியங்களில் ஈடுபாடு காட்டுவீர்கள், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், நாவன்மையால் நல்ல பெயர் கிடைக்கும், சுபசெய்திகள் வந்து சேரலாம்.

**கன்னி:** விரும்பிய உணவுப் பொருட்களை வாங்கிச் சாப்பிடுவதில் ஆர்வம் காட்டுவீர்கள், புதிய அனுபவங்கள் ஏற்படும் நாள், ஆன்மீகச் சிந்தனை மேலோங்கும் நாள்.

**துலாம்:** செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள், நடப்பதெல்லாம் நன்மைக்கேயென நினைக்க வேண்டிய நாள், தொழில் நலன் கருதிய பயணங்கள் இடம்பெறலாம்.

**விருச்சிகம்:** குடும்பத்தில் குதூகலம் தரும் Ä D Ã k , புதிய பொருட் சேர்க்கையுண்டு, சேமிப்பை உயர்த்த முற்படுவீர்கள், காரிய அனுகூலமுண்டு.

**தனுசு:** செவி குளிரும் செய்திகள் வந்து சேரலாம், கொள்கைப் பிடிப்போடு செயற்படுவீர்கள், உறவினர்கள் உங்களின் முன்னேற்றம் கண்டு ஆச்சரியப்படுவர்.

**மகரம்:** அரைகுறையாக இருந்த பணிகளை ஆர்வத்தோடு செய்து முடிப்பீர்கள், வரவேண்டிய பணவரவுகள் வந்து சேரலாம், புதிய திட்டங்கள் கைகூடும், பயணங்களால் பலனுண்டு.

**கும்பம்:** நிதானத்துடன் செயற்பட்டு நிம்மதி காண வேண்டிய நாள், குடும்ப பொறுப்புக்கள் கூடும், வேலைகள் உடனுக்குடன் முடியாமல் தாமதமாகலாம், சஞ்சலங்கள் கூடும் நாள்.

**மீனம்:** உறவினர்களின் வருகையுண்டு, சென்ற இடத்தில் செல்வாக்கு மேலோங்கும் நாள், தொழிலில் சிறப்புகள் வந்து சேரலாம், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வவு. அரச வீட்டுத்திட்ட வீட்டில் துணிகரத்திருட்டு

(குருமன்காடு)

**சமையலறை யன்னல் வழியாக வீட்டினுள் நுழைந்த திருடர்கள் அறையிலிருந்த கைப்பை உட்பட பல்வேறு பைகளை எடுத்துச் சென்று அதிலிருந்து பணத்தை திருடிச் சென்றுள்ளனர்.**

வவனியா ஓமந்தை வேப்பங்குளம் அரச வீட்டுத்திட்ட பகுதியிலுள்ள வீடொன்றில் இத்துணிகரத்திருட்டுச் சம்பவம் நேற்று முன்தினம் அதிகாலை இடம்பெற்றது.

இது தொடர்பில் தெரியவருவதாவது, வேப்பங்குளம் அரச ஊழியர் வீட்டுத்திட்ட பகுதியிலுள்ள இரண்டு ஆசிரியர்களும் அவர்களது தாயாரும் குறித்த வீட்டில் வசித்து வந்த நிலையில், வீட்டார் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்த சமயத்தில் சமையலறையின் பின்புற இடைவெளி ஒன்றினுடாக உள் நுழைந்து திருடர்கள் வீட்டிலிருந்த சமையலறை யன்னலைக் கழற்றி அதனூடாக அறையினுள் நுழைந்து அங்கிருந்த கைப்பைபைகளில் வைக்கப்பட்ட பணத்தை திருடி தப்பிச் சென்றுள்ளனர். இதே வேளை சமையலறையில் இருந்த உணவையும் திருடர்கள் சாப்பிட்டுச் சென்றுள்ளனர்.

வீட்டு உரிமையாளர்கள் அதிகாலை 5.30 மணியளவில் விழித்து பார்த்த போது பணம் திருட்டுப் போனதை அறிந்து கொண்டு ஓமந்தை பொலிஸாருக்கு தெரியப்படுத்தினர். ஓமந்தை பொலிஸார் திருட்டுச் சம்பவம் குறித்து விசாரனைகளை மேற்கொண்வருகின்றனர். (2-250)

# ஆரம்பக்கல்வி மாணவர்களுக்கிடையில் நடைபெறவுள்ள மாகாணமட்டப் போட்டிகள்

(மல்லாவி)

வடக்கு மாகாண கல்வித் திணைக்களத்தின் கீழுள்ள பாடசாலைகளில் கல்வி பயிலும் ஆரம்பக் கல்வி மாணவர்களுக்கு இடையில் மாகாண மட்டத்தில் திருக்குறள் மனனம், சித்திரம், சிறுவர் அரங்கம் ஆகிய போட்டிகள் நடைபெறவுள்ளதாக வடக்கு மாகாண கல்வித்திணைக்கள மாகாணக் கல்விப் பணிப்பாளர் செ. உதயகுமார் அறிவித்துள்ளார்.

இப்போட்டிகளுக்கான கால அட்டவணையை அவர் அறிவித்துள் ளார்.

இதற்கமைய திருக்குறள் மனனப் போட்டி எதிர்வரும் 24 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 8.30 மணிக்கு சுன்னாகம் மருதனார்மடத்திலுள்ள வடக்கு மாகாணக் கல்வித் திணைக்களத்தின் ஒன்றுகூடல் மண்டபத்தில் நடைபெறும்.

சித்திரப்போட்டி எதிர்வரும் 26 ஆம் திகதி சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு சுன்னாகம் மருதனார் மடத்திலுள்ள வடக்கு மாகாண கல்வித் திணைக்களத்தின் ஒன்றுகூடல் மண்டபத்தில் நடைபெறும்.

சிறுவர் அரங்கு (மன்னார், மடு, வவுனியா தெற்கு, வவுனியா வடக்கு, முல்லைத்தீவு, துணுக்காய் ஆகிய கல்வி வலயங்களைச் சேர்ந்த பாடசாலை மாணவர்களுக்கு) எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 3ஆம் திகதி சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெறும்.

சிறுவர் அரங்கு (யாழ்ப்பாணம், வலிகாமம், வடமராட்சி, தென்மராட்சி, தீவகம், கிளிநொச்சி ஆகிய கல்வி வலயங்களைச் சேர்ந்த பாடசாலை மாணவர்களுக்கு) எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 9 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்கு யாழ். உரும்பிராய் இந்துக் கல்லூரியில் நடைபெறும்.

சிறுவர் அரங்கு இறுதிப்போட்டி எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 10ஆம் திகதி சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு யாழ். உரும்பிராய் இந்துக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும் என அவர் அறிவித்துள்ளார்.

போட்டிகளில் பங்கேற்கவுள்ள மாணவர்களின் பெயர் விபரங் களை போட்டி நடைபெறவுள்ள திகதிக்கு ஒரு வாரத்திற்கு முன்பாக வடக்கு மாகாண கல்வித் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்குமாறு அனைத்து வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கும் பணிப்புரை விடுத்துள்ளார். (2-15)





# சர்வதேச விசாரணையை வலிறுத்தி வவு.வில் கையெழுத்துப் போராட்டம்

இலங்கையில் நடைபெற்ற போர்க்குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் சர்வதேச பொறிமுறையின் கீழ் சர்வதேச விசாரணை நடத்தப்பட வேண்டும் என்பதை வலியுறுத்திகடந்த ஒரு வாரமாக கையெழுத்துப் போராட்டம் இடம்பெற்று வருகின்றது.

இதன் தொடர்ச்சியாக நேற்று ஞாயிற்றுக்கிழமை வவுனியா கோவில் குளம் நாராயணசுவாமி ஆலயத்தில் விசேட வழிபாட்டுடன் கூடிய கையெழுத்துப் போராட்டம் இடம்பெற்றுள்ளது.

இப் போராட்டத்தில் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் உறுப்பினர்கள், வன்னி பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், வட மாகாணசபை உறுப்பினர்கள் உட்பட சமூக ஆர்வலர்கள், பொதுமக்கள் பலர் கலந்து கொண்டு கையெழுத்து இட்டு தமது கோரிக்கையை பதிவு செய்தனர். (2-281)






சர்வதேச விசாரணையை வலியுறுத்தி நேற்று முன்தினம் நண்பகல் 12 மணியளவில் கையெழுத்துப் போராட்டமொன்று முல்லைத்தீவு மாவட்ட செயலகம் முன்பாக நடைபெற்றதைப் படங்களில் காணலாம்.

(படங்கள்: குருமன்காடு செய்தியாளர்)

# பனிக்கன்குளம் மக்களின் குறைகள் தொடர்பில் நடைபெற்ற விசேடகூட்டம்

(பனிக்கன்குளம்)

பனிக்கன்குளம் கிராம அபிவிருத்தி சங்கம் ஏற்பாடு செய்த மக்களின் குறைகளை அதிகாரிகள், அரசியல் தலைவர்கள் ஆகியோரின் கவனத்திற்கு கொண்டு செல்லும் விசேட கூட்டமொன்று நேற்று முன்தினம் மாலை பனிக்கன்குளம் பொதுநோக்கு மண்டபத்தில் பனிக்கன்குளம் கிராம அபிவிருத்திச்சங்க தலைவர் ச.தவசீலன் தலைமையில் நடைபெற்றது. இதில் வடமாகான சபை உறுப்பினர்களான க.சிவநேசன். து.ரவிகரன். மின்சாரசபை அதிகாரி புதுக்குடியிருப்பு பிரதேசசபை அதிகாரி, வனவள பாதுகாப்பு அதிகாரி, பொலிஸ் அதிகாரிகள், பனிக்கன்குளம் கிராம அலுவலர்.பனிக்கன்குளம் கிராம வாழ்வின் எழுச்சி உத்தியோகத்தர் ஆகியோர் கலந்து கொண்டனர். இக்கலந்துரையாடலின் போது பனிக்கன்குளம் கிராமத்தில் மீள் குடியேறிய மக்கள் இன்றுவரை தீர்த்து வைக்கப்படாத பிரச்சினைகளான வீட்டுத் திட்டம் கிடைக்கப் பெறாதவர்களுக்கான வீடுகளை பெற்றுத் தருமாறும்: இதுவரை மின்னிணைப்புக்கள் வழங்கப்படாதவர்களுக்கான மின்னிணைப்புக்களை பெற்றுத்தருமாறும: புகையிரதப் பாதைக்கு அப்பால் உள்ளவர்கள் புகையிரதக் கடவையொன்று இல்லாததால் போக்குவரத்துக்கு பெருமசிரமப்படுவதாகவும் இதனைக் காரணம்காட்டி இநதப்பகுதிக்கு இதுவரை மின்னிணைப்பு வழங்கப்படவில்லையெனவும்: பனிக்கன்குளம் பாடசாலை செல்லும் வீதி உள்ளிட்ட வீதிகள் கிட்டத்தட்ட 15 வருடங்களுக்கு மேலாக திருத்தப்படவில்லையெனவும் ; காட்டு யானைகளால் ஏற்படும் அழிவுகளுக்கு உரிய தீர்வினைப் பெற்றுத் தருமாறும் பாடசாலை மாணவர்களை பேருந்துகள் ஏற்றாது செல்வதாகவும் எமது கிராமத்திலில்லாத பலருக்கு மணல் அகழ்விற்கான அனுமதிப்பத்திரம் வழங்கப்படுகிறது. இதனைத் தடுத்து நிறுத்துமாறும் கேட்கப்பட்டது. பின்தங்கிய இந்த கிராமத்திற்கான மாலை நேரக்கல்விக்கு ஏற்பாட்டினை செய்து தருமாறும் கோரிக்கைகள் விடுக்கப்பட்டது. இந்த இடத்தில் சில பிரச்சினைகளுக்கான தீர்வுகள் அந்தந்த அதிகாரிகளினால் வழங்கப்பட்டபோதும் பல பிரச்சினைகளை தீர்ப்பதற்கான முயற்சிகள் எடுக்கப்படுமென வடமாகாண உறு ப்பினர்கள் கருத்து தெரிவித்தனர். இதனைத் தொடர்ந்து பேருந்து தரிப்பு நிலையமொன்றை தமது பகுதிக்கு பெற்றுத்தந்த வடமாகாண சபை உறுப்பினர் து.ரவிகரனுக்கும் தனது நிதி ஒதுக்கீட்டிலிருந்து தமது பனிக்கனகுளம் அமைப்பிற்கான தளபாடக் கொள்வனவுக்கு 50ஆயிரம் நிதியினை ஒதுக்கீடு செய்த வடமாகாணசபை உறுப்பி னர் க.சிவநேசன் ஆகியோருக்கு மக்கள் நன்றிகளை தெரிவித்தனர்.தொடர்ந்து வடமாகாண சபை உறுப்பினர்கள் மக்களுடன் கலந்துரையாடலையும் நடத்தினர். (2-281)



# மடுத்திருத்தலத்திற்கு பயணிக்கும் பிரதான வீதியை செப்பனிடுங்கள்

**சமூக அமைப்புக்கள், பொதுமக்கள் கோரிக்கை**



(பனிக்கன்குளம்)

வவுனியாவில் இருந்து பிரமனாயன்குளம் வழியாக மடு திருத்தலத்திற்கு செல்லும் பிரதான வீதி நீண்டகாலமாக புனரமைக்கப்படாது இருப்பதாக பிரதேசமக்கள், பயணிகள் ஆகியோர் விசனம் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் மடுத்திருத்தலத்திற்கு அதிகளவான பக்தர்கள் வருகை தருவதுடன் சுற்றுலாப்பயணிகளின் வருகையும் தற்போது அதிகரித்துள்ளது.

இதனால் இப்பிரதான வீதியில்வசிக்கும் குடும்பங்கள்வீதியில் இருந்துவரும் புழுதியினால் கடும் நோய்த் தாக்கத்திற்குள்ளாக்கப்படுவதுடன் மழைகாலங்களில் போக்குவரத்தை மேற்கொள்ள முடியாது துன்பத்திற்கு உள்ளாவதாகவும் தெரிவிக்கின்றனர். இந்த விடயம் தொடர்பாக வட மாகாண வீதி அபிவிருத்தி அமைச்சிடம் வேண்டுகோள் விடுத்தும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என பாதிக்கப்பட்ட மக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். எனவே இதுதொடர்பில் வட மாகாணவீதி அபிவிருத்தி அமைச்சு உடனடி யாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென மடு பிரதேச சமூக அமைப்புகளும் பொதுமக்களும் கோரிக்கை விடுத்துள்ளனர். (2-281)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசு பேச்சுக்கு முட்டுக்கட்டைபோட்டால் வீதியில் இறங்கி போராட தயாராக வேண்டும்

## ஆனந்தன் எம்.பி. தெரிவிப்பு

(குருமன்காடு)

**தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கும் அரசுக்கும் இடையில் பேச்சு இடம்பெறும் போது அரசு முட்டுக்கட்டை போட்டால் மக்கள் வீதியில் இறங்கி போராட தயாராக வேண்டும் என வன்னி பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் தெரிவித்துள்ளார்.**

வவுனியாவில் நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்தும் அங்கு கருத்து தெரிவித்த அவர்,

ஒரு தேசிய அரசாங்கம் அமைக்கப்பட்டிருக்கிறது. ஜனாதிபதி தேர்தல் நடந்து முடிந்ததற்கு பின்னர் மைத்திரிபால சிறிசேன ஒரு செய்தியை குறிப்பிட்டிருந்தார்.

அதில் பாராளுமன்ற தேர்தலுக்கு பின்னர்தான் தமிழ் மக்களுடைய இனப்பிரச்சினைக்கான ஒரு அரசியல் தீர்வு உட்பட ஏனைய விடயங்களை தாங்கள் பேசி தீர்க்க முடியும் என தெரிவித்திருந்தார்.

பாராளுமன்றத் தேர்தல் நடந்து முடிந்து ஒரு தேசிய அரசாங்கமும் அமையப்பெற்றுள்ளது. அத்துடன் தமிழ் தேசிய கூட்டமைப்பின் சார்பிலும் சம்பந்தனிற்கு எதிர்க்கட்சித் தலைவர் என்ற பதவி வழங்கப்பட்டுள்ளது.

ஆகவே தொடர்ந்து இந்த தேசிய அரசாங்கம் தமிழ் மக்களுடைய பிரச்சினைகளை புறந்தள்ள முடியாது. தமிழ் மக்களிடம் நாங்கள் தேர்தல் விஞ்ஞாபனத்தினூடாக ஆணை கேட்டிருந்தோம்.

குறிப்பாக இந்த இறுதிக்கட்ட போரிலே நடைபெற்ற படுகொலைகள் மனித உரிமை மீறல்கள் போன்றவற்றுக்காக ஒரு நீதியான சர்வதேச விசாரணை வேண்டுமென்பதை இந்த தேர்தல் விஞ்ஞாபனத்திலே மக்களிடம் ஆணை கேட்ட முக்கியமான விடயமாக ஒரு சர்வ தேச விசாரணை தேவை என்பதாகும்.

யுத்தம் நடைபெற்று ஆறு வருடங்கள் கடந்து விட்ட நிலையில் தமிழ மக்களுடைய நிலங்கள் வடக்கு கிழக்கில் பல ஆயிரக்கணக்கான காணிகளை இராணுவம் தன் வசம் வைத்துள்ளது. அவற்றை மக்களிடம் ஒப்படைக்கவில்லை. நீண்ட காலமாக சிறையில் இருக்கும் அரசியல் கைதிகளுடைய விடுதலை அதாவது ஆறு தொடக்கம் இருபது வருடங்களாக பலர் சிறைச்சாலையிலே இருக்கிறார்கள். அவர்களுடைய விடுதலை, காணாமல் போனோரை கண்டுபிடிப்பது தொடர்பான பல்வேறுபட்ட விடயங்கள் தொடர்பாக இந்த தேர்தலிலே தமிழ் மக்களிடமிருந்து ஓர் ஆணையை பெற்றிருந்தோம்.

தமிழ் மக்களுடைய ஆணையின் பிரகாரம் தமிழ் தேசிய கூட்டமைப்பானது அந்த கொள்கைகளுக்கு அமைவாக செயற்பட வேண்டிய பெரிய பொறுப்பு எங்களுக்கு இருக்கிறது. ஆகவே இனப் பிரச்சினைக்கான ஒரு நிரந்தர அரசியல் தீர்வைக் காண்பதற்கு எங்களுக்கு இருக்கக்கூடிய ஒரு இறுதிச் சந்தர்ப்பம் செப்டெம்பர் 30ஆம் திகதி ஐ.நாவின் அறிக்கை ஒன்று வெளிவர இருக்கிறது.

அந்த அறிக் கையானது நாங்கள் எதிர்பார்க் கின்ற சர்வதேச விசாரணையோடு உள்ளடக்கிய அறிக்கையாக வெளி வருமா இல்லையா? அல்லது அப் படி ஒரு சர்வதேச விசாரணை யோடு வெளி வருவதற்காக தமிழ் தேசிய கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் கட்சிகள் அதற்கான காத்திரமான வேலைகளை முன்னெடுக்க வேண்டும்.

ஆனால் கடந்த ஒரு மாத காலமாக எங்களுடைய தலைமையில் இருக்கக்கூடிய சிலரது போக்குகள் தமிழ் மக்கள் மத்தியிலே நம்பிக்கையீனங்களையும் வெறுப்பையும் ஏற்படுத்துகின்ற ஒரு போக்கு காணக்கூடியதாக இருக்கிறது. குறிப்பாக தேர்தல் காலத்திலே எங்களுடைய இந்த பிரச்சினையை தீர்ப்பதற்கு சர்வதேச விசாரணை தேவையென்று மேடைகளிலே நாங்கள் பேசிவிட்டு இன்று சர்வதேச விசாரணை முடிவடைந்து விட்டது. இன்னுமொரு சர்வதேச விசாரணை தேவையா அல்லது சர்வதேச கண்காணிப்போடு ஒரு உள்ளக விசாரணைதான் வேண்டுமென்று மக்களை குழப்புகின்ற அளவிற்கு இன்றைக்கு ஒரு சிலருடைய நடவடிக்கைகள் அமைந்திருக்கிறது.

வன்னி மக்கள் எங்களுக்கு வழங்கிய ஆணை மற்றும் பொறுப்புகளிலிருந்து ஒரு துளியளவும் நாங்கள் விலகமாட்டோம். கடந்த கால எங்களுடைய செயற்பாடுகளின் ஊடாக நாங்கள் நிரூபித்திருக்கின்றோம்.

வெறுமனமே நாங்கள் பாராளுமன்ற உறுப்பினர்களாகவோ மாகாணசபை உறுப்பினர்களாகவோ இருப்பது மட்டுமல்ல. எங்கெல்லாம் அநீதிகள் நடக்கப்படுகிறதோ எங்கெல்லாம் தவறுகள் நடக்கப்படுகிறதோ அதற்கெதிராக குரல் கொடுக்கக் கூடிய பலத்தையும் சக்தியையும் நீங்கள் எங்களுக்கு வழங்கியிருக்கிறீர்கள்.

ஆகவே எங்களைப் பொறுத்தவரை தமிழ் தேசிய கூட்டமைப்பானது ஒரு பலமிக்க ஒரு மக்கள் இயக்கமாக ஒரு சக்தியாக மாற்ற வேண்டிய தேவைப்பாடு இருக்கிறது.

நாங்கள் கிராம, பிரதேச, மாவட்ட மட்ட அமைப்புகளை உருவாக்க வேண்டிய தேவை உள்ளது.

அரசாங்கத்திற்கும் தமிழ் தேசியக்கூட்டமைப்புக்கும் பேச்சுவார்த்தை நடைபெற்றுக்கொண்டிருக்கும் போது அரசாங்கம் முட்டுக்கட்டை போடுமாக இருந்தால், மக்கள் இயக்கமாக ஜனநாயக ரீதியாக அமைதியான முறையில் முப்பதாயிரம் மக்கள் தெருவில் இறங்கி போராட்டத்தை நடத்த வேண்டுமாயின் தமிழ் தேசியக் கூட்டமைப்பு மக்கள் இயக்கமாக மாற்றம்பெற வேண்டும் என தெரிவித்தார். (2-250)




# இனவிருத்தி சுகாதாரம் குறித்து நேற்று நடைபெற்ற செயலமர்வு




(பனிக்கன்குளம்)

கொழும்பு யாஎல பிரதேசத்தை தலைமையகமாகக் கொண்டியங்கும் பெண்கள் மத்தியஸ்தானம் என்ற அமைப்பின் ஏற்பாட்டில் இனவிருத்தி சுகாதாரம் தொடர்பான விழிப்புணர்வு செயலமர்வு நேற்று முற்பகல் 10 மணியளவில் ஆரம்பமாகி நடைபெற்றது.

புதுக்குடியிருப்பு மல்லிகைத்தீவு கிராம அலுவலர் அலுவலகத்தில் விழிப்புணர்வு செயலமர்வு நடைபெற்றது.

இந்த அமைப்பினருடைய குழுக்கள் வவுனியா, மன்னார், புதுக்குடியிருப்பு ஆகிய இடங்களில் இயங்கி வருகின்றன.

இதில் புதுக்குடியிருப்பு குழுவிலுள்ள 25 அங்கத்தவர்களுக்கே நேற்றையதினம் இச் செயலமர்வு இடம்பெற்றது.

இவர்களுக்கு ஏற்கனவே பெண்கள் உரிமைகள் மற்றும் பால்நிலை சமத்துவம் தொடர்பான பயிற்சி நெறிகளும் தங்களால் வழங்கப்பட்டுள்ளதாகவும் பெண்கள் மத்தியஸ்தானம் என்ற அமைப்பின் அதிகாரியொருவர் தெரிவித்தார். (2-28)

# மீள்குடியேறி ஐந்து வருடங்கள் பூர்த்தி; அடிப்படை வசதிகளின்றி வாழ்கின்றோம்

## பாதிக்கப்பட்ட குடும்பங்கள் ஆதங்கம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் புதுக்குடியிருப்பு பிரதேச சபையின் கீழ் உடையார்கட்டு தெற்கு கிராம அலுவலர் பிரிவுக்கு உட்பட்ட உடையார்கட்டு தெற்கு, குரவில், உடையார் கட்டு கிழக்கு ஆகிய பகுதிகளில் சுமார் 950 இற்கும் அதிகமான குடும்பங்கள் வசித்து வரும் நிலையில் மீள்குடியேற்றம் செய்யப்பட்டு 5 வருடங்கள் பூர்த்தி அடைந்தும் இது வரையும் அடிப்படை வசதிகள் ஏற்படுத்தப்படவில்லை என பாதிக்கப்பட்ட மக்கள்கவலைதெரிவிக்கின்றனர்.

இது தொடர்பில் அவர்கள் தெரிவிக்கையில்,

குறிப்பாக மின்சாரம் வழங்கப்படவில்லை. அத்துடன் வீதி புனரமைக்கப்படவில்லை மழை காலங்களில் இவ்வீதியூடாக பயணிக்கும் பாடசாலை மாணவர்கள் உட்பட இப்பகுதி மக்கள் பெரும் அவஸ்தைப்படுகின்றனர்.

கடந்த அரசாங்கத்தின் எந்த விதமான அபிவிருத்தி திட்டங்களும் எங்களுடைய கிராமத்தை எட்டிக் கூட பார்க்கவில்லை. தேர்தல காலங்களில் மட்டும் தங்களுடைய கிராமத்தை தேடிவரும் அரசியல் வாதிகள் தேர்தல் முடிந்ததும் தங்களுடைய கிராமம் ஒன்று இருப்பதையே மறந்து விடுகின்றனர். எத்தனையே மனுக்கள், கடிதங்கள் உரிய தரப்பினரிடம் கொடுத் தும் எந்தவித நடவடிக்கையும் ஏற்படவில்லை.

எனவே மேற்படி கிராமத்திற்கு இத்தகைய வசதிகளை ஏற்படுத்தி தருமாறு இப்பகுதி மக்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் கோரிக்கை விடுக்கின்றனர். (2-4)

# ஆய்வுகூட உதவியாளர் பதவிக்கு விண்ணப்பம் கோரல்

மத்திய கல்வி அமைச்சினால், ஆய்வுகூட உதவியாளர் பதவிக்கு (மட்டுப்படுத்தப்பட்டது) விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளதாக மத்திய கல்வி அமைச்சின் மேலதிக செயலாளர் (நிர்வாகம்) ஜி.எல்.எஸ். சேனாதீர அறிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவித்துள்ளதாவது,

கடந்த 2010-01-01 திகதி தொடக்கம் அமுலாகும் கல்வி சாரா ஊழியர்களை ஆட்சேர்ப்புச் செய்யும் செயல்முறையில் 7:3 பிரிவின் ஒழுங்கு விதிகளுக்கு ஏற்ப ஆய்வு கூட உதவியாளர் சேவையின் 34 பதவி வெற்றிடங்களுக்கு (மட்டுப்படுத்தப்பட்டது) ஆய்வு கூட சேவையாளர் பதவியில் சேவையிலுள்ளவர்களிடம் இருந்து எதிர் வரும் 27ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமைக்கு முன்பாக விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளதாக அவர் அறிவித்துள்ளார்.

விண்ணப்பதாரிகள் தகைமைகளாக,

2015-05.30 ஆம் திகதிக்கு ஆய்வுகூட சேவையாளர் பதவியில் 15 வருடங்கள் சேவையாற்றி இருத்தல்,க.பொ.த. (சா/த) பரீட் சையில் அல்லது சிரேஷ்ட பாடசாலை பரீட்சையில் இரண்டு தடவைகளுக்கு மேற்படாமல் ஆறு பாடங்களில் சித்தி அடைந்திருத்தல் வேண்டும். 2015.06.30ஆம் திகதிக்கு ஐந்து வருடங்களுக்குரிய சகல சம்பள ஏற்றங்களைப் பெற்றிருப்பதோடு ஐந்து வருட செயலார்ந்த சேவைக் காலமொன்றை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும். பதவி நிரந்தரமாக்கப்பட்டிருத்தல் வேண்டும். உரிய வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையில் சித்தி அடைந்திருத்தல் வேண்டும்.

மேற்படி தகைமைகளைக் கொண்டுள்ள விண்ணப்பதாரிகள் வலயக்கல்வி பணிப்பாளர்கள், பாடசாலை அதிபர்கள், சகல பீடாதிபதிகள் ஆகியோருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள இப் பதவி தொடர்பான சுற்று நிருபத்தை பார்வையிட்டு எதிர்வரும் 27 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமைக்கு முன்பாக விண்ணப்பப்படிவங்களை பூர்த்தி செய்து உதவிச் செயலாளர் (தாபனம்மற்றும்இணைந்த சேவை அல்லாத) கல்வி அமைச்சு, இசுறுபாய, பத்தரமுல்ல, கொழும்பு எனும் முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் அனுப்பி வைக்குமாறு அவர் கேட்டுள்ளார். (2-15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எக்னெலிகொட கடத்தல் குறித்த விசாரணையை தடுக்கவில்லை!

## இராணுவம் மறுப்பு

ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொட காணாமல் போன சம்பவம் தொடர்பான விசாரணைகளை தடுக்க முயற்சிப்பதாக வெளியாகும் செய்தியினை இராணுவம் நிராகரித்துள்ளது.

சில ஊடகங்களில் எக்னெலிகொட தொடர்பான விசாரணைகளையும், கிரித்தல பகுதியில் அமைந்துள்ள இராணுவ முகாம் தொடர்பிலான விசாரணைகளையும் இராணுவம் தடுக்க முயற்சிப்பதாக வெளியாகிய செய்திகள் உண்மையில்லை என இராணுவ ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

கிரித்தல முகாமினை பார்வையிடுவதற்கு அனுமதிக்க முடியாதென இராணுவத்தின் சார்பில் ஆஜரான சட்டத்தரணிகள் நீதிமன்றில் தெரிவித்திருந்தனர் என குறிப்பிடப்படுகிறது.

பொலிஸார் சந்தேகத்தின் பேரில் இராணுவத்தினரை கைது செய்தால் அந்த விவகாரங்களில் இராணுவ சட்டத்தரணிகள் நீதிமன்றில் ஆஜராக மாட்டார்கள் என தெரிவிக்கப்படுகிறது. எனவே இராணுவத்தினர் சார்பில் எக்னெலிகொட வழக்கில் இராணுவ சட்டத்தரணிகள் எவரும் ஆஜராகவில்லை என இராணுவ ஊடகப்பிரிவு மேலும் குறிப்பிட்டுள்ளது. (இ-7)




# படுகொலைகளுக்குக் காரணமானவர்களையே விசாரணை நடத்தச் சொல்வதை ஏற்க முடியாது

## அமெரிக்காவுக்கு சீமான் கண்டனம்

(கொழும்பு)

**இலங்கையில் இடம்பெற்ற படுகொலைகளுக்குக் காரணமானவர்களையே விசாரணை நடத்த சொல்வதை ஏற்க முடியாது என்றும் இவவாறு அமெரிக்கா எடுத்துள்ள முடிவு கண்டனத்துக்குரியது என்றும் நாம் தமிழர் கட்சி தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் தெரிவித்துள்ளார்.**

இலங்கையில் இடம்பெற்ற யுத்தக் குற்றங்கள் தொடர்பில் உள்நாட்டு விசாரணை பொருத்தமானது என்ற அமெரிக்காவின் நிலைப்பாட்டுக்கு கண்டனம் தெரிவிக்கும் முகமாக நாம் தமிழர் கட்சி சார்பில் சென்னையில் நேற்று முன்தினம் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட நாம் தமிழர் கட்சி தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் ஊடகவியலாளர்களிடம் மேலும் தெரிவிக்கையில்.

“இலங்கையில் நடந்த இனப் படுகொலையை பல்வேறு நாடுகள் மனித உரிமை மீறல் என்றும். போர்க்குற்றம் என்றும் கூறுகின்றன. ஆனால், அவர்கள் நாட்டில் இதுபோன்ற ஒரு சம்பவம் நடைபெற்றால் இப்படி கூறுவார்களா? நிச்சயமாக கூறமாட்டார்கள்.

அமெரிக்கா, இலங்கையை உள்நாட்டு விசாரணை நடத்திக் கொள்ளலாம் என்று கூறியுள்ளது. இந்த நிலைப்பாட்டினை அமெரிக்கா உடனடியாக மாற்றிக்கொள்ள வேண்டும். உள்நாட்டு விசாரணையை இலங்கை நடத்தி கொள்ளலாம் என்பது. படுகொலைகளுக்குக் காரணமானவர்களை நீயே விசாரணை நடத்தி தீர்ப்பு வழங்கிகொள் என்பது போன்று உள்ளது. உள்நாட்டு விசாரணையை மாற்றி சர்வதேச விசாரணைக்கு உத்தரவிட மத்திய அரசு, ஐ.நா.வை வலியுறுத்த வேண்டும்.

இந்த ஆர்ப்பாட்டம் இத்துடன் முடிவடையாது. இதற்கு உரிய நடவடிக்கை எடுக்கவில்லை என்றால். தமிழகம் முழுவதும் தொண்டர்களை திரட்டி பெருந்திரள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுவோம். தமிழக அரசு சார்பில் இந்த விவகாரம் தொடர்பாக நடவடிக்கை எடுக்க முன்வரவேண்டும் சிரியாவில் ஒரு குடும்பத்தினர் துருக்கி நாட்டுக்கு படகில் அகதியாக சென்றனர்.

அப்போது படகு கவிழ்ந்து கரை ஒதுங்கிய அய்லான் என்ற சிறுவனின் உடலை பார்த்து உலகமே கணணீர் வடித்தது. இந்த சம்பவம் பரிதாப படக்கூடிய விடயம்தான். ஆனால். இலங்கையில் நடந்த படுகொலையில் பல்லாயிரக்கணக் கானோர் கொல்லப்பட்டனர். இந்த சம்பவத்துக்கு





பரிதாபப்பட்டவர்கள் மிகக் குறைவே” என்று தெரிவித்துள்ளார். (இ-7)

# குறைநிறைகளை அறிந்துகொள்ள ரயிலில் பயணம் செய்த அமைச்சர்

(கொழும்பு)

போக்குவரத்து துறை அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா உடரட மெனிக்கே புகையிரதத்தில் கொழும்பில் இருந்து பதுளைக்கு கண்காணிப்பு விஜயம் ஒன்றை மேற்கொண்டார்.



இந்தப் பயணத்தின் இடையில் ஹற்றன் புகையிரத நிலையத்தில் வைத்து ஊடகவியலாளர்களிடம் கருத்து வெளியிட்ட போக்குவரத்து அமைச்சர் பயணத்திற்கான நோக்கத்தை இவ்வாறு தெரிவித்தார்.

இந்த புகையிரதத்தில் பயணம் மேற்கொள்ளும் பயணிகளுக்கு சிறந்த சேவையை பெற்றுக் கொடுக்கும் நோக்கில், தற்போது காணப்படுகின்ற குறைநிறைகளை அறிந்து கொள்வதற்காக புகையிரதத்தில் தான் பயணம் செய்ததாக அமைச்சர் தெரிவித்தார்.

அத்தோடு குறைநிறைகளை இணங்கண்டுள்ளதாகவும் இதற்கு உரிய நடவடிக்கைகளை தான் சிறந்த முறையில் மேற்கொள்ள இருப்பதாகவும், பின்தங்கிய நிலையில் காணப்படும் புகையிரத சேவையை மீண்டும் கட்டியெழுப்புவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனவும் தெரித்தார்.

தற்போது கிடைத்திருக்கும் போக்குவரத்துத்துறை அமைச்சு தனக்கு சவால் இல்லை என்றும் இதற்கு முன்னர் பதவி வகித்த அமைச்சுக்களை சரிவர நிர்வகித்ததாகவும் இதன்போது அமைச்சர் சுட்டிக்காட்டியிருந்தார்.

இந்த பயணத்தில் ரயில் திணைக்கள பொது முகாமையாளர் விஜே அமரதுங்க உள்ளிட்ட திணைக்கள அதிகாரிகள் பலர் கலந்து கொண்டிருந்தனர். (இ-7)

## வாகன விபத்தில் ஒருவர் உயிரிழப்பு

அதுருகிரிய லக்ஷபான பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார். மோட்டார் சைக்கிளை செலுத்திய ஒருவர் பேருந்து ஒன்றை முந்திச் செல்ல முற்பட்ட போது மோட்டார் சைக்கிள். நேர் எதிரே வந்த லொறியொன்றுடன் மோதி நேற்றுமுன்தினம் விபத்துக்குள்ளானதாக பொலிஸார் கூறியுள்ளனர்.

பாதுக்கை வடருக்க பிரதேசத்தைச் சேர்ந்த 24 வயதான இளைஞர் ஒருவரே விபத்தில் உயிரிழந்துள்ளார். விபத்து தொடர்பில் பேருந்து மற்றும் லொறி ஆகியவற்றின் சாரதிகள் கைது செய்யப்பட்டுள்ளனர். (இ-7)

# ஜனாதிபதியின் நிலைப்பாட்டில் மாற்றமில்லை-திஸாநாயக்க

ஊழல், மோசடி குற்றும் சுமத்தப்பட்டவர்கள் தொடர்பில் ஜனாதிபதியின் நிலைப்பாட்டில் எவ்வித மாற்றமும் இல்லை என ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி செயலாளர் துமிந்த திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

கண்டி அஸ்கிரி பீடாதிபதியை சந்தித்தனை தொடர்ந்து நேற்று முன்தினம் ஊடகவியலாளர்களை சந்தித்து கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

கட்சியாக ஒன்றிணைந்து செயற்பட்டாலும், கொண்டுள்ள கருத்துக்களில் எவ்வித மாற்றம் இல்லை என தேரர்களுக்கு சுட்டிக்காட்டியதாக அவர் கூறியுள்ளார்.

அதற்கமைய திருட்டு, மோசடி, ஊழல், வன்முறை போன்றவற்றை ஒழிப்பதற்கு எதிர்வரும் நாட்களில் நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அனைத்து விசாரணைக் குழுக்களிடமும் கோருவதாக குறிப்பிட்டுள்ளார்.

தற்போது குற்றம் சுமத்தப்பட்டுள்ளவர்கள் குற்றவாளிகள் என்றால் குற்றவாளிகள், எனவும் நிரபராதிகள் என்றால் நிரபராதிகள் என்றும் விரைவில் தெரியப்படுத்துமாறு அவர் மேலும் கேட்டுகொண்டுள்ளார். (இ-7)

# கிணற்றில் தவறி விழுந்து சிறுமி பலி

தம்புல்லை - மொரகொல்லாவ பிரதேசத்தில் 3 வயதான சிறுமி கிணற்றில் தவறி விழுந்து உயிரிழந்துள்ளாள். தாயுடன் வீட்டில் தனியாக இருந்த குறித்த சிறுமி, தாய்க்கு தென்படாமல் வீட்டில் இருந்து வெளியில் வந்தபோது கிணற்றில் தவறி விழுந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

பின்னார் சிறுமியை தாய் தேடிய போது, அவள் கிணற்றில் விழுந்துள்ளதை கண்டுள்ளார்.

அயலவர்களின் உதவியுடன் சிறுமியை மீட்டு வைத்தியசாலைக்கு கொண்டு சென்ற போதும் சிறுமி உயிரிழந்திருந்ததாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. குறித்த சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ-7)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# துன்பங்களை நீக்கியருளும் நல்லைக்குமரன்

நல்லைக்குமரன்

முருகப்பெருமான், தமிழர் தெய்வமாக நின்று விளங்குகின்றார். தமிழரின் உயரிய நோக்கங்கள், கொள்கைகள் ஆகியவற்றின் திருவுருவமாக, திருவுருவத் திருமேனியாக முருகப் பெருமான் நின்று விளங்குகின்றார்.

முருகப்பெருமான் சீர்மையும், பெருமையும் கொண்டு விளங்குகின்றார். முருகப்பெருமான் வழிபாடு தமிழகத்திலும் இலங்கையிலும் தொண்டு தொட்டு நிகழ்ந்து வருகின்றது.

உலகெலாம் நிறைந்து விளங்குகின்றஎல்லாம்வல்ல பரம்பொருளான ஆதி நாயகன் சிவபெரு மான், கந்தன், தம்மை வழிபடும் அடியார்களுடைய துன்பங்களையும் இன்னல்களையும் இடுக் கண்களையும் நீக்கியருள் வதற்காக நல்லைக் குமரன் முதலாக கதிர்காமக்கந்தன், செல்வச்சந்நிதி என இன் னும் பல உள. இதைவிட இராமருக்கும் இராவணனு க்கும் மாபெரும் யுத்தம் நட ந்த நேரத்திலும் சரி கந்தன் உறுதுணையாக இராம ருக்கு எவ்வளவோ துணை கொடுத்தார். "கந்தா ஏன் இப்படி கண்டு கொண்டும் ஆண்டியாக இருந்தாய்'' என்ற பாடல் மெய் சிலிர்க்க வைத்தது.

முருகப்பெருமான் ஓர் இயற்கைத் தெய்வம். இயற்கையோடு இயைந்த இனிய எழில் வாழ்க்கை நடத்தி வந்த பண்டைத்தமிழ் பெருமக்கள் முருகப்பெருமானை இயற்கையின் வாயிலாகவே இனிது அறிந்தனர். முருகப்பெருமானின் திருமேனியை இயற்கை காட்சியின் வாயிலாகவே கண்டு கவினறப்போற்றிக் களித்தனர்.

நீலக்கடலில் காலைக் கதிரவன் காலை நேரச் செங்கதிரவன் தோன்றும் கவின் காட்சியை கண்டு மகிழ்ந்த பண்டைத் தமிழ்ச் சான்றோர்கள் அக்காட்சி யின் வாயிலாகவே நீலமயில் மீது அமர்ந்து வரும் செவ் வேலை செந்நிறமுடைய முருகனைநினைந்துணர்ந்து மிகப் பழங்காலம் முதலே வழிபடத்தொடங்கினர்.

முருகப்பெருமான் தமிழ்க்கடவுள். முருகனே தமிழ் மொழியை முதன்முதலில் அகத்தியருக்கு புகட்டினார் என்பது வரலாறு. சிவபெருமானுக்கு முக்கண்கள் உள்ளது போல் அவர் மைந்தன் ஆகிய முருகப்பெருமானுக்கும் முக்கண்கள் உண்டு. ஒரு முகத்திற்கு மூன்றாக முருகனின் ஆறு திருமுகங்களுக்கும் பதினெட்டுக் கண்கள் உண்டு.

முருகப்பெருமானின் பதினெட்டுக் கண்களும் தமிழ் மொழியின் பதினெட்டு மெய்யெழுத்துக்கள் ஆகும். இந்த பதினெட்டு மெய்யெழுத்துக்களும் முருகனின் திருக்கண்களாக அமைந்துள்ளன என்பார்கள். முருகப்பெருமானின் பல்வேறு திருமேனிகளும் ஆறு திருமுகங்களும் பன்னிரு திருக்கரங்களும் பல்வேறு தத்துவங்களையும் உண்மை நிலைகளையும் உள்ளடக்கிக்கொண்டு விளங்குகின்றன.

### வேல் சேவல் மயில்

முருகன் என்றாலே தமிழ் நினைவுக்கு வரும். தமிழ் என்றால்திருப்புகழ் மனதில்தோன்றும். அந்தத் திருப்புகழால் முருகனைப் பாடிய அருணகிரியார் தனியாக முருகப்பெருமானை மட்டும் கும்பிட்டு நிற்காமல் வேலையும் மயிலையும் சேவலையும் குறிப்பிட்டு பாடிய பாடல்கள் பல. ஞானப்பெருமானுடைய திருக்கரத்தில் படையாக விளங்குகின்ற வேலையும் வாகனமாக இருக்கின்ற மயிலையும் வெற்றிக் கொடியாக இருக்கிற சேவலையும் சேர்த்துத் துதிப்பது அருணகிரியார் வழக்கம்.

சேவல்விருத்தம், மயில்விருத்தம், வேல் விருத்தம் என்று அவற்றை தனியே பாடியிருக்கிறார். வேல் வகுப்பு, மயில் வகுப்பு என்று இரண்டு வகுப்புக்கள் வேறு பாடியிருக்கிறார். அவர் பாடிய நூல்கள் பல திருப்புகழ் திரு வகுப்பு கந்தர் அந்தாதி, கந்தர் அலங்காரம், வேல் மயில் சேவல் விருத்தங்கள். இந்த ஆறு நூல்களுக்குள் இறுதியில் பாடிய நூல் கந்தர் அநுபூதி. கந்தர் அநுபூதியில் முதல் பாட்டில் ஆடுகின்ற பரியாகிய மயிலையும் படையாகிய ஞானவேலையும் வெற்றிக் கொடியாகிய செவ்வேலையும் பாடுகின்றஉத்தியோகத்தை "ஆண்டவனே எனக்கும் கொடுப்பாயாக என்று கேட்டுக்கொள்கிறார்.

### ஆடிக்கிருத்திகை

கண்கண்ட கடவுளராக வேண்டுவார் வேண்டுமென வழங்கி அருளும் வள்ளலாகத் திகழ்பவர் முருகப் பெருமான். கொடியோரை அழித்தலும், நல்லாரைப் பாதுகாத்தலுமே முருகப்பெருமானின் இயல்பாக செயல்கள் அவற்றின்படி சூரபதுமன் முதலிய அசுரர்களை ஒடுக்கவும் தேவர்களைக் காத்தருளவும் கருணைகூர் முகங்கள் ஆறும் கரங்கள் பன்னிரண்டும் கொண்ட முருகப்பெருமான் ஆறு குழந்தைகளாகி விளையாடி உயிர்களை மகிழ்வித்தார். அதனால் திருமால் முதலிய தேவர்கள்எல்லையில்லாஉவகை எய்தினார். கார்த்திகைப் பெண்கள் ஆகிய தெய்வமாதர் அறுவரை அழைத்து இக்குழந்தைகளுக்குப் பாலூட்டி வளர்த்து வாருங்கள் எனப் பணித்தனர். அதன்படியே கார்த்திகைப் பெண்கள் அறுவரும் ஆறு குழந்தைகளாக வடிவம் கொண்டிருந்த முருகப்பெருமானுக்குப் பாலூட்டி வளர்த்தனர். கார்த்திகைப் பெண்களால் வளர்க்கப்பெற்ற முருகன், கார்த்திகேயன் என்றும் ஒரு பெயர் பெற்றான். அது மட்டுமன்றி கார்த்திகை நாளில் தன்னை வழிபடுவோர்க்கு எல்லா நலன்களையும் அளித்தருளவும் இசைந்து அக்கார்த்திகைப் பெண்களுக்கு முருகன் வரம் தந்தருளினார். முருகனுக்குரிய விரத நாட்கள் பல. அவற்றுள் வெள்ளிக்கிழமை கிருத்திகை நட்சத்திரமும் "கற்பனை என்றாலும் கற்சிலை என்றாலும் கந்தனே உன்னை யான் கனவிலும் மறவேன்''

### பிரார்த்தனை

கருணையும் அன்பும் நிறைந்த இறைவா எல்லா உயிர்களிலும் ஊடுருவி எங்கும் நிறைந்த சர்வ வல்லமையும்பொருந்திய சர்வகலை ஞனான சச்சிதானந்தப் பரம் பொருளாம் உம்மை வணங்கிப் பணிகின்றோம்.

மெய்ப்பொருள் காணும் உள்ளம், சமநோக்கு நிலை பெற்ற மனம் சிரத்தை பக்தி ஞானம் இவற்றை எங்களுக்கு அருள்வீராக!

ஆணவம், காமம், பேராசை, கோபம், வெறுப்பு இவற்றிலிருந்து எங்களை விடுவித்து எங்கள் உள்ளங்களில்தூய தெய்வீகக் குணங்களை நிரப்புவீராக. எல்லா உருவங்களிலும் பெயர்களிலும் உம்மையே தரிசித்து சேவை செய்வோமாக. எந்த நேரமும் உம்மையே சிந்திப்போமாக. என்றென்றும் உமது புகழை பாடுவோமாக. எப்பொழுதும் எங்களது நாவினில் உமது நாமம் விளங்குக என்றும் உம் முன்னே நிலைபெற்று விளங்குவோமாக.

ஓம் என்பது அட்சரம் அல்லது அழியாத எழுத்தாகும். ஓம் என்பது பிரபஞ்சம் ஆகும். பிரபஞ்சம் ஓம் என்பதன் விளக்கமே ஆகும். எல்லா காலத்தில் ஆகிய இவையனைத்தும் முன்பு இருந்தது. இப்போதும் இருக்கிறது. இனிமேலும் இருக்கும். இதுவே ஓம் ஆகும்.



நம்முடைய தர்மம் இந்து தர்மம் என்று அழைக்கப்படுகின்றது. இந்து சமயமே மனிதனின் முதல் சமயம் ஆகும். மனிதன் தோன்றிய காலந்தொட்டே சமயம் இருந்து வருகின்றது. சமயத்தினின்றும் விடுபடுதல் என்பது மனிதனுக்கு இயலாத காரியம்.

ஏனெனில் சமயம் மனிதனது வாழ்வு. அவன் ஆன்மாவுக்கு ஒளி, அவனது பாதைக்குத் தீபம் சமயத்தின் வழியாக மனிதன் அடைய முயலும் உள்பொருளானது சத்தியத்தின் உயர் நாடி, வாழ்வின் பேரின்பம் மனத்தின் ஆனந்தம், நித்தியத்தின் பூரணம். இத்தகைய பேரின்பம் மிக்க சமய உணர்ச்சி மனித இனத்தோடு பிறந்து மனிதனுள் என்றும் நின்று நிலவுகின்றது.

"கல் தோன்றி மண் தோன்றாக் காலத்தே வாளோடு முன் தோன்றி மூத்த குடியாக வாழும்'' தமிழினத்தோடு அன்றே சநாதமாகத் தோன்றிய மதம் இந்துமதம். இத்தகைய இணையற்ற பெருமை வாய்ந்த இந்துமதத்தின் சிறப்பான அம்சம் அதன் பரந்த மனப்பான்மையாகும். ஆதிக்கக் கொள்கைகளின் சர்வா திகாரப் போக்கினைப் போலச் சமயத்தின் சர்வாதிகாரப் போக்கும் வெறுத்து ஒதுக்கப்பட வேண்டியதொன்றாகும். இந்துமதமோ இந்த உண்மையை நன்கு உணர்ந்து கடைப்பிடிப்பதிலும் அதிக அளவு சுதந்திரம் கொடுத்திருக்கிறது.

"ஒன்றிலிருந்து நினைமின்கள் உத்தமக்கு ஊனமுமில்லை'' என்றபடி அழுத்தமான அசைக்க முடியாத பக்தி வேண்டும். "உறைப்பான எண்ணமே பயன்தரும்'' அதனால் அவனருளாலே அவர் தாளை நினைத்துய்வோமாக

**பைரவர் பணியில்**
**சிவக்கொழுந்து இராஜேஸ்வரன்**
நவாலி வடக்கு தேற்றா மரத்தடி ஸ்ரீ ஞானபைரவர் கோவில் பரம்பரை அறங்காவலர்.

---

# ஜனாதிபதியைச் சந்திக்க மகிந்த ராஜபக்ஷ முயற்சி

(கொழும்பு)

**ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை சந்திக்க முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ முயற்சித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.**

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினருக்கு தற்போதைய அரசாங்கத்தினால் ஏற்பட்டுள்ள நெருக்கடிகள் குறித்து ஜனாதிபதி மைத்திரிபாலவுடன் பேச்சுவார்த்தை நடத்த விரும்புவதாக முன்னாள் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

விரைவில் இந்த சந்திப்பினை நடத்த விரும்புவ தாக மகிந்த தகவல் அனுப்பி வைத்துள்ளதாக முன்னாள் ஜனாதிபதியின் காரியாலயம் தெரிவிக்கின்றது.

பல்வேறு அரச நிறுவனங்கள் மற்றும் தேர்தல் தொகுதிகளின் கட்சியைச் சேர்ந்தவர்கள் கடந்த காலங்களில் நெருக்கடிகளை எதிர்நோக்கி வருவதாக, முன்னாள் ஜனாதிபதியிடம் முறைப்பாடு செய்துள்ளனர்.

இந்த விடயங்கள் குறித்து ஜனாதிபதியுடன் பேச்சுவார்த்தை நடத்த விரும்புவதாக மகிந்த தெரிவித்துள்ளார். (இ-7)

---

## மதுபோதையில் இடையூறு செய்த நால்வருக்கு 37,500 ரூபா அபராதம்

(கரணவாய்)

மதுபோதையில் வீதியில் நின்று இடையூறு விளைவித்த நான்கு பேர் நெல்லியடி பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு பருத்தித்துறை நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த வெள்ளிக்கிழமை பருத்தித்துறை நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்ட நால்வரில் மூவருக்கு தலா 10 ஆயிரம் ரூபாவும் மற்றைய நபருக்கு 7 ஆயிரத்து 500 ரூபாவும் தண்டப் பணம் விதிக்கப்பட்டுள்ளது.

தண்டப் பணம் செலுத்தாத பட்சத்தில் சிறை செல்ல நேரிடும் என நீதிபதி மா. கணேசராஜா குற்றவாளிகளை எச்சரிக்கை செய்துள்ளார். (இ-3-60)

---

## 113 உறுப்பினர்களின் ஆதரவினை பெற்றுக்கொள்வது சிரமமானதல்ல

### அஜித் பி.பெரேரா தெரிவிப்பு

(கொழும்பு)

113 உறுப்பினர்களின் ஆதரவினைப் பெற்றுக் கொள்வது சிரமமான காரியமல்ல என பிரதி வெளிவிவகார அமைச்சர் அஜித் பெரேரா தெரிவித்துள்ளார்.



தனியாக ஆட்சி அமைக்க முடியாத காரணத்தினால் தேசிய அரசாங்கம் அமைக்கப்படவில்லை.

தேசிய திட்டங்களுக்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலம் அவசியம் என்பதனால் இவ்வாறு தேசிய அரசாங்கம் அமைக்கப்பட்டது.

எங்களது கட்சியில் பதவிகளுக்கான போட்டிகள் எதுவும் கிடையாது.

ஓர் தரப்பே இவ்வாறு போட்டியிடுகின்றது என அவர் தெரிவித்துள்ளார்.

கொழும்பு பத்திரிகையொன்று எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளித்த போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

(இ-7)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# டெங்கு காய்ச்சலுக்கு மகன் பலி

# மாடியிலிருந்து குதித்து பெற்றோர் தற்கொலை

(ஒடிசா)

**டெங்கு காய்ச்சலால் 7 வயது மகன் பலியான சோகத்தில், அவனது பெற்றோர் நான்காவது மாடியில் இருந்து குதித்து தற்கொலை செய்துள்ளனர்.**

ஒடிசா மாநிலத்தை சேர்ந்த லக்ஷமி சந்திரா என்பவர் டில்லியில் உள்ள ஒரு தனியார் நிறுவனத்தில் வேலை செய்து வந்துள்ளார்.

அவர் தெற்கு டில்லியில் ஒரு அடுக்குமாடி குடியிருப்பில் மனைவி பபிதா,. மகன் அவினாஷ் (7) ஆகியோருடன் வசித்து வந்தார்.

இந்நிலையில்;, அவினாவுக்கு கடுமையான டெங்கு காய்ச்சல் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

டில்லியில் உள்ள பிரபல தனியார் வைத்தியசாலை ஒன்றில், சிறுவனுக்கு சிகிச்சை அளிக்க மறுப்பு தெரிவித்துள்ளனர். கடந்த 8ஆம் திகதி அந்த சிறுவன் பரிதாபமாக உயிரிழந்துள்ளான்.

தங்களது ஒரே மகனை பறிகொடுத்த சோகத்தில் மூழ்கிப்போய் இருந்த தம்பதியர், தற்கொலை செய்ய முடிவு செய்துள்ளனர்.

இதையடுத்து, அவர்கள் இருவரும் கைகோர்த்தபடி 4ஆவது மாடியில் இருந்து கீழே குதித்து உயிரிழந்துள்ளனர். மேலும், அவர்கள் எங்கள் முடிவுக்கு யாரும் காரணம் அல்ல என்று தற்கொலை கடிதத்தை எழுதி வைத்துள்ளனர்.

தற்போது தெற்கு டில்லி பொலிஸார். இதுதொடர்பாக விசாரித்து வருகின்றனர்.

இந்த செய்திகள் வெளியானதும் டெங்கு காய்ச்சலால் பாதிக்கப்பட்ட சிறுவனுக்கு சிகிச்சையளிக்க மறுத்த 2 தனியார் வைத்தியசாலைகளுக்கும் விளக்கம் கேட்டு நோட்டீஸ் அனுப்ப டில்லி சுகாதாரத்துறை அமைச்சர் சத்யேந்திர ஜெயின் உத்தரவிட்டுள்ளார். (3-7)

## 90 பேரை காவு கொண்ட வெடிவிபத்து

# நீதி விசாரணைக்கு முதலமைச்சர் உத்தரவு



மத்தியப் பிரதேசத்தில் 90 உயிர்களை பறித்த வெடி விபத்து நிகழ்ந்த இடத்தை அம்மாநில முதலமைச்சர் சிவராஜ்சிங் சவுகான நேற்று நேரில் ஆய்வு செய்தார்.

அத்துடன் நீதி விசாரணைக்கும் அவர் உத்தரவிட்டுள்ளார். மத்திய பிரதேசத்தின் ஜபுவா மாவட்டத்துக்கு உட்பட்ட பெட்ல வாட் நகர் பேருந்து நிலையத்துக்கு அருகே ராஜேந்திர கசாவா என்பவருக்கு சொந்தமான 3 மாடி கட்டடம் உள்ளது. இவர் பாறைகள் நிறைந்த பகுதியில் கிணறு தோண்டுவதற்காக, வெடிபொருட்கள் பயன் படுத்துவதற்கான உரிமம் பெற்றிருந்தார்.

இதற்காக அந்த கட்டடத்தில் ஜெலட்டின் குச்சிகள், டெட்டனேட்டர்கள் போன்ற ஏராளமான வெடி பொருட்களை சேமித்து, வைத்திருந்தார்.

இந்த கட்டடத்தின் தரைத் தளத்தில 2 கடைகள் உள்ளன. மேலும் இந்த கட்டடத்தையொட்டி ஹோட்டல் மற்றும் ஏராளமான வீடுகளும் உள்ளன.

பேருந்து நிலையத்தின் அருகாமையில் உள்ள பகுதி என்பதாலும், நகரில் உள்ள முக்கியமான உணவகம் என்பதாலும், அந்த ஹோட்டலில் எப்போதும் மக்கள் கூட்டம் நிரம்பியிருக்கும். மேலும் குஜராத் உள்ளிட்ட பகுதிகளுக்கு பணிக்கு செல்லும் ஏராளமான தொழிலாளர்களும் அந்த ஹோட்டலுக்கு செல்வது வழக்கமாயிருந்தது.

நேற்று முன்தினம் காலையில் இந்த ஹோட்டலில் தேநீர் குடிப்பதற்காகவும், காலை உணவுக்காகவும் தொழிலாளர்கள், அலுவலகம் செல்வோர்.பாடசாலை மாணவ-மாணவிகள் என ஏராளமானோர் குழுமியிருந்தனர். அப்போது சுமார் 8.30 மணியளவில் அந்த 3 மாடி கட்டடத்தில் வைக்கப்பட்டிருந்த வெடிபொருட்கள் பயங்கர சத்தத்துடன் திடீரென வெடித்து சிதறின.

இதனால் ஏற்பட்ட தீ, அருகில் இருந்த ஹோட்டல் மற்றும் வீடுகளுக்கும்பரவியது. இதில் ஹோட்டலில் இருந்த எரிவாயு சிலிண்டர்களும் அடுத்தடுத்து வெடித்தன. இதனால் அந்த பகுதி முழுவதும் அதிர்ந்தது.

ஹோட்டலில் இருந்தவர்கள் ஆங்காங்கே தூக்கி வீசப்பட்டனர். அப்பகுதியில் நிறுத்தப்பட்டிருந்த மோட்டார் சைக்கிள்கள் உள்ளிட்ட வாகனங்களும் பல அடி தூரத்துக்கு தூக்கி வீசப்பட்டன. இந்த சம்பவத்தில் அந்த ஹோட்டலும், 3 வீடுகளும் இடிந்து தரை மட்டமாகின. மேலும் அந்த 3 மாடி கட்டடமும் பெரும் சேதமடைந்தது.

இந்த கோர சம்பவத்தில் ஹோட்டலில் இருந்தவர்கள் மற்றும் அருகில் உள்ள வீடுகளில் வசித்தோர் என ஏராளமானோர் தீயில் சிக்கி கூச்சலிட்டனர். மேலும் பலர் கட்டட இடிபாடுகளில் சிக்கி கதறினர்.

இதனால் அந்த பகுதி முழுவதும் போர்க்களம் போல காட்சியளித்தது. இந்த சம்பவத்தின்போது உடல் சிதறியும், தீயில் கருகியும், இடிபாடுகளில் சிக்கியும் 90 பேர் உயிரிழந்தனர். 150-க்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்தனர்.

வெடிவிபத்து குறித்து தகவல் அறிந்து கடும் அதிர்ச்சியடைந்த முதலமைச்சர் சிவராஜ் சிங் சவுகான், உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா 2 இலட்சம் ரூபா இழப்பீடும், காயமடைந்தோருக்கு 50 ஆயிரம் ரூபா நிவாரணமும் அளிக்கப்படும் என்றும் விபத்து குறித்து நீதி விசாரணை நடத்த மத்திய பிரதேச மாநில அரசு உத்தரவிட்டுள்ளதாகவும் அறிவித்துள்ளார்.

90 உயிர்களை பறித்த இந்த கொடூர விபத்து நிகழ்ந்த இடத்தை மத்தியப் பிரதேசம் மாநில முதலமைச்சர் சிவ்ராஜ் சிங் சவுகான் நேற்று நேரில் பார்வையிட்டார். விபத்துக்கான காரணத்தை அதிகாரிகள் மற்றும் பொதுமக்களிடம் கேட்டறிந்தார். விபத்தில் பலியானவர்களின் குடும்பத்தினருக்கும் அவர் ஆறுதல் கூறினார். (3-7)

## சர்வதேச மரதன் போட்டியில்

# காஷ்மீரில் இராணுவம் மீது கல் வீசித் தாக்குதல்



ஜம்மு காஷ்மீர் மாநிலத்தின் தலைநகர் ஸ்ரீநகரில் இருந்து 10 கிலோ மட்டர் தொலைவில் உள்ள காஷ்மீர் பல்கலைக்கழகத்தில் நேற்றுக் காலை மினி மரதன் ஓட்டப்போட்டி நடைபெற்றது.

21 கி.மீற்றர் நடைபெறும் இந்த மரதன் போட்டியில் 15 சர்வதேச விளையாட்டு வீரர்கள் கலந்து கொண்டனர். மேலும் இந்த போட்டியில் கலந்து கொள்ள 15 ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் தங்கள் பெயரை பதிவு செய்திருந்தனர்.

ஜம்மு காஷ்மீரில் நடைபெறும் முதல் சர்வதேச மினி மரதன் போட்டி இது என்பதால், அங்கு பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டு இருந்தது.

அப்போது, போட்டி நடைபெறும் இடத்திற்கு அருகாமையில் கூடிய இளைஞர்கள் சிலர். பாதுகாப்பு படையினருக்கு எதிராக கோஷங்களை எழுப்பியும் கற்களை வீசியும் தாக்குதலில் ஈடுபட்டனர்.

இதையடுத்து போராட்டக்காரர்களை கண்ணீர் புகைக்குண்டுகள் வீசி பாதுகாப்பு படையினர் கலைத்தனர்.

இந்த சம்பவத்தில் யாருக்கும் காயம் ஏற்படவில்லை.மினி மரதன் போட்டியில் ஜம்மு காஷ்மீர் முன்னாள் முதலமைச்சர் உமர் அப்துல்லா கலந்து கொள்வதாக இருந்தது. ஆனால், இந்த போராட்டத்தால், அவர் தனது திட்டத்தை இரத்து செய்தார். (3-7)

# பேஸ்புக் தலைமை செயலகத்திற்கு விஜயம் செய்கிறார் மோடி



சமூக வலைத்தளங்களில் அதிகமானவர்கள் பயன்படுத்தும் பேஸ்புக் என்று அழைக்கப்படும் முகநூலின் தலைமை செயல் அலுவலகம் அமெரிக்காவின் கலிபோர்னியாவில் உள்ளது. இந்த நிறுவனததிற்கு எதிர்வரும் 24 ஆம் திகதி பிரதமர் நரேந்திர மோடி செல்லவுள்ளார்.

இந்த தகவலை பேஸ்புக் நிறுவனத்தின் நிறுவனர் மார்க் சக்கர்பர்க் தனது பேஸ்புக் பக்கத்தில் பகிர்ந்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள தகவலில். இந்தியாவின் பிரதமர் நரேந்திர மோடி, இந்த மாத இறுதியில் பேஸ்புக் தலைமை அலுவலகத்திற்கு வருகை தரவுள்ளார் என்ற செய்தியை மகிழ்ச்சியுடன் வெளியிடுகிறேன். கடந்த ஆண்டு இந்தியாவுக்கு நான் சென்றிருந்த போது பிரதமர் மோடியை சந்திக்கும் வாய்ப்பு எனக்கு கிடைத்தது.

இப்போது பேஸ்புக் தலைமை செயல் அலுவலகத்துக்கு பிரதமர் வருகை தர இருப்பது பெருமை அளிக்கும் விடயம் ஆகும் என்று தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் அவையின் கூட்டம் இந்த மாதம் 25 முதல் 27 ஆம் திகதி வரை நடக்கிறது. இதில் கலந்து கொள்ள பிரதமர் நரேந்திர மோடி அமெரிக்கா செல்லவுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (3-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அகதிகளுக்கு கருணை காட்டுங்கள்!

## ஐரோப்பிய நாடுகளுக்கு ஐ.நா.செயலர் அறைகூவல்



(நியூயோர்க்)

**ஐரோப்பிய தலைவர்கள் தங்கள் நாடுகளின் எல்லையை திறந்து வருகிறை அகதிகளுக்கு தேவையான உதவிகளை செய்ய முன்வர வேண்டும். அகதிகளுக்கு நாம் கருணை காட்டவேண்டும் என ஐ.நா. செயலர் பான் கீ மூன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.**



தஞ்சம் அடைந்த அகதிகளுக்கு உதவிகளை அதிகரிக்க வேண்டும என்று ஐரோப்பிய தலைவர்களுக்கு பான் கீ மூன் வலியுறுத்தியுள்ளார்.

சிரியாவின் உள்நாட்டுப்போர், அந்த நாட்டு மக்களின் வாழ்க்கையை சின்னாபின்னமாக்கி விட்டது.

அவர்களில் பலரும் தங்கள் மீதியான வாழ்க்கையை கழித்தே ஆக வேண்டும் என்ற நிர்ப்பந்தமான நிலையில், அண்டை நாடான துருக்கி வழியாக ஐரோப்பிய நாடுகளுக்கு அகதிகளாக சென்று கொண்டிருக்கிறார்கள்.

சிரியாவில் ஐ.எஸ். தீவிரவாதிகள் வசமுள்ள கொபானி நகரில் உள நாட்டுப் போருக்கு பயந்து, உயிர் பிழைப்பதற்காக ஏராளமானோர் கடந்த ஆண்டு துருக்கிக்கு சென்றனர். அங்கிருந்து அவர்கள் படகுகள் மூலமாக் பாதுகாப் பற்ற பயணம் மேற்கொண்டு ஐரோப்பிய நாடுகளுக்கு செல்கின்றனர்.

இப்போதும் அகதிகள் பிரச்சினை தீர்ந்தபாடில்லை. தினமும் ஆயிரக் கணக்கானவர்கள் சிரியாவில் இருநதும் ஈராக் நாட்டில் இருந்தும் வெளியேறிக்கொண்டு இருக்கிறார்கள்.

இது குறித்து பான் கீ மூன் தெரிவிக்கையில்,

அதிகளுக்கு அளித்து வரும் உதவிகளுக்காக ஐரோப்பிய நாடுகளின் தலைவர்களை மனதார பாராட்டுகிறேன். அதேவேளையில் பிரச்சினையின் தீவிரத்தை உணர்ந்து இத்தலைவர்கள் தங்கள் உதவிகளை அதிகரிப்பார்கள் என நம்புகிறேன்.

சர்வதேச மனித உரிமைகள் சட்டம், மனிதாபிமான சட்டங்கள் மற்றும் அகதிகள் சட்டவிதிகளின் படி அகதிகள் மனிதாபிமான அடிப் படையிலும் பொறுப்புடனும் நடத்தப்பட வேண்டும் என்று கோரிக்கையை விடுக்கின்றேன்.

இதேவேளை கடந்தவாரம் அகதிகளை சுவீடனுக்கு செல்ல விடாது டென்மார்க் பாதைகளை மூடியிருந்தமை இங்கு குறிப்பிடத் தக்கது. (3-7)

## எகிப்தில் இராணுவம் அதிரடி 64 தீவிரவாதிகள் பலி





எகிப்தின் வடக்கு சினாய் மாகாணத்தில் நடத்தப்பட்ட அதிரடித் தாக்குதல்களில் 64 தீவிரவாதிகள் கொல்லப்பட்டதாக இராணுவம் தெரிவித்துள்ளது. தீவிரவாதிகளுக்கு எதிரான பரந்த அளவிலான தாக்குதலை இராணுவம கடந்த திங்கள் அன்று தொடங்கியது. இதன் ஒரு பகுதியாக ஐ.எஸ். தீவிரவாதிகள் ஆதிக்கம் செலுத்தி வரும் சினாய் தீபகற்பத்தின் பல்வேறு நகரங்களின் மீது நேற்று முன்தினம் நடத்தப்பட்ட தாக்குதல்களில் குறைநதது 64 தீவிரவாதிகள் கொல்லப்பட்டதாக தெரிவிக்கபபட டுள்ளது. மேலும் நேற்று முன்தினம் நடந்த சண்டை யில் 2 இராணுவ வீரர்கள் கொல்லப்பட்டதாகவும் கூறப்பட்டுள்ளது.

ஜனநாயக முறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட ஜனாதிபதி முகமது முர்சியை 2013-ம் ஆண்டு ராணுவம் பதவியில் இருந்து நீக்கியது. அதன் பின்னர் தற்போது அப் தெல் பதே அல் சிசி ஜனாதிபதியாக பதவி வகிக்கிறார்.

முர்சி பதவி நீக்கம் செய்யப்பட்ட பின சினாய் தீபகற்ப பகுதியில் அவருக்கு ஆதரவான தீவிரவாதி களின் ஆதக்கம் அதிகரித்துள் ளது. அவரகள் இதுவரை நூற்றுக் கணக்கான ராணுவ வீரர்கள் மற்றும் பொலிஸாரை கொன்று குவித்துள்ளனர். என்பது குறிப்பிடத்தக்கது. (3-7)

## சந்தை மீது ரொக்கெட் தாக்குதல் ஏமனில் 20 பேர் பலி





ஏமன்நாட்டில்ஜனாதிபதிஅப்த்ரப்போ மன்சூர் ஹாதிக்கு எதிராக ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்டு வரும் ஹவுத்தி கிளர்ச்சியாளர்களை ஒழிக்க சவுதி அரேபியாவும் அதன் நட்பு நாடுகளும் போர் விமானங்கள் மூலம் குண்டுகளை வீசி தாக்குதல் நடத்தி வருகின்றன. .இந்த உள்நாட்டுப் போர் தொடஙகிய கடந்த மார்ச் மாதத்தில் இருந்து சுமார் ஆறு மாதங்களில் ஏமனில் நான் காயிரத்து ஐநூறுக்கும் அதிகமான மக்கள் பலியாகியுள்ளனர். சுமார் 10 ஆயிரம் பேர் காயம் அடைந்துள்ளனர்.

மேலும், 5 இலட்சத்துக்கும் அதிக மான மக்கள் ஏமனில் இருந்து வெளியேறி அண்டை நாடுகளில் அகதிகளாக தஞ்சம் அடைந்துள்ளனர்.

கிளர்ச்சியாளர்களுடன் புதிய பேச்சுவார்த்தை நடத்த ஐ.நா. ஏற்பாடு செய்து வரும் நிலையில், நேற்று கிளர்ச்சியாளர்கள் ரொக்கெட்டுகளை வீசி தாக்குதல் நடத்தியுள்ளனர்.

ஏமனின் கிழக்கு பகுதியில் உள்ள மாரிப் நகரில் மக்கள் நடமாட்டம் மிகுந்த சந்தை மீது நடத்தப்பட்ட இந்த தாக்குதலில் 20 பேர் கொல்லப்பட்டனர். பலர் படுகாயம் அடைந்துள்ளனர்.

மாரிப் நகரில் சவுதி கூட்டுப் படை விமான தாக்குதல் நடத்தி, கிளர்ச்சிப் படையைச் சேர்ந்த 7 பேரை கொன்ற சில மணி நேரங்களில் இந்த தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக இராணுவ வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (3-7)

## ஆளில்லாத விமானத் தாக்குதல் பாகிஸ்தானில் 15 தலிபான்கள் பலி



ஆப்கானிஸ்தானில் தீவிரவாதிகளை அழித்தொழிப்பதற்காக தாக்குதல் நடத்தி வரும் அமெரிக்க ஆளில்லா விமானம், ஆப்கானின் கோமல் மாவட்டத்தில், கடந்த புதன் அன்று நடத்திய தாக்குதலில் பாகிஸ்தானைச் சேர்ந்த 15 தலிபான்கள் கொல்லப்பட்டிருப்பதாக புலனாய்வு அதிகாரிகள் நேற்று முன்தினம்தெரிவித்துள்ளனர்.

கொல்லப்பட்ட 15 பேரின் உடல்கள் தென் கிழக்கு பாகிஸ்தானின் கைபர் பக்துன்வா மாகாணத்தில் உள்ள தேரா இஸ்மாயில் கான் நகருக்கு விரைவில் கொண்டு வரப்படும் என்றும் பாகிஸ்தானைச் சேர்ந்த அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (3-7)

## பூமிக்கு திரும்பிய விண்வெளி வீரர் 879 நாட்கள் இருந்து சாதனை

ரஷ்ய விண்வெளி வீரர் கென்னடி பட்ல்கா மேலும் 2 விண் வெளி வீரர்களுடன் சர்வதேச விண்வெளி ஆய்வு மையத்தில் இருந்து பத்திரமாக நேற்று பூமிக்கு திரும்பினார்.

கென்னடி படால்கா 879 நாட்கள் சர்வதேச விண்வெளி ஆய்வு மையத்தில் தங்கி இருந்து விண்வெளியில் அதிக நாள் இருந்த வீரர் என்ற சாதனையை நிகழ்த்தி உள்ளார். படல்கா 5 வெவ்வேறான பயணங்களின் மூலம் விண்வெளியில் 879 நாட்கள் இருந்து உள்ளார். படல்கா சக வீரர்கள் கசாக் விண்வெளி வீரர் ஐட்யன் அமெடெவ் மற்றும் டேனிஷ் விண் வெளி வீரர் ஆண்ட்ரியாஸ் ஆகியோருடன் திட்டமிட்டபடி நேற்று கசாக் புல் வெளியில் தரை இறங்கினார்.

தேர்வு செய்யப்பட்ட இடத்தில் இறங்கி உள்ளனர். எல்லாம் நல்ல விதமாக நடந்து உள்ளது என ரஷ்ய




வெண்வெளி ஆராய்ச்சி நிறுவன செய்தி தொடர்பாளர் ரோஸ்கோச் மோஸ் தெரிவித்து உள்ளார்.

44 வது சர்வதேச விண்வெளி நிலைய பயணத்தின் மூலம் படால்கா 10 ஆண்டுகளாக இருந்து வந்த சாதனையை முறியடித்து உள்ளார். இதற்கு முன் 803 நாட்கள் 9 மணி நேரம் 41 நிமிடங்கள் விண்வெளி நிலையத்தில் இருந்து சாதனை நிகழ்த்தியது மற்றொரு ரஷ்ய விண் வெளி வீரர் செர்ஜி கிரிகெலேவ் ஆவார்.

அதிகாரிகள் சூழப்பட்ட நிலையில் தேநீர் அருந்தியவாறு படால்கா கூறும் போது நான் நன்றாக இருப்பதை உணர்கிறேன் என கூறினார். காசாக் விண் வெளி ஆய்வு மைய தலைவர் டால் கெட் முசாமெயேவ் நகைச்சுவையாக இப்போது நீங்கள் சிறிது காலம் பூமியில வாழ வேண்டும் என கூறினார்.

சர்வதேச விண்வெளி ஆய்வு நிலையத்திற்கு 4 முறை சென்று உள்ள ஒரே விண்வெளி வீரர் படால்கவாகும். (3-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# உள்நாட்டு விசாரணை

# தீராத தலைவலி!

மைத்திரிபால சிறிசேன - ரணில் விக்கிரமசிங்க கூட்டு அரசாங்கம் அரசியல் ரீதியான சவால்களைப் பெரும்பாலும் வெற்றி கொண்டு விட்ட போதும் இன்னமும் நிம்மதிப் பெருமூச்சு விடமுடியாத நிலையில் தான் இருக்கிறது.

அடுத்தடுத்து தேர்தல்களை எதிர்கொண்டு மகிந்த ராஜபக்ஷவின் பலமான சவால்களையும் சமாளித்து புதிய அரசாங்கத்தை அமைத்து விட்டாலும் நிம்மதியாக அவர்களால் உறங்க முடியாதுள்ளது.

அண்மையில் அமைச்சர்கள் பதவியேற்பு நிகழ்வில் உரையாற்றிய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தானும் ஜனாதிபதியும் உறக்கமற்ற சாரதிகள் என்று குறிப்பிட்டிருந்தார்.

தாம் உறங்கிப்போனால் அரசாங்கத்தை இன்னொருவர் பறித்துக்கொண்டு போய்விடக்கூடும் என்ற தொனியில் அவர் அவ்வாறு குறிப்பிடவில்லை. தூக்கத்தைக் கெடுக்கின்ற பிரச்சினைகள் அவர்கள் முன்பாக இருக்கின்றதால் தான் அவர் அவ்வாறு குறிப்பிட்டிருந்தார்.

தற்போதைய அரசாங்கம் எதிர்கொள்கின்ற மிகப்பெரிய நெருக்கடி போர்க்குற்றச்சாட்டுகளுக்குப் பொறுப்புக்கூறல் சார்ந்ததுதான்.

மகிந்த ராஜபக்ஷவுக்கும் இந்த நெருக்கடி வந்தது. அவர். எந்த விசாரணையும் மேற்கொள்ள முடியாது என்ற அதிகாரத்தனத்துடன் கூறித் தட்டிக்கழித்தார். அதன் விளைவாக அரசாங்கம் சர்வதேச அழுத்தங்களை எதிர்கொண்டது.

ஆறு மாதங்களுக்கு ஒருமுறைதானே இந்த அழுத்தம் வருமென்று அலட்சியமாக கூறிவிட்டிருந்தார் அவர்.

ஆனால் இப்போதைய அரசாங்கத்தினால் அவ்வாறு கூற முடியாது. அதேபோல நிம்மதியாக இருக்கவும் முடியாது.

உள்நாட்டில் போர்க்குற்றச்சாட்டுகள் தொடர்பாக விசாரித்துப் பொறுப்புக் கூறுவோம் என்ற வாக்குறுதியை வெளிநாடுகளுக்குக் கொடுத்து தான் இந்த அரசாங்கம் பதவிக்கு வந்தது.

சர்வதேச சமூகத்துக்கு கொடுத்துள்ள இந்த வாக்குறுதியை முறையாக நிறைவேற்றுவது தான் இப்போதைய அரசாங்கத்தின் பிரதான சவால்.

உள்நாட்டு போர்க்குற்ற விசாரணைக்கு அமெரிக்கா இணங்கிவிட்டது. ஐநா மனித உரிமைகள் பேரவையில் அதற்கு ஆதரவான ஒரு தீர்மானத்தை அமெரிக்காவே கொண்டுவந்து நிறைவேற்றப் போகிறது என்பதெல்லாம் இலங்கைக்கு சாதகமான விடயம்தான்.

ஆனால் கழுத்துக்கு மேலாக தொங்கிக் கொண்டிருந்த கத்தி இப்போது சற்று கீழாக இறங்கி நெஞ்சுக்கு நேராக வந்து நிற்கிறது. அவ்வளவுதான் வித்தியாசம்.

உள்நாட்டு விசாரணை என்பதால் சர்வதேச சமூகத்தை இலகுவாக ஏமாற்றிவிடலாம் என்று அவ்வளவு இலகுவாக கணக்குப் போட முடியாது.

இலங்கையை அமெரிக்கா காப்பாற்ற முன்வருகிறது என்றாலும் அதிலும் சில விடயங்களை எதிர்பார்க்கவே செய்யும்.

நாளை தொடங்கவுள்ள ஐ.நா.மனித உரிமைகள் பேரவையின் 30ஆவது அமர்வில் கொண்டுவரப்படும் தீர்மானத்தில் தான் உள்நாட்டு விசாரணை எப்படிப்பட்டதாக அமைய வேண்டும், எந்தக் காலவரையறைக்குள் நடக்க வேண்டும் என்றெல்லாம் கூறப்படும்.

அதுகூடப் பிரச்சினையல்ல. உள்நாட்டு விசாரணையை செயற்படுத்துவதுதான் முக்கியமான பிரச்சினைக்குரிய விடயம்.

அரசாங்கத்தினால் ஒரு விசாரணைப் பொறிமுறைக் கட்டமைப்பை உருவாக்குவது ஒன்றும் கடினமானதல்ல.

அதனைக்கொண்டு விசாரணைகளை முன்னெடுப்பதுதான் சிக்கலானது. போரில் வெற்றியைப் பெற்றுக் கொடுத்தவர்களை விசாரிக்கவோ தண்டிக்கவோ கூடாது என்ற மனோ நிலையில் இருக்கும் பெரும்பான்மையான சிங்கள மக்களையும் உள்நாட்டு விசாரணையின் மூலம் தமக்கு நியாயம் கிடைக்காது என்று அவநம்பிக்கையில் இருக்கும் தமிழ் மக்களையும் ஒரே நேர்கோட்டுக்கு கொண்டு வந்தால் தான் இந்த விசாரணை சாத்தியமாகும். உள்நாட்டு விசாரணைகளைப் பொறுத்தவரையில் அரசாங்கத்தரப்பில் உள்ள படைத்தரப்பில் உள்ள அதிகாரிகளும் ஒத்துழைக்க வேண்டும்.

அதேவேளை பாதிக்கப்பட்ட தமிழ் மக்களும் ஒத்துழைக்க வேண்டும். தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் உள்நாட்டு விசாரணையின் மூலம் தமக்கு நியாயம் கிடைக்கும் என்று துளியளவு நம்பிக்கையும் இல்லாத நிலையில் உள்ளனர்.



காணாமல்போனோரைக் கண்டுபிடிப்பதற்காக என்று அமைக்கப்பட்ட மக்ஸ்வெல் பரணகம ஆணைக்குழு உள்நாட்டு விசாரணை மீதான கொஞ்ச நஞ்ச நம்பிக்கையையும் பாழ்படுத்திவிட்ட நிலையில் தமிழ் மக்களின் தரப்பில் இருந்து ஒத்துழைப்பை எதிர்பார்ப்பதும் பெறுவதும் மிகக் கடினமானது.

அவ்வாறு ஒரு பகுதி தமிழ் மக்கள் உள்நாட்டு விசாரணைகளுக்கு ஒத்துழைக்க முன்வந்தாலும் கூட அரசாங்கத் தரப்பிலோ படைத்தரப்பிலோ இருந்து விசாரணைக்கு ஒத்துழைப்பு கொடுக்கப்படுமா என்ற கேள்வி இருக்கிறது.

விடுதலைப் புலிகளை போரில் தோற்கடித்த படையினரையோ அவர்களை வழிநடத்திய அரசியல் தலைமையை விசாரிக்கவோ தண்டிக்கவோ கூடாது என்ற கருத்து அடிமட்ட சிங்கள மக்களில் இருந்து உயர்மட்ட அதிகாரிகள், அரசியல்வாதிகள் வரை பரவியிருக்கின்றது. இத்தகைய நிலையில் அவர்களிடம் இருந்து எப்படி ஒத்துழைப்பை எதிர்பார்க்க முடியும்?

ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொட கடத்தப்பட்டு காணமல்போகச் செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாக இரண்டு லெப்.கேணல் தர அதிகாரிகளை கைதுசெய்ய முயன்றபோது அதற்கு பாதுகாப்புச் செயலராக இருந்த பி.எம்.யூ.டி. பஸ்நாயக்கவும் இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் கிரிசாந்த டி சில்வாவும் எதிர்ப்பு வெளியிட்டிருந்தனர்.

காரணம் அந்த இரண்டு இராணுவ அதிகாரிகளும் போரில் முக்கிய பங்காற்றியவர்கள். அதனால் அவர்களைக் கைது செய்யவோ தண்டிக்கவோ கூடாது என்பது தான்.

முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ மீது தாம் அளவுகடந்த மதிப்பு வைத்திருப்பதாகவும் அதனால் அவரைக் காப்பாற்ற பொய்ச் சாட்சி கூறியதாகவும் முன்னாள் இராணுவ அதிகாரி ஒருவர் ஊழல் மோசடிகளை விசாரிக்கும் ஜனாதிபதி ஆணைக்குழுவிடம் சாட்சியமளித்துள்ளதாக ஒரு தகவல்.

ஊடகவியலாளர் பிரகீத எக்னெலிகொடவை தடுத்து வைத்திருந்த கிரித்தல இராணுவ முகாமுக்குள் சென்று தேடுதல் நடத்த நீதிமன்றத்தில் குற்றப்புலனாய்வுப் பிரிவு அனுமதி கோரிய போது அதற்கு இராணுவத்தரப்பில் எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேடுதல் நடத்தப்படுவதும் பதிவேடுகளை ஆராய்வதும் தேசியப் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தும் என்று இராணுவத்தரப்புக் கூறியிருக்கிறது.

போரில் வெற்றியைப் பெற்றுத் தந்தவர்கள் நீதித்துறை முன் நிறுத்தப்படக் கூடாது என்ற எந்த விதிமுறையும் கிடையாது. அவர்கள் எந்த சட்ட நடவடிக்கையில் இருந்தும் விதிவிலக்குப் பெற்றவர்களுமல்ல.

ஆனாலும் அவர்களைப் பாதுகாக்க அதிகார மட்டத்தில் இன்னமும் பலர் இருக்கின்றனர். குற்றச்சாட்டுகளுக்கு உள்ளானோரை பாதுகாக்கும் விசுவாசம் கொண்டோரை அவ்வளவு இலகுவாக வழிக்குக் கெண்டுவர முடியாது.

குற்றச்சாட்டுகளுக்கு உள்ளானோரை பாதுகாக்க முனையும் அதிகாரிகளை இந்த அரசாங்கம் எப்படி சமாளிக்கப் போகிறது என்பது முக்கியமான கேள்வியாக இருக்கிறது.

விசாரணைகளுக்கு இராணுவத்தின் ஒத்துழைப்பு முக்கியமானது. இராணுவ முகாம்களில் தேடுதல்கள் நடத்துவதும் பதிவேடுகளை ஆராய்வதும் ஒரு கட்டமாகவே இருக்கும்.

ஏனென்றால் படையினரிடம் ஒப்படைக்கப்பட்டவர்கள் பலர் காணாமல் போயிருக்கிறார்கள். தாம் தடுத்து வைத்து விசாரிக்கப்பட்ட சித்திரவதைகள், செய்யப்பட்ட இடங்கள் பற்றிய தகவல்களை பலர் வெளியிட்டிருக்கிறார்கள். இப்படியான நிலையில் இராணுவ முகாம்களையும் படையினரையும் உள்நாட்டு விசாரணை தரப்பில் இருந்து எப்படி மீட்க முடியும்?

தேசிய பாதுகாப்பைக் காரணம் காட்டி இதையெல்லாம் நிராகரித்தால் நியாயமான உள்நாட்டு விசாரணை எவ்வாறு மேற்கொள்ள முடியும்?

உள்நாட்டு விசாரணை விடயத்தில் பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக இருந்து பி.என்.யூ.டி. பஸ்நாயக்க கடும்போக்குள்ளவராகவே இருந்ததாகத் தகவல்.

அவர் இப்போது அந்தப் பதவியில் இருந்து மாற்றப்பட்டிருக்கிறார். அது உள்நாட்டு விசாரணையை இலகுபடுத்தும் ஒரு நடவடிக்கையாகவே பார்க்கப்படுகிறது.

ஆனாலும் படைத்தரப்பில் இருந்து விசாரணைகளுக்கு முழு ஒத்துழைப்பு பெறுவது கடினமானது.

உயர் அதிகாரிகளையும் தம்மை வழிநடத்தியவர்களையும் பாதுகாக்கும் கவசமாக இருப்போர் விசாரணைகளை நேர்த் தியாக மேற்கொள் வதற்கு தடையாகவும் தடங்கலாகவுமே இருப்பர்.

இந்தப் பிரச்சினையை அரசாங்கம் எவ்வாறு சமாளிக்கப் போகிறது என்பது தான் மிகப் பெரிய கேள்வி. மைத்திரிபால சிறிசேனவோ ரணில் விக்கிரமசிங்கவோ கூட இதே மனநிலையில் உள்ளவர்கள் தான்.

என்றாலும் வெளியுலக அழுத்தங்களால் அவர்களைச் சற்று வளைந்து கொடுக்க இணங்கினாலும் போர்க்கால மீறல்கள் பற்றிய உண்மைகளை வெளிப்படுத்த படைத்தரப்பினரோ ஏனைய அதிகாரிகள் வட்டமோ தயாராக இருக்கப் போவதில்லை.

அவர்களை இத்தகைய விசாரணைக்குத் தயார்படுத்தும் திறன் தற்போதைய அரசாங்கத்துக்கு இல்லையென்றே தெரிகிறது.

இந்தத் திறனை தற்போதைய அரசாங்கம் பெறாதவரையில் உருப்படியான உள்நாட்டு விசாரணையை நடத்த முடியாது. அவ்வாறு நடத்த முனைந்தாலும் அது தோல்வியாகவே அமையும்.

உள்நாட்டு விசாரணை என்பது இப்போதைக்கு அரசாங்கத்துக்கு சற்று மூச்சு விடும் அவகாசத்தைக் கொடுக்கலாம். ஆனால் அது நிரந்தரமான விடுதலையாக இருக்காது.

- சுபத்ரா -

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



இலங்கை கைதிகள் நலன்புரிச் சங்கம் நன்கொடை பெற்றுக் கொள்வதற்காக வருடந்தோறும் வெளியிடும் கொடியின் முதலாவது கொடியினை ஜனாதிபதிக்கு வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தில் இடம்பெற்றது.

# கே.பி., அவன்கார்ட் தொடர்பில் புலனாய்வு விசாரணை தேவை

(கொழும்பு) —

**விடுதலைப் புலிகளின் முன்னாள் முக்கியஸ்தர் கே.பி. மற்றும் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாயவின் அவன்கார்ட் ஆயுதக்கப்பல் தொடர்பில் புலனாய்வு விசாரணைகள் முன்னெடுக்கப்பட வேண்டும் என்று சிவில் அமைப்புகள் போர்க்கொடி தூக்கியுள்ளன.**

இது குறித்து சிவில் அமைப்புகள் கொழும்பில் நேற்று முன்தினம் ஊடக சந்திப்பு ஒன்றையும் நடத்தியிருந்தன.

இதன்போது கருத்துவெளியிட்ட சிவில் அமைப்புகளின் முக்கியஸ்தர் சமன் ரத்னப்பிரிய, கே.பி. எனப்படும் குமரன் பத்மநாதன் கைது செய்யப்பட்டபோது அவர் விடுதலைப் புலிகளின் புதிய தலைவர் என்றே அன்றைய அரசாங்கம் அடையாளப்படுத்தியிருந்தது.

அவ்வாறான நிலையில் அவர் மீது எதுவித குற்றச்சாட்டுகளும் இல்லை என்று அண்மையில் சட்டமா அதிபர் அறிவித்திருப்பது ஆச்சரியப்பட வைக்கும் விடயமாகும்.

இதேபோன்று அவன்கார்ட் நிறுவனத்தின் மிதக்கும் ஆயுதக் களஞ்சியத்தில் சட்டவிரோத ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டுள்ளதாக அப்போது பரபரப்பான செய்திகள் வெளியாகியிருந்தன.

எனினும் தற்போது குறித்த நிறுவனம் தொடர்பான வழக்கு வாபஸ் பெறப்பட்டுள்ளது. இவ்வாறான சம்பவங்கள சந்தேகத்துக்கு உரியவையாகும்.

எனவே இவை தொடர்பில் புலனாய்வுப்பிரிவினர் புதியதாக விசாரணைகளை ஆரம்பிக்க வேண்டும் என்றும் சிவில் அமைப்புகள் கோரிக்கை வைத்துள்ளன. (இ-7)

## உள்ளூராட்சி மன்றத் தேர்தல் பழைய முறையில் நடைபெறும்

பழைய முறையில் உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்த அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக அரசாங்கத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

உள்ளூராட்சி மன்ற சட்டங்களின் அடிப்படையில் தொகுதிவாரி முறையில் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் நடத்தப்பட வேண்டும். எனினும், எல்லை நிர்ணயம் தொடர்பில் ஆளும் கட்சிக்கு உள்ளேயே எதிர்ப்பு கிளம்பியுள்ளது. இதனால் இந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலை மட்டும் பழைய முறையில் நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

புதிய தேர்தல் முறைமைக்கு அமைய எல்லை நிர்ணய நடவடிக்கைகள் பூர்த்தியாகியுள்ளதுடன், இந்த நிர்ணயம் பற்றிய விபரங்கள் வர்த்தமானி ஊடாக அறிவிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

எனினும், எல்லை நிர்ணய நடவடிக்கைகள் ஒருதலைப்பட்சமான அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

இதனால் எல்லை நிர்ணயப் பணிகள் மீள் பரிசீலனைக்கு உட்படுத்தப்பட வேண்டுமென கோரிக்கை விடுத்துள்ளனர்.

இந்த நடவடிக்கையை மேற்கொள்ள சில மாத கால அவகாசம் தேவை என்பதனால், இம்முறைத் தேர்தலை பழைய முறையில் நடத்துவது குறித்து அரசாங்கம் கவனம் செலுத்தி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (இ-7)

## சூதாட்டம்; ஐவர் கைது

மது விற்பனை நிலையத்தில் சூதாட்டத்தில் ஈடுபட்ட ஐந்து பேர் வட்டுக்கோட்டைப் பொலிஸாரினால் நேற்று முன்தினம் இரவு கைது செய்யப்பட்டுள்ளார்கள். மூளாய் பகுதியில் உள்ள மதுபான விற்பனை நிலையததின் பின்னால் உள்ள மறைவிடம் ஒன்றில் இருந்து இந்த ஐந்து பேரும் சூதாட்டத்தில் ஈடுபட்டுள்ளார்கள்.

குறித்த மது விற்பனை நிலையத்தில் இவ்வாறான சம்பவம் நடைபெறுவதாக வட்டுக்கோட்டைப் பொலிஸாருக்கு தகவல் கிடைக்கப் பெற்றிருந்த நிலையில், நேற்று முன்தினம் இரவு திடீரென சுற்றி வளைப்பு நடவடிக்கையை மேற் கொண்டார்கள். இதன் போது குறிப்பிட்ட ஐந்து பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களிடம் வட்டுக்கோட்டைப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளார்கள். (இ-7)

## எதிர்க்கட்சியில் அமரும் சு.கட்சி உறுப்பினர்கள் தொகுதி அமைப்பாளர் பதவியையிழக்க நேரிடும்

எதிர்க்கட்சியில் அமரும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்கள், தொகுதி அமைப்பாளர் பதவியை இழக்க நேரிடும் என தெரிவிக்கப்படுகிறது.

கட்சி அதிகாரிகள் இந்த தீர்மானத்தை எடுத்துள்ளதாக நம்பகமான வட்டாரங்களின் ஊடாக தகவல் கிடைத்துள்ளது என சிங்கள ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இதன்படி, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் 20 நாடாளுமன்ற உறுப்பினர்கள் தங்களது அமைப்பாளர் பதவியை இழக்க நேரிடும் என தெரிவிக்கப்படுகிறது.

தேசிய அரசாங்கத்திற்கு ஆதரவளிக்காது எதிர்க்கட்சியில் அமரும் சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்கள் பட்டியலில், மகிந்த ராஜபக்ஷ உள்ளிட்ட 20இற்கும் மேற்பட்ட உறுப்பினர்கள் உள்ளடங்குகின்றனர்.

ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் 201 நாடாளுமன்ற உறுப்பினர்கள் தேசிய அரசாங்கத்தின் உறுப்பினர்களாக கருதப்படுவர் என அண்மையில் அவைத் தலைவர், கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் அறிவித்திருந்தார்.

இதன்படி மகிந்த ராஜபக்ஷ, தினேஷ் குணவர்தன, வாசுதேவ நாணயக்கார, விமல் வீரவன்ச ஆகியோருக்கு நாடாளுமன்றில் பின்வரிசை ஆசனங்களை வழங்க சபாநாயகர் தீர்மானித்துள்ளார்.

நாடாளுமன்றின் எதிர்க்கட்சி உறுப்பினர்களாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் ஜே.வி.பி. உறுப்பினர்கள் காணப்படுகின்றனர்.

எனவே அவர்களுக்கு எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கான ஆசன ஒதுக்கீட்டில் முன்னுரிமை அளிக்கப்படவுள்ளதாக சிங்கள ஊடகம் மேலும் தெரிவித்துள்ளது. (இ-7)

## இன்று ஒரு தகவல்

### நான் நான் என்று ஏன் மார்தட்டுகிறோம்

கணவன், மனைவிக்குள் கருத்து வேறுபாடு. இந்த இருபது வருஷத்துல பெரிசா எனக்கு என்ன செஞ்சீங்க...? ஏதாவது சந்தோசப்படறாப்ல வாங்கித் தந்ததுண்டா? என்று பொருமுகிறாள் மனைவி. எங்க...உன் நெஞ்சில கைவைச்சு சொல்லு!என்று கணவன் அலறுகிறான். ஒரு நிமிடம் ஏன் நெஞ்சில் கைவைக்க வேண்டும்?யோசியுங்கள்.

மரணத்தால் கணவனைப் பிரிந்த துயரத்தில் அழுகிற மனைவி என்னை விட்டுட்டுப் போயிற்றீங்களே என்று அலறுகிற போது என்னை என்கிற பாவனைக்கு அடையாளமாக நெஞ்சில் அறைந்து கொள்கிறாளே ஏன்?. யோசியுங்கள்.

நானா ஏமாத்துவேன்...நானா ஏமாத்துவேன் என்று வருந்துகிற நண்பன் நான் என்கிற போதெல்லாம் இதயத்தில் கைவைத்துக் கைவைத்துப் பேசுவது ஏன்? யோசியுங்கள்.

நான், என்னை என்கிற பாவங்கள் நெஞ்சுடன் தொடர்புடையவையா? மனிதன் உணர்ச்சியின் மொத்த வடிவம். உணர்ச்சியின் மொத்த வடிவம். உணர்ச்சியின் மையப்புள்ளி நெஞ்சு. கோபம்,தாபம், காமம்,கொடூரம், வஞ்சனை என்கிற உணர்ச்சிகளின் வேறுபாட்டைத் துல்லியமாக உணர்த்தும் சதைத்துண்டு மையவட்டம் நெஞ்சு. அது நான்காவது சக்கரம். அநாகதம் என்பது அதன் பெயர். அது உணர்ச்சிகள் மையம். நெஞுசுக்கும் நாபிக்கும் இடையே உள்ளது மூன்றாவது சக்கரம் மணிபூரகம். உடல் உறுப்புக்களில் கல்லீரல், கணையம், இரப்பை ஆகியவை இந்தச் சக்கரத்துள் அடக்கம்.

இதயத்தில் அன்பு, கருணை பாய்ச்சுபவர், உலகெங்கும், அதை வழிந்தோட விடுமுவர் குண்டலினி அநாகத நிலையில் உள்ளவர்கள். அநாகத நிலை வரை குண்டலினி மேல் எழுந்து இறங்குவது சுலபம்... பலருக்கு இந் நிலை வாய்க்கும். ஆனால் அநாகதம் கடப்பது என்பது மிகச் சிலருக்கே சாத்தியம். காரணம் மூலாதாரம், சுவாதிஷ்டானம் இரண்டு சக்கரங்களும் பஞ்ச பூதங்களில் பூமியுடன் தொடர்புடையவை. மணிபூரகம், அநாகதம் இரண்டும் தண்ணீருடனும் தொடர்புடையவை. விசுக்தி காற்றுடனும்,ஆக்ஞா நெருப்புடனும் சம்பந்தமுடையவை. மண்ணும் தண்ணீரும் கீழ்நோக்கிப் பாயும் வலிமை பெற்றவை. காற்றும் நெருப்பும் மேல் நோக்கிப் பாயும் வலிமை மிக்கவை. அநாகதம் கீழ், மேல் நிலைகளின் சங்கமம். இங்கிருந்து மனிதன் கீழ் நோக்கிப் பயணித்து விலங்கானதும் உண்டு. வீணானதும் உண்டு. மேல் நோக்கிப் பயணித்து கடவுளாவதுமுண்டு. எனவே கடவுள் விலங்கு என்பதன் மையப்புள்ளியாக மனிதன் நெஞ்சை (அநாகத்தை) தட்டித் தட்டி நான் நான் என்று மார்தட்டிக் கொள்கிறான்.

விசுக்தி, ஆக்ஞை, சகஸ்ரம் என்று மேல்நோக்கிப் போய்விட்ட இயேசு, புத்தர், மகாவீரர், வள்ளலார் போன்ற மகான்கள் கூட அநாகதம் வரை கீழ் இறங்கி வந்து மனித நிலையில் நம்முடன் வாழ்ந்து அன்பு காட்டுவார்கள். அதைவிட கீழ் இறங்கி மணிபூரகம், சுவாதிஸ்டானம், மூலாதாரத்திலிருந்து கீழான வாழ்வு வாழமாட்டார்கள்.

இதயத்தின் நான்கு அறைகளில் தனித்தனியாக நல்ல இரத்தமும் கெட்ட இரத்தமும் உண்டு. மொத்தமாகப் பார்த்தால் நல்லதும் கெட்டதும் சுமந்தது இதயம். நல்லது கெட்டதன் மையப்புள்ளி அது. மருத்துவம் கடந்து ஆன்மீகமாக இதயத்தைக் கவனித்தால் நல்லது கெட்டது கலந்த மனிதனின் மையம் இதயம். எவ்வளவு பொருத்தம் பார்த்தீர்களா?

ஞானம் நெருப்பாய் எரியும் ஆக்ஞையில் நிற்பவர்கள் கூட கருணை காரணமாக அநாகத்தில் நின்று தண்ணீராய் குளிர்வார்கள், கருணை பொழிவார்கள்.

உதாரணம் சொல்கிறேன்,

புத்தர் தம்மிடம் வந்த ஞானம் பெற்ற சீடரைத் தனித்துப் போய் மக்கட்கு ஞானம் புகட்ட அனுப்பினார். அப்போது சீடரைப் பார்த்து ஒரு குறிப்பிட்ட ஊரைச் சொல்லி அங்கு மட்டும் போக வேண்டாம். வேறு ஊர் எங்கு வேண்டுமானாலும் போகலாம் என்றார் புத்தர். அதற்கான காரணம் தெரிந்து கொள்ளலாமா? என்று பணிவுடன் கேட்டார் சீடர். அந்த ஊர் மக்கள் உலக நாட்டம் மிக்கவர்கள்... ஞானம், ஞானிகளைப் பற்றி அறிய மாட்டார்கள் என்றார் புத்தர்.

அப்படியானால் அங்கு தானே நான் அவசியம் பணி புரிய வேண்டும். ஏதும் அறியாதவருக்குத் தானே உதவி தேவை...அங்கு பணி புரிய உத்தரவு தாருங்கள் என்று கருணையுடன் கேட்டார் சீடர்.

அவர்கள் உன்னைப் பரிகசிப்பார்கள் என்றார் புத்தர். அவர்கள் என்னை அடிக்கவில்லையே என்று அப்போது நான் மகிழ்வேன் என்றார் சீடர்.

அடித்தால்...என்று இழுத்தார் புத்தர். நல்லவேளை என்னைக் கொலை செய்யவில்லையே என்று மகிழ்வேன். அவர்களிடம் நன்றியுள்ளவனாக இருப்பேன் என்றார் சீடர்.

ஒருவேளை உன்னைக் கொன்று விட்டால்...என்று தயக்கத்துடன் இழுத்தார் புத்தர்.

ஆகா இந்த உடல் எனக்கு எவ்வளவு உபாதையாக இருந்தது... அதிலிருந்து என்னை மீட்டு முக்தி தந்தார்களே என்று நன்றி பாராட்டுவேன் என்றார். சீடர் கண்ணீருடன் அவரைத் தழுவி நீ எங்கு வேண்டுமானாலும் போகலாம். பூரணத்தகுதி வந்து விட்டது என்று வாழ்த்தினார் புத்தர்.

விலங்கு நிலையில் இருப்பவர்களின் உச்சியாக மனித நிலையும் தேவ நிலையில் இருப்பவர்களின் கீழாகிய மனித நிலையும்-ஹ்ருதயம் என்கிற அநாகத சக்கரத்தில் சந்திக்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் சினிமா வரலாறு

06

## தமிழில் வெளியான முதல் பேசும் படம்

## "காளிதாஸ்" -31-10-1931

...பின்னர், சென்னை புரசைவாக்கத்தில் தன் தந்தையின் "ஸ்டார் ஆப் தி ஈஸ்ட்'' பிலிம் கம்பனிக்காக ஒரு சினிமா ஸ்டூடியோவை ரூ. ஒரு இலட்சம் செலவில் அமைத்தார். சென்னையில் அமைக்கப்பட்ட முதல் ஸ்ரூடியோ இது தான். இந்த ஸ்ரூடியோ வேப்பேரியில் ஆரம்பித்து கீழ்ப்பாக்கம் (தற்போது சங்கம் தியேட்டர் இருக்கும் இடம்) வரை பரந்து விரிந்திருந்தது.

இந்த ஸ்ரூடியோவில் தயாரிக்கப்பட்ட முதல் படம் "பீஷ்மா பிரதிக்ஞா" (பீஷ் மரின் சபதம்)

இந்தப்படத்தின் திரைக்கதை, ஒளிப் பதிவு, எடிட்டிங், டைரக்ஷன் ஆகிய பொறுப்புக்களை பிரகாஷ் கவனித்தார்.

1922 ஆம் ஆண்டு ரூ.12 ஆயிரம் செலவில் தயாரிக்கப்பட்ட இப்படம் ரூ. 60 ஆயிரம் வசூலித்துக் கொடுத்தது.

முதல்படத்தில் வெற்றி கண்ட பிரகாஷ் பின்னர் தயாரித்த படங்கள் தோல்வி அடைந்தன. அதனால் ஏற்பட்ட நட்டத்தைச் சமாளிக்க முடியாமல் ஸ்ரூடியோவை மூடினார். பிரகாஷ்.

"பீஷ்மா பிரதிக்ஞா" படத்தில் கிருஷ்ணன் வேடத்தில் நடித்தவர் ஏ.நாராயணன். கல்லூரியில் படித்துப் பட்டம் பெற்றவர். அவர் பின்னர் பட அதிபராக உயர்ந்தார். தர்ம பத்தினி (1929), ஞானசவுந்தரி (1929), கஜேந்திர மோட்சம் (1930), கருட கர்வ பங்கம் (1930), கோவலன் (1930)... என்று வரிசையாகப் பல படங்களைத்தயாரித்தார். சென்னையின் முதல் ஸ்ரூடியோவை அமைத்த பிரகாஷ் இவருடைய நண்பர். எனவே சில படங்களை டைரக்டர் செய்யும் வாய்ப்பை பிரகாஷ் பெற்றார்.

இந்தச் சமயத்தில்தான் ஊமைப்பட யுகம் முடிவடைந்து. பேசும்பட யுகம் தொடங்கியது.

**காளிதாஸ்**



இந்தியில் முதல் பேசும் படத்தை தயாரித்த பம்பாய்க்காரர் அர்தேஷ் இரானி, பிற மொழிகளிலும் படம் தயாரிக்க விரும்பினார்.

தமிழிலும் தெலுங்கிலும் படம் தயாரிக்க முடிவு செய்த அவர் ஒரே கல்லில் இரண்டு மாங்காய்களை அடிக்கத் தீர்மானித்தார்.

எப்படியென்றால் தமிழ் நாடக மேடைகளில் புகழ் பெற்று விளங்கிய டி.பி.ராஜலட்சுமியை கதாநாயகி வேடத்துக்கு ஒப்பந்தம் செய்தார். தெலுங்கு நடிகர் ஒருவர்தான் கதாநாயகன்.

கதாநாயகி தமிழில் பேச கதாநாயகன் தெலுங்கில் பேசினார்.

தமிழ், தெலுங்கு ஆகிய இரு மொழிகளுக்கும் முதல் படம் "காளிதாஸ்'' தான். படத்தை டைரக்டர் செய்தவர் எச்.எம். ரெட்டி.

1931 ஆம் ஆண்டு ஒக்டோபர் 31 ஆம் திகதி சென்னையில்'' சினிமா சென்ட்ரல்'' தியேட்டரில் ''காளிதாஸ்" ரிலீஸ் ஆகியது. முதல் தமிழ் பேசும் படத்தைக் காண ரசிகர்கள் கூட்டம் அலை மோதியது.

(''சினிமா சென்ட்ரல்" தற்போது "முருகன் டாக்கீஸ்" என்ற பெயரில் இயங்கி வருகிறது. இந்தியாவின் முதல் பேசும் படமான ''ஆலம் ஆரா''வும் இங்குதான் திரையிடப்பட்டது.)

**படத்தில் புதுமைகள்**

புராணத்தில் இடம் பெற்றுள்ள மகாகவி காளிதாஸ் கதைதான் இப்படத்தின் கதை.

ஆனால் "ராட்டினமாம் -காந்தி கை பாணமாம்'' என்ற தேசபக்தி பாடல் இதில் இடம் பெற்றிருந்தது.



(சுதந்திரப் போராட்ட காலத் தில் புராண நாடகங்களிலும் படங்களிலும் தேசபக்தி பாடல்களை நுழைத்து விடுவார்கள்! நாடக மேடையில் மயில் மீது உட்கார் ந்திருக்கும் முருகன். "கதர்க்கப் பல் கொடி தோணுதே'' என்பதுபோன்ற பாடல்களைப் பாடிய சம்பவங்கள் நிறைய உண்டு கதாநாயகி தமிழில்கேட்டகேள்விகளுக்கு கதாநாயகன் தெலுங்கில் பதில் கூற இந்த இரு மொழிகளும் தெரியாத துணை நடிகர்கள் இந்தியில் பேசினார்கள். *(தொடரும்)*

# ஆத்ம ஞானத்தைத் தேடி

**ஆன்மீகம் 277**

## அஹங்காரத்தை விடுதல்

...நீங்கள் என்னை இதே உடையில் பார்க்கிறீர்கள். அதே பாடல்களைக் கேட்கிறீர்கள். தினமும் அதே குரலைக கேட்கிறீர்கள். ஆனாலும் எபபொழுதும் அதே ஆர்வத்துடன் இருக்கிறீர்கள். உங்கள் வாழ்க்கையில் வேறு யாருடனாவது இதேபோன்று தொடர்ந்து இருக்க முடியும் என்று எண்ணுகிறீர்களா? புரிந்து கொள்ளுங்கள். நீங்கள் உணரும் அந்த அழகை ஒளி வீசச் செய்வதும் உங்களை ஈர்ப்பதும் இருப்புதான் நபர் அல்ல.

உங்களைப் பொறுத்தவரை நீங்கள் ஒரு நபர்[1] ஆனால் என்னைப் பொறுத்தவரை நான் ஒரு வெறும் இருப்பு[2] அவ்வளவு தான். அஹங்காரமற்ற இருப்பு மிகுந்த ஆற்றலுடையது. அதுவே உங்களை வெறுமனே கவர்கிறது. என்னை விட இன்னும் சிறந்த தோற்றத்துடன் மிகவும் அழகாக இருக்கும். ஆணழகர்களும் நடிகர்களும் எத்தனை பேர் இருக்கிறார்கள். இல்லையா? அவர்களிடமும் நீங்கள் கவர்ந்து இழுக்கப்பட்டிருக்கலாம். ஆனால் என்னிடம் இருப்பது போன்ற ஒரு ஆழமான ஏக்கத்துடன் அல்ல.

இங்கு ஏக்கம் உங்கள் இருப்புத் தன்மையிலிருந்து வருகிறது. ஏனெனில் உங்கள் இருப்புத்தன்மை இந்த வடிவத்தின் பின்னாலுள்ள தெய்வீகத்தைப் பார்க்கிறது. அதுவே உங்கள் இருப்புத் தன்மையின் ஒரே நோக்கம். உங்கள் இருப்புத் தன்மைக்கு அஹங்காரமற்ற இருப்பு மிகவும் பரவசத்தைத் தருகிறது. அதனால்தான் நீங்கள் மீண்டும் மீண்டும் என்னை நோக்கி ஈர்க்கப்படுகிறீர்கள்.



பாருங்கள் ஒவ்வொரு மனிதனின் அடி ஆழத்திலும் கடவுளை உணரும் ஏக்கம் இருக்கிறது. ஆனால் அதை அவனால் உணர முடிவதில்லை. நீங்கள் என்னைப் பார்க்கும் பொழுது என்னிடம் ஈர்க்கப்படுகிறீர்கள். அந்த ஈர்ப்பு எதனால் என்று ஆச்சரியப்படுகிறீர்கள். அந்த ஈர்ப்பு உங்கள் இருப்புத் தன்மையின் அழைப்பு.

ஆனால் நீங்களே உடனே அது என்னவாக இருக்கும் என்று எண்ண ஆரம்பித்து விடுகிறீர்கள். உங்களுக்கு உங்கள் மூளையை உபயோகித்து எல்லாவற்றையும் தர்க்கமாகக் குறைத்துவிட மட்டுமே தெரியும். கடவுள் தர்க்கத்திற்கு அப்பாற்பட்டவர். அதனால்தான் உங்களால் உங்கள் தர்க்கத்தைக் கொண்டு என்னிடம் ஏன் ஈர்க்கப்படுகிறீர்கள் என்பதை விளக்க முடியவில்லை.

நீங்கள் அனைவரும் இங்கு மணிக்கணக்காக கண் இமைக்காமல் வாய் பிளந்து என்னைப் பார்த்துக் கொண்டு எது அவ்வாறு உங்களை வாய்பிளக்க வைக்கிறது என்று வியப்பிலாழ்ந்து கொண்டிருக்கிறீர்கள். உங்கள் ஏக்கம் வீட்டை அடைந்து விடும் ஏக்கம். பல பிறவிகளாக நீங்கள் இந்த ஏக்கத்தைப் பூர்த்தி செய்து கொள்ள முயற்சி செய்து வெற்றி பெறாததால் மீண்டும் திரும்பி வந்திருக்கிறீர்கள். இன்னொரு பிறவி எடுத்திருக்கிறீர்கள்.

இந்த ஏக்கத்தை உணரும் பொழுது உங்களில் சிலர் அதைத் தொடர்ந்து சென்று உங்கள் உள்நோக்கிய பயணத்தை ஆரம்பிக்கிறீர்கள். ஆனால் இன்னும் சிலரோ அச்சமடைந்து தப்பியோடி விடுகிறார்கள். நீங்கள் வெளி வட்டத்தி லேயே தயங்கி நின்று கொண்டு என்னை கவனித்துக் கொண்டிருக்கிறீர்கள். அதனால் ஏதேனும் நடந்தாலும் சுலபமாக ஓடி விட முடியும்.

*(தொடரும்)*

**பரமஹம்ஸ சுவாமி**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அமெ. தூதரகத்தை முற்றுகையிட்டு சென்னையில் கண்டனப் போராட்டம்

## மே.17 இயக்கத்தின் ஏற்பாட்டில்

(கொழும்பு)

**இலங்கைக்கு ஆதரவான நிலைப்பாட்டை எடுத்துள்ள அமெரிக்க அரசை கண்டித்து, சென்னையில் உள்ள அமெரிக்க தூதரகத்தை முற்றுகையிட்டு, மே 17 இயக்கத்தால் போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.**



கடந்த 11 ஆம் திகதி இடம் பெற்ற இம்முற்றுகைப் போராட்டத்தில் இதில் பல்வேறு இயக்கங்களைச் சேர்ந்த தோழர்கள் கலந்து கொண்டனர்.

தமிழக மக்கள் முன்னணியின் தோழர்கள் பொழிலன் மற்றும் அரங்க குணசேகரன், தற்சார்பு விவசாயிகள் சங்கத்தின் தோழர் கி.வே.பொன்னையன், தந்தை பெரியார் திராவிடர் கழகம், தமிழ்த்தேசியப் பேரியக்கத்தின் அருணபாரதி மற்றும் தோழர்கள், தமிழர் விடுதலை கழகத்தின் சுந்தமூர்த்தி மற்றும் தோழர்கள், தமிழர் விடியல் கட்சியின் பாபு மற்றும் தோழர்கள், தமிழ்த் தேசக் குடியரசு இயக்கத்தின் சிவகாளிதாசன் மற்றும் தோழர்கள், அணு சக்திக்கு எதிரான மக்கள் இயக்கத்தின் தோழர் முகிலன், தோழர் திருமலை உள்ளிட்டோர் கலந்துகொண்டனர். போராட்டத்தின் போது அமெரிக்காவின் கொடி தீயிட்டு எரிக்கப்பட்டது.

அமெரிக்கப் பொருட்களான கே.எப்.சி (KFC), பெபசி, கொக்ககோலா போன்றவற்றை புறக்கணிக்க வலியுறுத்தப்பட்டது.

பெப்சி, கொக்ககோலா நிறுவனங்களின் பொருட்களை உடைத்து தோழர்கள் எதிர்ப்பினை பதிவு செய்தனர்.

"அயோக்கிய அமெரிக்காவே தமிழீழத்தை விட்டு வெளியேறு. திருகோணமலை தமிழர் நிலம். நமது கடல் தமிழர் கடல். ஏகாதிபத்தியங்களுக்கு இடமில்லை.

தமிழீழ விடுதலையை அழிக்கும் அமெரிக்காவின் மீது பொருளாதாரப் போர் தொடுப்போம்.

அமெரிக்க - இந்திய-மேற்குலகின் கூட்டுச் சதியினை முறியடிப்போம்.

தமிழீழ இனப்படுகொலைக்கு துணைபுரிந்த அமெரிக்க - இந்திய-இங்கிலாந்து அதிகாரிகள் மீதும் சர்வதேச விசாரணை வேண்டும்.

தமிழீழத்தில் நடந்ததும், நடப்பதும் இனப்படுகொலை. இனப்படுகொலைக்கான சர்வதேச விசாரணயே தேவை: உள்நாட்டு விசாரணையோ, கலப்பு பொறிமுறையோ அல்ல தமிழீழத்திற்கான பொது வாக்கெடுப்புமே நமது கோரிக்கை. தமிழீழ விடுதலையே ஒரே தீர்வு" போன்ற கோசங்களை இப்போராட்டத்தின் போது எழுப்பினர். (இ-7)

## சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி | மருதனார்மடம் |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 80 | 80 | 90 |
| உருளைக்கிழங்கு | 90 | 110 | 90 | 100 |
| பச்சைமிளகாய் | 140 | 140 | 200 | 140 |
| தக்காளி | 50 | 60 | 80 | 40 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 50 | 60 | 60 |
| கோவா | 60 | 70 | 60 | 60 |
| கரட் | 60 | 120 | 140 | 70 |
| பூசணி | 30 | 30 | 40 | 40 |
| புடோல் | 40 | 40 | 40 | 40 |
| வாழைக்காய் | 80 | 50 | 40 | 60 |
| சின்ன வெங்காயம் | 100 | 100 | 100 | 70 |
| பெரிய வெங்காயம் | 100 | 110 | 100 | 120 |
| பாகற்காய் | 140 | 80 | 100 | 80 |
| வெண்டிக்காய் | 60 | 50 | 80 | 40 |
| கருணைக் கிழங்கு | 100 | 90 | 80 | 100 |
| பயற்றங்காய் | 80 | 70 | 80 | 90 |
| லீக்ஸ் | 80 | 80 | 80 | 60 |
| பீற்றூட் | 40 | 40 | 50 | 50 |
| கறிமிளகாய் | 120 | 100 | 120 | 120 |
| முருங்கைக்காய் | 120 | 80 | 100 | 140 |
| போஞ்சி | 150 | 160 | 160 | 170 |
| கத்தரிதம்புள்ள | 60 | 40 | 70 | 80 |
| கீரை - 1 பிடி | 30 | 20 | 30 | 20 |
| தேசிக்காய் | 60 | 100 | 120 | 60 |
| தேங்காய் (ஒன்று) | 50 | 40 | 40-45 | 50 |
| இராசவள்ளி | 140 | — | — | 240 |
| வெங்காயப்பூ | 200 | — | 200 | 100 |
| முள்ளாங்கி | 30 | 40 | 80 | 40 |
| பொன்னாங்காணி | 30 | 30 | 30 | 20 |
| வல்லாரை | 10 | 10 | 20 | 20 |

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 488

Search for people, places and things Nagendram Home

விது விதுஸ்





சுஜி செல்வா




ஹாட் பெயின்

Boys பார்த்தா : Site
Girls பார்த்தா : Look
Boys பேசினா : ஜொள்ளு
Girls பேசினா : Friendly ...
Boys கையப் பிடிச்சா : பொறுக்கி
Girls கையப் பிடிச்சா : Feelings
Boys Road Cross பண்ணினா : டேய் புறம்போக்கு வீட்டில சொல்லிற்று வந்தியா ...
Girls Road Cross பண்ணினா: பார்த்துப் போம்மா..
Boys Propose பண்ணினா Misunderstanding
Girls Propose பண்ணினா True Affection
ஆக மொத்தம் Girls na "Gold"
Boys na "Clean Bold". என்ன வாழ்கடா இது.....................?

ரவிவர்மன் ராஜகோபால்




புஸ்பசிங்கம் றீகன்




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valam.puri.16 எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதி மைத்திரியின் பெரும் அரசியல் சாதனை

புதிய தேசிய அரசாங்கமொன்றின் அமைச்சரவை அமைச்சர்களுடன் ஒருமித்த விதமாக சத்தியப்பிரமாணம் செய்துகொண்டதன்மூலம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இருவரும் கடந்த வெள்ளிக்கிழமையன்று தமது அரசின் நல்லாட்சிக்கான புதிய அதிகார முத்திரையினைப் பதித்து பெரியதொரு அரசியல் சாதனையை ஏற்படுத்தியிருந்தனர்.



மைத்திரிபால சிறிசேன 10 மாதங்களுக்கு முன்னர் தனது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடன் உறுப்புரிமை நீங்காத பதவி விலகிய நிலையில் ஜனாதிபதி தேர்தலுக்கான பொது வேட்பாளரான தன்னைப் பிரகடனப்படுத்திக்கொண்ட வேளையில் சிறிதளவே அறியப்பட்ட ஒரு அரசியல்வாதியாக மட்டுமே இருந்தார். ஒரு தேசிய அரசாங்கத்திற்கான அவரது யோசனை நிராகரிக்கப்படாத போதிலும் உண்மையில் அது ஏற்படுத்தப்படக் கூடிய ஒன்றாகப் பெரிதும் கருத்திற் கொள்ளப்படவுமில்லை. இலங்கை அரசியலில் மமதையுடன் கூடிய வெற்றிப் பெருமிதக் கற்பனையுடனேயே தொடர்ந்தும் பவனி வந்து கொண்டிருக்கும்



மகிந்த ராஜபக்ஷவைத் தோற்கடிப்பது பெரும்பாலும் மிகவும் சிரமமானதே என்று பல அரசியல் அவதானிகள் நினைத்திருந்தது போலவே ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் தோன்றியதென்னவோ உண்மைதான். இருந்தும் மைத்திரிபால சிறிசேனவின் மேற்படி யோசனைக்கு தனது சம்மதத்தை ஒருவித மௌனப் பிரதிபலிப்பாக அவர் வெளிப்படுத்தியதாகவே தோன்றுகிறது. எதிர்த்தரப்பு அரசியல் கட்சிகளின் ஒத்துழைப்பு அவசியமாக தேவைப்பட்டது. இருந்தும் படாடோபமற்ற அரசியல்வாதியும் நேர்த்தியான குணநலன்களைக் கொண்டவருமான மைத்திரிபால சிறிசேன தனது அரசியல் இயந்திரமான சொந்த கட்சியின் பக்கத்துணை இல்லாமல் ஐக்கிய தேசியக் கட்சியின் ஆதரவுடன் மட்டும் வெல்லப்பட முடியாத ஓர் அரசியல் சக்தியாக வெகுவிரைவிலேயே உருவெடுத்திருந்தார். ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு முன்னர் இருந்தது போன்ற ஓர் வெல்லப்படமுடியாத பலமிக்க சக்தியாக ஐக்கிய தேசியக் கட்சி என்றுமே கருதப்பட்ட ஒன்றல்ல. ஜனவரி 8 ஆம் திகதி தேர்தலில் சம்பந்தப்பட்ட அனைவருக்கும் அதிர்ச்சியூட்டும் விதத்தில் வன்முறையற்ற சமாதானமான ஓர் வெற்றியை மைத்திரிபால சிறிசேன அமர்க்களமில்லாமலே பெற்றிருந்தார். அவரது அரசியல் திறமைகள் ஜனாதிபதி தேர்தல் வெற்றிக்குப் பின்னரே நிதர்சனமாயிற்று. அவரது முன்னாள் அரசியல் கூட்டணியான ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அவரை நிராகரித்ததுடன் தீவிர எதிர்ப் பாளியாகவும் ஆகிற்று. அவரே பொதுச் செயலாளராக பதவி வகித்திருந்த. சொந்த ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி பெருமளவில் அவரை கடுமையாகவே நிராகரித்திருந்தது. இருந்தும் அவர் கட்சியின் சில ஆதரவாளர்களுடன் தொடர்ந்தும் அதன் பொதுச் செயலாளராக நீடித்திருந்தார். கட்சி சாசனத்தில் காட்டப்பட்டுள்ள முன்னுதாரணப்படி கட்சியிலுள்ளவர் ஜனாதிபதியாகியிருக்குமிடத்து அவரே கட்சியின் தலைவராகவுமிருப்பார் என்ற விடயத்தைச் சுட்டிக்காட்டி ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் கட்டுப்பாட்டையும் அவரே பெற்றுக்கொண்டார். ஐக்கிய மக்கள் சுதந்திரக்கூட்டமைப்பின் செல்வாக்குமிக்க பெரியகட்சி ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி என்பதால் வலுவானதும் தலைமையை மதியாததுமான எதிர்ப்புகளுக்கு மத்தியிலும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் கட்டுப்பாட்டையும் அவரே பெற்றுக்கொண்டார்.

ஜனாதிபதி பதவியை மைத்திரிபால சிறிசேன பெற்றுக்கொண்டதுமே அமைப்பு ரீதியில் ஓர் அரசியல் புதுமையை அவர் மேற்கொண்டார். ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு பாராளுமன்றத்தில் பெரும்பான்மைப்பலம் இல்லாத போதிலுங்கூட ரணிலை அவரேதான் பிரதமராகவும் நியமித்தார்.

வன்மையான வீராவேச- வெட்டிப்பேச்சு வழக்கற்றவரும் இயல்பாகவே அ... எளிமையாகவும் வெளிப் படையாகவும் பேசும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் அத்தியாவசியப் பொருட்கள் மீதான விலைக்குறைப்பு வாக்குறுதி மக்கள் மனதில் நம்பிக்கையை ஏற்படுத்தியது. அத்துடன் அவரது இடைக்கால அரசின் நியாயமான செயற்பாடுகளும் சேர்ந்து பாராளுமன்றத் தேர்தலில் வெற்றியைச் சாத்தியமாக்கிற்று.

**ஜனாதிபதி மைத்திரிபாலவின் பெரும் அரசியல் சாதனை எனும் தலைப்பில் சண்டேலீடர் ஆசிரியர் தலையங்கத்தில் வெளியான கட்டுரையின் தமிழாக்கம் இங்கு பிரசுரமாகிறது.**

எப்படியான ஒரு சந்தர்ப்பத்திலும் மகிந்த ராஜபக்ஷவை பிரதமர் பதவிக்கு நியமிக்கப் போவதில்லை என ஏற்கனவே சபதம் பூண்டிருந்த மைத்திரிபால சிறிசேனவுக்கு மகிந்தவையே பிரதமர் வேட்பாளராக நியமிக்க வேண்டுமென பாரிய நிர்ப்பந்தங்களை ஏற்படுத்தும் விதத்தில் எதிர் நடவடிக்கைகள் பலவும் இடம்பெற்றன. தமது இக்கோரிக்கையை வலியுறுத்தி மகிந்தவுக்கான தமது ஆதரவை வெளிப்படுத்தும் பிரமாண்டமான பேரணிகளை அவரது சொந்த கூட்டணியையும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியையும் சேர்ந்த உறுப்பினர்களே ஏற்பாடு செய்து நடத்தியது அவருக்குப் பாரிய நெருக்கடிகளை ஏற்படுத்துவதாகவே இருந்தது. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பும் அவற்றின் மத்திய குழுக்களுங்கூடவே மைத்திரிபால சிறிசேனவின் கட்டுப்பாட்டில் இருப்பது தேர்தலுக்கான அபேட்சகர் தெரிவிற்போலவே முதன்மைத் தெரிவுப்பட்டியல் தயாரிப்பிலும் அவருக்கு அனுகூலமான ஒன்றேதான். பின்னர் மேற்படி இரு கட்சிகளினதும் செயலாளர்களை பதவி நீக்கம் செய்த அவர் தனது சொந்த விருப்பத்திற்கானவர்களையே அப்பதவிகளுக்கு நியமித்துமிருந்தார். இவ்வித இரு பெரும் வலதுசாரி தலைவர்களும் போட்டிக்களத்திலிருந்து முற்றாகவே அகற்றப்பட்டனர். இந்த இருவருமே தேசியப் பட்டியலில் தமக்கு இடம் கிடைக்கும் என்ற எதிர்பார்ப்புடன் இருந்தவர்கள்.

ஆழமும் நிதானமும் கொண்ட இந்த தளரா உறுதிவாய்ந்த தலைவர் தனது எதிரிகளுக்கு கொடுத்திருக்கும் தெளிவான செய்தியும் இதுதான். குழப்பத்திற்கிடமில்லாத அவரது தொழில் சூத்தமும் இதுவேதான்!

கடந்தவாரம் இடம்பெற்ற எதிர்க்கட்சித்தலைவர் தெரிவிலும் நிதர்சனமாக புலப்பட்டதும் இதுவேதான். ஒப்பீட்டளவில் இளமைத்துடிப்பும் தாராளமான அரசியல் அறிவும் பொதுஅறிவுப் பக்குவமும் நிறைந்தவரான பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் எதிர்க்கட்சித் தலைவர் ஆவதற்கு விருப்பம் தெரிவித்திருந்தார். இலங்கைத் தமிழரசுக் கட்சியும் நீண்டகால அனுபவம் வாய்ந்த அரசியல்வாதியான இரா.சம்பந்தனையே அவரது கட்சி சார்பாக அப்பதவிக்கு போட்டியாக அறிவித்திருந்தது. அந்த இளம் போட்டியாளருக்கே அப்பதவிக்கான நியமனங்கோரி ஐம்பதுக்கு மேற்பட்ட உறுப்பினர்கள் அழைப்பு விடுத்ததுடன் அதுமட்டிலான ஆவணங்களும் பாராளுமன்ற சபாநாயகர் கருஜயசூரியவிற்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தது. எப்படியும் சம்பந்தனது பெயரே சமர்ப்பிக்கப்பட்டிருப்பதாக பகிரங்கமாக அறிவித்த சபாநாயகர் அதன்படியே எதிர்க்கட்சித் தலைவரையும் நியமிப்பதாக பிரகடனப்படுத்தினார். நடந்தது என்ன என்பதை எவருமே புரிந்து கொள்ளலாம். அந்த இளம் அபேட்சகரது பெயர் உண்மையில் அதிகார ஒழுங்குமுறைப்படி ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் அதிகாரபூர்வ செயலாளருடாக சபாநாயகருக்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கவில்லை.

ஐக்கிய தேசியக் கட்சிக்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்குமிடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தம் இரு வருடங்களுக்கானதாகுமென்பதால் இந்த ஒருமைப்பாட்டை சீர்குலைப்பதற்கென்றே சில குழுக்கள் தீர்மானத்துடன் செயற்படுவதாக தெரிகிறது.

ரணில் விக்கிரமசிங்க 37 வருடங்களுக்கும் கூடுதலான காலப் பாராளுமன்ற அனுபவங்கொண்டவரென்பதால் எதிர்வரும் சவால்களுக்கு முகங்கொடுக்கக்கூடியவரே. ஆனால் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் கைகளில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் முழுக்கட்டுப்பாட்டுடன் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் குறிப்பிடத்தக்க அளவிலான கட்டுப்பாட்டிற்குமான கடிவாளம் இருக்கும் காரணத்தால் தேசிய அரசாங்கத்தின் நலன்களை பயன் தாக்கமுள்ளவிதமாக பாதுகாத்துக் கொள்ளக் கூடிய தாகவேயிருக்கும்.

இந்த அரசாங்கத்தின்கீழ் ஆட்சியென்பது முற்றிலும் வித்தியாசமான பாணியிலமைந்ததாகவே இருக்கும். அதாவது தேசிய குறியிலக்குகளை எட்டுவதற்கான சபைகளாகவும் குழுக்களாகவும் தன்னைத்தானே பாராளுமன்றம் தேவைக்கேற்ப மாற்றியமைத்துக் கொண்டு செயற்படும்.

அரசாங்கத்திலும் எதிர்க்கட்சியிலும் உள்ள பல உறுப்பினர்களும் முக்கிய குறியிலக்குகளையும் அலசி ஆராய்ந்து நடைமுறைப்படுத்துவதற்கான திட்டங்களை வகுத்துச் செயற்படுத்தும் அதே நேரத்தில் அதனைச் சீர்குலைத்து முறியடிக்கும் தீர்மானத்துடனும் ஒருசிலர் ஈடுபட்டுக்கொண்டுதானிருப்பர்.

தேசிய அரசாங்கத்தை எதிர்க்கும் சில உறுப்பினர்கள் (பாராளுமன்ற உறுப்பினர்கள்) மிகவும் மூத்த



உறுப்பினர்களாகவும் கற்றறிந்த தகைமை வாய்ந்தவர்களாகவுமே இருக்கின்றனர். அரசாங்கத்தின் நகர்வுகளுக்கெதிரான அவர்களது சட்டபூர்வமான எதிர்ப்புக்கள் நல்லாட்சிக்கு அத்தியாவசியமென்ற விதத்தில் பாராட்டப்பட வேண்டியவையேயாகும்.

எப்படியும் பாராளுமன்ற செயற்பாடுகளுக்கு கூடுதலான அதீத நடவடிக்கைகளில் மட்டுமல்லாது சட்ட மீறல்களிலும் இறங்கும் முயற்சிகளுக்கும் தயாரான முரட்டுப் பேர்வழிகளாக தம்மைக் காட்டிக் கொள்ளும் அனுபவமற்ற இளம் தீவிரவாதப் போக்கினரும் இருக்கவே செய்வர். அரசியலில் இவ்வித ஆரம்ப ஞானதீட்சை பெற்றவர் போன்ற வீறாப்பான புதிய தரப்பினர் அனுபவசாலிகளான விவேகமிக்க ஆலோசகர்களால் வழிப்படுத்தப்பட வேண்டியவர்களேயாவர்.

தமிழில்:- யோகர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீதிக்கான தேடல் ஆவணப்படம் தொடர்பில் இலங்கை அரசுடன் கலந்துரையாட தயார்!

## கெலம் மக்ரே தெரிவிப்பு

(கொழும்பு)

**நீதிக்கான தேடல் திரைப்படம் தொடர்பில் இலங்கை அரசாங்கத்துடன் கலந்துரையாடல்களை நடத்தத் தயாராக இருப்பதாக அதன் தயாரிப்பாளர் கெலம் மக்ரே அறிவித்துள்ளார்.**




இதுகுறித்த செய்தியொன்றை பீ.பீ.சி. சிங்கள சேவை வெளியிட்டுள்ளது. குறித்த செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இலங்கையின் போர்க்குற்றங்கள் தொடர்பில் சர்வதேச விசாரணையை வலியுறுத்தும் நோக்கில் நீதிக்கான தேடல் ஆவணப்படம் தயாரிக்கப்பட்டுள்ளது. எனினும் வழமை போன்று இலங்கை அரசாங்கம் இது தொடர்பில் ஆதாரங்கள் இல்லை என்ற வழமையான மறுப்பை வெளியிட்டுள்ளது.

இந்நிலையில் ஆவணப்படத்திற்கு அடிப்படையாக அமைந்த ஆதாரங்கள் மற்றும் தடயங்கள் தொடர்பில் இலங்கை அரசாங்கத்துடன் கலந்துரையாடத் தயாராக இருப்பதாக அதன் தயாரிப்பாளர் கெலம் மக்ரே அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக கருத்து வெளியிட்டுள்ள கெலம் மக்ரே, தான் எதிர்வரும் 16ஆம்திகதி தொடக்கம் ஜெனீவாவில் இருக்கவுள்ளதாகவும், தனது கொலைக்களம், நோபயர் சோன் மற்றும் நீதிக்கான தேடல் ஆவணப்படங்கள் தொடர்பில் இலங்கை அரசாங்கம் விரும்பினால் ஜெனீவாவில் அரச பிரதிநிதிகளுடன் கலந்துரையாடல் ஒன்றை மேற்கொள்ளத் தயாராக இருப்பதாகவும் அறிவித்துள்ளார். (இ-7)

## மோதல்



(கொழும்பு)

ஶ்ரீலங்கா சுதந்திர கட்சியின் கண்டி மாவட்ட உள்ளூராட்சி உறுப்பினர்கள் சந்திப்பு நேற்று இடம்பெற்ற வேளை, அங்கு மோதல் நிலை ஒன்று தோன்றியுள்ளது.

ஶ்ரீங்கா சுதந்திர கட்சியின் பொதுச் செயலாளர் துமிந்த திஸாநாயக்க மற்றும் அமைச்சர் எஸ்.பீ. திஸாநாயக்க தலைமையிலான இச் சந்திப்பு மத்திய மாகாண ஆளுநரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் இடம்பெற்றுள்ளது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் முன்னாள் ஜனாதிபதிக்கு நெருங்கிய தரப்பினர் கருத்து வெளியிடப்பட்டமையினால் இம் மோதல் நிலைமை தோன்றியுள்ளது.

ஐக்கிய தேசிய கட்சியுடனான பங்கு கட்சிக்கு கடுமையாக கண்டனம் வெளியிடும் வகையில் கருத்து வெளியிட்டவர்கள் எதிர்வரும் உள்ளூராட்சி தேர்தலில் ஶ்ரீலங்கா சுதந்திர கட்சி பெரிய அளவிலான தோல்வியை சந்திக்கும் என குறிப்பிட்டுள்ளனர்.

கடந்த தேர்தலின் போது முன்னணிக்கு வாக்களித்தவர்களில் பெரும்பான்மையினர் எதிர்வரும் உள்ளூராட்சி தேர்தலில் சில காரணங்களுக்காக ஶ்ரீலங்கா சுதந்திர கட்சிக்கு வாக்களிக்காமல் இருப்பதற்கான நிலைப்பாட்டில் உள்ளனர் என கூட்டத்தின் போது சிலர் குறிப்பிட்டுள்ளனர்.

இரு தரப்பு உறுப்பினர்களையும் அமைதிப்படுத்துவதற்கு மேற்கொள்ளப்பட்ட முயற்சி தோல்வியடைந்துள்ள நிலையில், அதிக நேரம் செல்லும் வரையில் இச் சந்திப்பு கூச்சல் குழப்பம் நிலையில் தொடர்ந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (இ-7)

## ஐ.ம.சு.முன்னணியின் 47எம்.பிக்கள் எதிர்க்கட்சி வரிசையில் அமர்வார்கள்

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் 47 உறுப்பினர்கள் நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சி தரப்பில் அமரப் போவதாக அறிவித்துள்ளனர். நாடாளுமன்ற உறுப்பினர் குமார வெல்கம இந்த கருத்தை வெளியிட்டுள்ளார்.

ஏற்கனவே மகிந்த ராஜபக்ஷவின் தரப்பில் உள்ள 55 பேர் வரை எதிர்க்கட்சியில் அமரப் போவதாக அறிவித்திருந்தனர்.

எனினும் அதில் சிலர் அண்மையில் இடம்பெற்ற அமைச்சர்கள் மற்றும் ராஜாங்க, பிரதியமைச்சர்கள் பதவிகளை ஏற்றுக்கொண்டனர்.

இவர்களை தவிர தற்போது மகிந்த ராஜபக்ஷ தரப்பில் ஶ்ரீலங்கா சுதந்திரக்கட்சியில் 36 பேர் பதவிகள் எதனையும் ஏற்றுக் கொள்ளவில்லை.

இந்தநிலையில் சுதந்திரக் கூட்டமைப்பில் உள்ள ஏனைய கட்சிகளின் 11 பேரும் இணைந்து எதிர்க் கட்சியில் அமரப் போவதாக குமார வெல்கம தெரிவித்துள்ளார். (இ-7)

## ஆசிரியர் வெற்றிடங்கள் இவ்வருடம் நிரப்பப்படும்

நாடளாவிய ரீதியிலுள்ள அரச பாடசாலைகளில் நிலவும் சகல ஆசிரியர் வெற்றிடங்களையும் இவ் வருட முடிவிற்குள் நிரப்புவதற்கான வேலைத்திட்டமொன்றை கல்வி அமைச்சு விடுத்துள்ளதாக அமைச்சின் செயலாளர் உபாலி மாரசிங்ஹ தெரிவித்துள்ளார்.

கிராமப்புற கஷ்டப் பிரதேச பாடசாலைகளிலேயே அதிகளவான ஆசிரியர் வெற்றிடங்கள் காணப்படுவதாகவும், குறிப்பாக தகவல் தொழில்நுட்பம், கணிதம், விஞ்ஞானம், பௌதீகவியல், தொழில்நுட்பவியல், பாடங்களுக்கு கூடுதலான வெற்றிடங்கள் காணப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்புவதற்காக விண்ணப்பங்கள் கோரப்படும் போது வெற்றிடங்கள் உள்ள பாடசாலையை குறிப்பிட்டு விண்ணப்பம் கோரப்படுமெனவும், தெரிவு செய்யப்படும் ஆசிரியர்கள் குறித்த பாடசாலையில் ஐந்து வருடம் கடமையாற்றும் வகையில் கல்வியமைச்சுடன் ஒப்பந்தம் ஒன்று செய்து கொள்ள வேண்டுமெனவும் அவர் தெரிவித்தார்.

இவ் ஐந்து வருட காலப்பகுதிக்குள் இடமாற்றம் பெறவோ, வெளிநாட்டு வேலைவாய்ப்பிற்கோ, செல்ல முடியாதெனவும் அவ்வாறு செல்ல முயற்சித்தால் நியமனங்கள் இரத்துச் செய்யப்படலாம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## இந்திய மீனவர்கள் 16 பேரை விடுதலை செய்யத் தீர்மானம்

(கொழும்பு)

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் இந்திய விஜயத்தை முன்னிட்டு இலங்கை கடற்படையால் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள 16 இந்திய மீனவர்களையும் விடுதலை செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இரு நாட்டுக்கும் இடையிலான சிறநத நட்பு மற்றும் மனிதாபிமான நல்லெண்ண அடிப்படையில் இந்தய மீனவர்களை விடுதலை செய்ய தீர்மானிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இத் தமிழ்நாட்டு மீனவர்கள் கடந்த வாரம் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் புதிய பிரதமராக ரணில் விக்கிரமசிங்க தெரிவு செய்யப்பட்டதன் பின்னர் முதல் முறையாக இந்தியாவிற்கு விஜயம் மேற்கொள்கிறார். இந்த விஜயத்தை முன்னிட்டு கைது செய்யப்பட்டுள்ள 16 இந்திய மீனவர்களையும் விடுதலை செய்ய இலங்கை அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (இ-7)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழமுத்த மின் விநியோகங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக இன்று திங்கட்கிழமை தொடக்கம் எதிர்வரும் வெள்ளிக்கிழமை வரை காலை 8.30 மணி தொடக்கம் மாலை 5.30 மணி வரை வடமாகாணத்திலுள்ள சில பிரதேசங்களில் மின்விநியோகம் தடைப்பட்டிருக்குமென இலங்கை மின்சார சபை அறிவித்துள்ளது. அந்த வகையில், 14.09.2015 யாழ் .பிரதேசத்தில் அராலி சரஸ்வதி வித்தியாலயத்தடி, கருப்பிட்டிப் பிள்ளையார் கோவிலடி, அராலித் துறைமுகம், களவாத்துறை, அராலி வடக்கு, வல்லிபுரம், உயகதிர்காமம் ,புனந நகர், கற்கோவளம், மாதனை, நெல்லண்டை, பருத்தித்துறை வெளிச்சவீடு, சிவப்பிரகாசம், இணுவில் கந்தசாமி கோவில் பிரதேசம், கற்கோவளம் ஐஸ் தொழிற்சாலை ஆகிய இடங்களிலும் வவுனியா பிரதேசத்தில் செக்கட்டிப்புலவு பிரதேசம், மாமடுவிலிருந்து மகாகச்சக் கொடியவரை, பொகவஸ்வேவ, சளலங்கம, நமலகம, பிரப்பன் மடு, உளுக்குளம், தீவீரகம நய, றங்கிதகம, CEC கல்லுடைக்கும் ஆலை ஆகிய பிரதேசங்களிலும், வவுனியா கிறிட்டிலிருந்து பட்டாணிச்சூர் வரைக்கும் நெளுக்குளம் சந்தியிலிருந்து செட்டிகுளம் வரைக்கும் பண்டாரிக்குளம் பிரதேசத்திலிருந்து மதவுவைத்தகுளம் வரைக்கும் வவுனியா நகரப் பிரதேசம் A-9 வீதியில் (வவுனியா கன்றியிலிருந்து அழகல்ல பிரதேசம் வரைக்கும்) கோவில்குளம் பிரதேசத்திலிருந்து சிதம்பரபுரம் வரைக்கும் வெளிக்கும் பிரதேசத்திலிருந்து துட்டுவாகை வரைக்கும் நெடுங்குளம் பிரதேசத்திலிருந்து பொகவஸ்வேவ வரைக்கும்

15.09.2015 யாழ் பிரதேசத்தில் ஆனைக்கோட்டை, நவாலி, காக்கைதீவு, சாவற்கட்டு, கொக்குவில் மேற்கு ஆகிய இடங்களிலும் கிளிநொச்சி பிரதேசத்தில் ஓவசியர் கடை சந்தி, தரணிகுடியிருப்பு, நீவில், முக்கொம்பன், நல்லூர், தம்பிராய், பூநகரி, 4ம் கட்டை, நாவற்காடு, கேப்பாபிலவு, வற்றாப்பளை, முல்லைத் தீவு விமானப் படை-I மற்றும் II, முல்லைத்தீவு 59வது படைப்பிரிவு (14ESR- 01 மற்றும் 14ESR- 02), SFHQ-வற்றாப்பளை ஆகிய இடங்களிலும் வவுனியா பிரதேசதல் நவகம பிரதேசம் சின்னசிற்பிக்குளம் ஆகிய இடங்களிலும் மன்னார் பிரதேசத்தில் வட்டக்கண்டல், காத்தான்குளம், குருவில் ஆகிய பிரதேசங்களிலும்,

16.09.2015 யாழ் பிரதேசத்தில் அராலி சரஸ்வதி வித்தியாலயத்தடி, கருப்பிட்டிப் பிள்ளையார் கோவிலடி, அராலித் துறைமுகம், களவாத்துறை, அராலி வடக்கு, இணுவில் கந்த சாமி கோவில் பிரதேசம், பிப்பிலி சந்தி, கட்டுடை, அரசடி, ஆர்க் ஒழுங்கை (உடுவில்), கந்தரோடை, மதவடி, பெருமாள் கடவை, மாகியப்பிட்டி சந்தை, சண்டிலிப்பாய், ஆலங்குழாய், சீரணி சந்தி, சங்குவேலி, உரும்பிராய, உரும்பிராய் சந்தி, கற்பகப்பிள்ளையார் கோவில், உரும்பிராய் VC, ஐங்கரன் தொலைத்தொடர்பு நிலையம், உரும்பிராய் இந்துக்கல்லூரி ஆகிய இடங்களிலும் வவுனியா பிரதேசத்தில் வவுனியா கிறிட்டிலிருந்து பட்டாணிச்சூர் வரைக்கும் நெளுக்குளம் சந்தியிலிருந்து செட்டிகுளம் வரைக்கும் பண்டாரிக்குளம் பிரதேசத்திலிருந்து மதவுவைத்தகுளம் வரைக்கும் நெளுக்குளம் பிரதேசத்திலிருந்து சின்னத்தம்பனை வரைக்கும் பூவரசங்குளம் பிரதேசத்திலிருந்து கங்கன்குளம் வரைக்கும் புளிதறித்த புளியங்குளம் பிரதேசத்திலிருந்து செக்கட்டிப்புலவு வரைக்கும் மன்னார் பிரதேசத்தில் வட்டுப்பித்தன்மடுவிலிருந்து புதுக்காமம் வரை ஆகிய பிரதேசங்களிலும்

17.09.2015 யாழ்.பிரதேசத்தில் ஆனைக்கோட்டை, நவாலி, காக்கைதீவு, சாவற்கட்டு, கொக்குவில் மேற்கு ஆகிய இடங்களிலும் வவுனியா பிரதேசத்தில் நவகம பிரதேசத்திலும் மன்னார் பிரதேசத்தில் முருங்கனிலிருந்து தலைமன்னார் வரை, விடத்தற்தீவு வைத்தியசாலை, இலுப்பைக்கடவை, மூன்றாம்பிட்டி, வெள்ளாங்குளம் , தேவன்பிட்டி, பெரியமடு, சன்னார், மறிச்சுக்கட்டி, பாலைக்குளி, கரடிக்குளி, முள்ளிக்குளம் கடற்படை முகாம், சன்னார் இராணுவ படை முகாம், வங்காலை கடற்படை முகாம், வங்காலை நீர்ப்பாசனத் திணைக்களம், கமலாம்பிகை அரிசி ஆலை, மாந்தை உப்பு உற்பத்திநிலையம், கீரி ஐஸ் தொழிற்சாலை, மன்னார் நீர்ப்பாசனத் திணைக்களம், மன்னார் தொலைத்தொடர்பு நிலையம், ஆவேமரியா ஐஸ் தொழிற்சாலை, மன்னார் வைத்தியசாலை, விசேட அதிரடிப்படை முகாம், வங்காலைபபாடு ஐஸ் தொழிற்சாலை, எருக்குப்பிட்டி பம்கவுஸ், மீன்பிடி சமாசம், அந்தோனிப்பிள்ளை ஐஸ் தொழிற்சாலை, கூல்மென் ஐஸ்தொழிற்சாலை, தலைமன்னார் கடற்படைமுகாம், சீனத்துறைமுகம் ஆகிய பிரதேசங்களிலும,

18.09.2015 யாழ்பிரதேசத்தில் அராலி சரஸ்வதி வித்தியாலயத்தடி, கருப்பிட்டிப் பிள்ளையார் கோவிலடி, அராலித் துறைமுகம், களவாத் துறை, அராலி வடக்கு, இணுவில் கந்தசாமி கோவில பிரதேசம் ஆகிய இடங்களிலும்வவுனியா பிரதேசத்தில் நவகம பிரதேசம் ஆகிய பிரதேசங்களிலும் மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும். (இ-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# தனிச்சிறப்பு

ஒரு குருவிடம் மூன்று சீடர்கள் இருந்தனர். குருகுலவாசம் முடிந்து மூவரும் குருவிடம் சொல்லிக் கொண்டு தத்தமது வழியில் பிரிந்து சென்றனர்.

என்ன வேலை செய்வது என்று முதலாவது சீடன் யோசித்தான். இந்த நாட்டின் அரசன் கற்றறிந்த அறிஞர்களை மதிப்பவன் என்பதால் அரசவை சென்று மன்னனை போற்றிப்பாடி நின்றான். அந்தத் துதிப்பாடல் கேட்டு பெருமகிழ்ச்சி கொண்ட அரசன் சீடனுக்கு வெகுமதி அளித்ததோடு, அரசவையிலேயே வைத்துக் கொண்டான்.

இரண்டாவது சீடனிடம் நிறைய யோசனைகள் இருந்தன. ஆனால் எதைச் செய்வது, எப்படிச் செய்வது என்பதில் குழப்பம் இருந்தது. அவன் தன் மனம்போன போக்கில் எங்கெங்கோ சுற்றித்திரிந்தான். ஒரு நாள் சத்திரம் ஒன்றில் இளைப்பாறினான். அந்தச்சத்திரத்தில் அன்னதானம் வழங்கப்பட்டது. அவன் அதை வாங்கி உண்டபோது, அதுவரை கண்டறியாத ருசியை உணர்ந்தான். அந்த அறுசுவை உண வைத் தயாரித்து அளித்த சமையற்காரரைச் சந்தித்துப் பேசினான். தனக்குப் பின்னால் அந்தக் கலையை, அடுத்த தலைமுறைக்குக் கொண்டு செல்லத் தகுந்த வாரிசு இல்லாமல் அவர் வாடுவது புரிந்தது. சற்றும் தயங்காமல், அந்தப் பெரியவரிடம் உதவியாளராகச் சேர்ந்து கொண்டான்.

அவனைப் பிடித்துப் போனதால் சமையல் கலையின் நுணுக்கங்கள் எல்லாவற்றையும் அவனுக்குக் கற்றுக்கொடுத்தார். அவனும் வெகுவிரைவிலேயே சிறந்த நளபாகச் சக்கரவர்த்தியாக உருவெடுத்தான்.

மூன்றாவது சீடனோ முதலில் தனது சொந்த ஊருக்குச் சென்றான். அப்போது தான் அந்தக் கிராமத்தில் நிறையச் சிறுவர்கள் காடுகளிலும் வரப்புகளிலும் கிடைத்த வேலைகளைச் செய்து பொழுதைக் கழிப்பதைக் கண்டான். தனக்கு அமைந்தது போல ஒரு குருவின் வழிகாட்டல் அவர்களுக்குக் கிடைக்கவில்லை என்பதைப் புரிந்து கொண்டான்.



ஏன் அந்தச் சிறுவர்களுக்குத் தான் கற்ற கல்வியை அளிக்கக் கூடாது என்ற நோக்கத்துடன் செயலில் இறங்கினான். ஆனால் தன்னுடைய வாழ்க்கைக்கே வழிதேட வேண்டிய நிலையில் தன்னால் எப்படி மற்றவர்களுக்கு உதவ முடியும் என்ற சந்தேகம் அவனுக்கு.

குரு அடிக்கடி சொல்லும் உபதேசம் ஒன்று நினைவுக்கு வந்தது. எந்த ஒரு நல்ல காரியத்தையும் சிந்தித்தவுடன் செயற்படுத்தத் தொடங்கிவிட வேண்டும். அவ்வாறு தொடங்கி விட்டால் அதை வெற்றிகரமாக முடிப்பதற்குத் தேவையான அனைத்து உதவிகளும் தானே தேடிவரும் என்பதுதான் அந்த உபதேசம்.

உடனடியாக, அந்தச் சீடன், அச்சிறுவர்களின் பெற்றோர்களைச் சந்தித்துப் பேசினான். சில சிறுவர்களைச் சேர்த்துக் கொண்டு, ஒரு மரத்தடியில் அவர்களுக்குக் கல்வி கற்றுக்கொடுக்க ஆரம்பித்தான். அவனுடைய அர்ப்பணிப்பு உணர்வைக் கண்ட அந்தமக்கள் அவன் எதிர்பார்த்ததற்கும் மேலாகவே, தாமாக முன்வந்து உதவிகளைச் செய்தனர்.

அவற்றைச் சிறப்பாகப் பயன்படுத்தி, படிப்படியாக வளர்ந்தான். சீக்கிரத்திலேயே, பெரிய தொரு கல்விச்சாலையை நிறுவி, சிறந்த கல்வியாளனாகத் திகழ்ந்தான்.

பதினைந்து ஆண்டுகளுக்குப் பிறகு ஒரு நாள் தன் சீடர்களைக் காண விரும்பினார் குரு. மூவரும் குருவைக் காண ஒருசேரக் கிளம்பிப் போனார்கள். தனது சீடர்களைக் கண்டதும், அவர் பெரிதும் மகிழ்ந்தார். தங்களுக்கு ஞானம் அளித்த குருவுக்கு, சிலநாட்கள் பணிவிடை செய்வது என்று மூவரும் தீர்மானித்தனர்.

ஆசிரமத்தில் தங்கி, குருவுக்குப் பணி விடைகள் செய்தனர். அப்போது மற்ற இரண்டு சீடர்களைக் காட்டிலும் மூன்றாவது சீடனுக்குக் கூடுதல் முக்கியத்துவம் தந்தார் குரு. இது மற்ற சீடர்கள் இருவரையும் மனம் நோகச் செய்தது.

ஒருநாள், மூன்றாவது சீடன் இல்லாத சமயம் பார்த்து, இருவரும் தங்களது ஆதங்கத்தை வெளிப்படுத்தினர். குரு புன்னகைத்தார்.

பின்னர் முதலாமவனைப் பார்த்துச் சொன்னார். "நீ அரசவைப் புலவன்! சிறந்த இலக்கியங்களைப் படைக்கின்றாய். உனது படைப்பு, படிப்பவர்களுக்கு மகிழ்ச்சி தருகிறது. மன எழுச்சியையும் தருகிறது. அதனால் நீ உயர்ந்தவன்தான்! நான் மறுக்கவில்லை!'என்றார்.

பின்னர், இரண்டாமவனைப் பார்த்து, "நீ சிறந்த நளபாகனாக இருக்கின்றாய். வயிற்றுக்கு உணவளித்தவன் தாய்க்கு ஒப்பானவன்! அதனால் நீயும் உயர்ந்தவன்தான்! நான் ஏற்றுக் கொள்கிறேன்," என்ற குரு மேலும் தொடர்ந்தார்.

"ஆனால், அறியாமையில் இருக்கும் ஒருவனுக்குக் கல்வி அளிப்பது என்பது, பார்வையில்லாதவனுக்கு பார்வை அளிப்பது போல! கல்விக்கண் திறக்கப் பட்டவனுக் குத்தான் உலகின் மற்ற வளங்கள் அனைத்தும் கிடைக்கும்! அதனால் எழுத்தறிவித்தவன் இறைவனாகிறான்! அதனால்தான் உங்கள் இருவரையும்விட மூன்றாமவனுக்குச் சற்றுக் கூடுதல் முக்கியத்துவம் கொடுத்துவிட்டேன். ஒரு குருவாக நான் இதைச் செய் திருக்கக் கூடாதுதான்! உங்கள் மூவரையும் சமமாகப் பாவித்திருக்க வேண்டும் என்னை மன்னித்து விடுங்கள்' என்றார் குரு.

"அகங்காரம் எங்கள் கண்களை மறை த்துவிட்டது. எங்கள் இருவரைக் காட்டிலும் அவனுடைய சேவை உயர்வானது என்பதை நாங்கள் இப்போது தெளிவாக உணர்ந்து கொண்டோம். தாங்கள்தான் எங்களை மன்னிக்க வேண்டும்' என்றனர் சீடர்கள் இருவரும்.

# 09.2015 14 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 81 - டைட்டசு என்ற தனது சகோதரன் இறந்ததை அடுத்து டொமீசியன் உரோமைப் பேரரசனாக முடி சூடினான்.
- 1752 - கிரிகோரியன் நாட்காட்டியை பிரித்தானியா ஏற்றுக்கொண்டது. இதன்படி புதிய நாட்காட்டியில் 11 நாட்களை அது இழந்தது. முன்னைய நாள் செப்டம்பர் 2 ஆகும்.
- 1812 - நெப்போலியப் போர்கள்: நெப்போலியனின் படைகள் மொஸ்கோவினுள் நுழைந்தனர். ரஷ்யப் படைகள் நகரை விட்டு விலகியதும் மாஸ்கோவில் தீ பரவ ஆரம்பித்தது.
- 1829 - உதுமானியப் பேரரசு உருசியாவுடன் அமைதி உடன்படிக்கையில் கையெழுத்திட்டது. உருசிய - துருக்கியப் போர் முடிவுக்கு வந்தது.
- 1846 - யாங் பகதூர் ராணாவும் அவரது சகோதரர்களும் நேப்பாளத்தின் பிரதமர் உட்பட 40 அரச குடும்பத்தினரைப் படுகொலை செய்தனர்.
- 1847 - மெக்சிக்கோ நகரத்தை "வின்ஃபீல்ட் ஸ்கொட்" தலைமையிலான அமெரிக்கப் படைகள் கைப்பற்றினர்.
- 1886 - தட்டச்சுப் பொறியின் நாடா கண்டுபிடிக்கப்பட்டது.
- 1901 - அமெரிக்க அதிபர் வில்லியம் மக்கின்லி செப் 6இல் இடம்பெற்ற கொலைமுயற்சியின் பின்னர் இறந்தார்.
- 1917 - உருசியா அதிகாரபூர்வமாகக் குடியரசானது.
- 1944 - இரண்டாம் உலகப் போர்: மாஸ்ட்ரிக்ட் நேச நாடுகளால் விடுவிக்கப்பட்ட முதலாவது டச்சு நகரம் ஆனது.
- 1954 - சோவியத் ஒன்றியம் அணுவாயுதச் சோதனையை மேற்கொண்டது.
- 1959 - சோவியத்தின் லூனா 2 விண்கலம் சந்திரனில் மோதியது. சந்திரனில் இறங்கிய மனிதனால் அமைக்கப்பட்ட முதலாவது விண்கலம் இதுவே.
- 1960 - எண்ணெய் ஏற்றுமதி செய்யும் நாடுகளின் கூட்டமைப்பு (ஓப்பெக்) உருவாக்கப்பட்டது.
- 1962 - கொங்கோ மக்களாட்சிக் குடியரசில் இராணுவத் தளபதி ஜோசப் மோபுட்டு இராணுவப் புரட்சியை மேற்கொண்டு பிரதமர் பத்திரிசு லுமும்பாவை அரசு பதவியில் இருந்து கலைத்தார்.
- 1979 - ஹஃபிசுல்லா அமீனின் கட்டளைப் படி ஆப்கானிஸ்தான் அரசுத்தலைவர் நூர் முகம்மது தராக்கி படுகொலை செய்யப்பட்டார். ஹஃபிசுல்லா அமீன் புதிய அரசுத் தலைவர் ஆனார்.
- 1982 - லெபனானின் அதிபராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பசீர் ஜெமாயெல் படுகொலை செய்யப்பட்டார்.
- 1984 - ஜோ கிட்டிங்கர் வளிமக் கூண்டில் அத்திலாந்திக் பெருங்கடலைத் தாண்டிய முதல் மனிதர் என்ற பெருமையைப் பெற்றார்.
- 1999 - கிரிபட்டி, நௌரு, டொங்கா ஆகியன ஐநா அவையில் இணைந்தன.
- 2000 - எம்எஸ் டொஸ் கடைசித் திருத்தம் வெளியிடப்பட்டது.
- 2000 - விண்டோஸ் மில்லேனியம் வெளியிடப்பட்டது.
- 2003 - சுவீடனில் இடம்பெற்ற மக்கள் வாக்கெடுப்பில் யூரோ நாணயத்தை ஏற்றுக் கொள்ளும் தீர்மானம் நிராகரிக்கப்பட்டது.
- 2003 - ஐரோப்பிய ஒன்றியத்தில் எசுத்தோனியா இணைவதற்கு அந்நாட்டில் இடம்பெற்ற பொது வாக்கெடுப்பில் அங்கீகாரம் வழங்கப்பட்டது.
- 2005 - நடிகர் விஜயகாந்த் தேசிய முற்போக்கு திராவிடக் கழகம் என்ற புதிய அரசியற் கட்சியை ஆரம்பித்தார்.
- 2008 - உருசியாவின் ஏரோபுளொட் விமானம் பேர்ம் கரை விமான நிலையத்தில் விபத்துக்குள்ளாகியதில் அனைத்துப் 88 பயணிகளும் கொல்லப்பட்டனர்.

பிறப்புக்கள

- 1853 - சேர் பொன் அருணாசலம், இலங்கையின் தேசியத் தலைவர். (இ. 1924)
- 1939 - சோ. பத்மநாதன், ஈழத்து எழுத்தாளர்
- 1965 - திமித்ரி மெட்வெடெவ், ரஷ்யாவின் மூன்றாவது அதிபர்
- 1973 - நாஸ், அமெரிக்க ராப் இசைக் கலைஞர்

இறப்புகள்

- 1901 - வில்லியம் மக்கின்லி, ஐக்கிய அமெரிக்காவின் 25வது அதிபர் (பி. 1843)
- 1982 - பசீர் ஜெமாயெல், லெபனான் அரசியல்வாதி. (பி. 1947)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூனை கறுப்போ சிவப்போ
எலி பிடித்தால் சரி.
- சீனப் பழமொழி

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## பூனையின் நெருங்கிய தோழன் பாலுக்கும் காவலனாக...

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சியில் இலங்கையில் நடந்த போர்க்குற்றம் தொடர்பில் சர்வதேச விசாரணை தேவை என்ற தீர்மானம் ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்டது.

இத் தீர்மானத்தைத் தடுப்பதில் இலங்கை அரசு கடும் பிரயத்தனம் செய்த அதேவேளை, தீர்மானத்தை நிறைவேற்றுவதில் அமெரிக்கா கடும் முயற்சி செய்தது.

கூடவே தீர்மானத்தை நிறைவேற்றுவதில் தமிழ் அரசியல் தரப்புகள், புலம்பெயர் தமிழர்கள் களத்தில் இறங்கி கடுமையாகப் பாடுபட்டனர்.

இவை யாவற்றுக்கும் மேலாக, ஈழத்தமிழ் மக்கள் கடவுளை நோக்கித் தவம் இருந்தனர். இறைவா! எம் இனத்தை வன்னியில் காப்பாற்றத் தவறிய நீ, சர்வதேச விசாரணை நடைபெறவேண்டும் என்ற தீர்மானம் நிறைவேறுவதற்கு உதவு என்று மன்றாடினர். இந்தக் கூட்டு முயற்சியின் பயனாக இலங்கை சர்வதேச விசாரணையை வலியுறுத்தும் தீர்மானத்தை ஐ.நா மனித உரிமைகள் பேரவை நிறைவேற்றியது.

எனினும் இலங்கையில் நடந்த ஆட்சி மாற்றத்தோடு தமிழ் அரசியல் தலைமை தன்னையும் மாற்றிக் கொண்டது. இந்த மாற்றத்தின் பின்னணியில் பல விடயங்கள் இருக்கின்றன.

அதேவேளை ஜெனிவாவில் நடைபெறும் ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் கலந்து கொள்வதற்கு தமிழ்த் தேசிய கூட்டமைப்பு பயணமாகிறது என்று அறிய வருகிறது.

எனினும் கடந்த வருடம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் தமிழ் மக்கள் கொண்ட நம்பிக்கையை இம்முறை தமிழ் மக்கள் கொண்டிருக்கமுடியாது என்பது உண்மை.

ஏனெனில் புதிய ஆட்சியில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கொழும்புத் தலைமை சர்வதேச விசாரணையை விரும்பவில்லை என்பது தெட்டத்தெளிவு. சர்வதேச விசாரணையை வலியுறுத்தி கையெழுத்துப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டதன் காரணமாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கொழும்புத் தலைமை சில அறிக்கைகளை விடுத்ததே அன்றி மற்றும்படி சர்வதேச விசாரணையை வலியுறுத்தாமல் இலங்கை அரசுடன் ஒத்துப்போதல் என்ற நிலைப்பாட்டையே கொண்டுள்ளது.

சர்வதேச விசாரணை அவசியம் என்று தமிழ் மக்கள் கூறியபோது கூட்டமைப்பில் உள்ள சிலர் அதனைக் கீழ்மைப்படுத்தினர். இந்நிலையில் ஜெனிவா சென்றுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கொழும்புப் பிரதிநிதிகள் சர்வதேச விசாரணையை வலியுறுத்துவார்கள் என்று ஒருபோதும் கூறமுடியாது.

யாழ்ப்பாணத்தில், கொழும்பில் கூட்டம் கூட்டி எடுக்கின்ற தீர்மானங்கள் கூட தமிழ் மக்களுக்கு தெரியப்படுத்தப்படுவதில்லை. தமிழ் மக்களுக்கு மட்டுமல்ல; தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர்களுக்குக் கூட அந்த தீர்மானங்கள் அறிவிக்கப்படுவதில்லை.

இப்போது கூட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரதிநிதிகள் ஜெனிவா சென்றது கூட்டமைப்பின் உறுப்பினர் பலருக்குத் தெரியாது. தமிழ் மக்களின் பிரச்சினைகளோடு சம்பந்தப்பட்ட விடயத்தை கூட்டமைப்பின் கொழும்புத் தலைமை பரம இரகசியமாகப் பாதுகாப்பதும் எதற்காக என்பது புரியாத விடயமே.

எதுவாயினும் ஜெனிவா சென்றுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஒரு தரப்புப் பிரதிநிதிகள் பூனைக்கு நெருங்கிய தோழனாக, பாலுக்கும் காவலனாக இருப்பதன் காரணமாக அவர்கள் தொடர்பில் புலம்பெயர்தமிழர்கள் மிகக் கவனமாக-அவதானமாக இருப்பது அவசியம்.

## சர்வதேச விசாரணையை வலியுறுத்தி மட்டக்களப்பில் கையெழுத்து போராட்டம்

சர்வதேச விசாரணையை வலியுறுத்தி மட்டக்களப்பு மாவட்டத்தில் தொடர்ச்சியாக கையெழுத்துப் பெறும் போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் நேற்று காலை முதல் களுவாஞ்சிக்குடி பொதுச்சந்தை பகுதியில் கையெழுத்துப் பெறும் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் மாவட்ட இணைப்பாளர் த.சுரேஸ் மற்றும் முன்னணியின் முக்கிஸ்தர்களான கு.குகதாஸ், அண்ணாத்துரை உட்பட பலர் இதில் கலந்து கொண்டனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் இரண்டு இலட்சம் கையெழுத்தினைப் பெற்றுக் கொள்ளும் வகையில் இந்த போராட்டம் முன்னெக்கப்பட்டு வருகின்றது.

இலங்கையில் நடைபெற்றதாக கருதப்படும் போர்க்குற்றம் தொடர்பான விசாரணையை உள்ளூர் பொறிமுறையை நிராகரிப்பதுடன் சர்வதேச விசாரணையை நடத்த வேண்டியே இந்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இதேபோன்று நேற்று பிற்பகல் கிரான் பொதுச்சந்தை பகுதியிலும் இந்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. (செ-12)

## மஹா கும்பாபிஷேகம்

நயினாதீவு தில்லங்குளி ஸ்ரீபால ஞான வைரவர் ஆலயத்தின் மஹா கும்பாபிஷேகம் நாளை மறுதினம் புதன் கிழமை காலை 9.10 மணி முதல் 10. 20 மணிவரையான காலப்பகுதியில் நடைபெறவுள்ளது.

அதற்கான ஆரம்ப கிரியைகள் இன்று திங்கட்கிழமை அதிகாலை ஆரம்பமாகி எண்ணெய் காப்பு நாளை செவ்வாய்க் கிழமை காலை 8 மணிமுதல் மாலை 4 மணிவரை இடம்பெறவுள்ளது. பிரதிஷ்டா பிரதமகுருவாக சிவஸ்ரீ கைலை வாமதேவக் குருக்கள் தலைமை ஏற்று மஹாகும்பாபிஷேகத்தை நடத்தி வைக்கவுள்ளார். (செ)

## சிபா உடன்படிக்கை பொய்யானது-அரசு

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க வின் இந்திய விஜயத்தின் போது சிபா உடன்படிக்கை கைச்சாத்திடுவதோ அல்லது அது சம்பந்தமான கலந்துரையாடலோ இடம்பெறமாட்டாது என அரசு அறிவித்துள்ளது. பிரதமரின் இந்திய விஜயத்தின் போது சிபா உடன்படிக்கை கைச்சாத்திடப்பட இருப்பதாக பலவித பிரசாரங்கள் செய்யப்படுவதாக சர்வதேச முதலீட்டு அமைச்சர் மலிக் சமரவிக்ரம தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

கடந்த தேர்தலின் போது இழக்கப்பட்ட அரசியல் இருப்பை தக்கவைத்துக கொள்வதற்காக மேற்கொள்ளப்படும் முயற்சியே இந்தப் பொய்ப்பிரசாரம் என்று அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். (செ-12)

## வட மாகாண அமைச்சரவையை மாற்றியமைக்குமாறு கோரிக்கை

### பிரதி அவைத் தலைவர் கடிதம்

(கொழும்பு)

வடமாகாண சபையின் அமைச்ச ரவை மாற்றியமைக்கப்பட வேண்டும் என சபையின் பிரதி அவைத்தலைவர் கோரிக்கை விடுத்துள்ளதுடன், முல்லைத்தீவு மாவட்டத்துகது அமைச்சு பதவி ஒன்று வழங்கப்பட வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்துள்ளார்.

இந்தக் கோரிக்கையினை முன்வைத்து பிரதி அவைத்தலைவர் அன்டனி ஜெயநாதன் முதலமைச்சர் மற்றும் இரா.சம்பந்தன் ஆகியோருக்கு கடிதங்களை அனுப்பியுள்ளார்.

குறித்த கடிதத்தில் குறிப்பிட்டுள்ளதாவது,

மாகாணசபை உருவாக்கப்பட்டு இரு வருடங்கள் நிறைவடைந்து ள்ளன.

இந்நிலையில் தற்போதுள்ள அமைச்சரவை மாற்றப்பட வேண்டும் என பல உறுப்பினர்கள் எதிர்பார்க்கின்றனர்.

இதனை நாம் ஒவ்வொரு உறுப்பினர்களிடமும் கேட்டு அறிந்து கொள்ளலாம் எனவும், முல்லைத்தீவு மாவட்டத்துக்கு ஒரு அமைச்சர் வழங்கப்பட வேண்டும் எனவும் அவர் அந்த கடிதத்தில் கூறியுள்ளார். (செ-12)

## ஐ.எஸ்.ஐ.எஸ் தீவிரவாதிகள் இலங்கையில் இல்லை!

### பாதுகாப்பு அமைச்சு தெரிவிப்பு

(கொழும்பு)

ஐ.எஸ்.ஐ.எஸ் தீவிரவாதிகள் இலங்கையில் இயங்குவதாக வெளியான தகவல்களுக்கு எவ்வித சாட்சியங்களும் இல்லை என்று பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கருணாசேன ஹெட்டியாராச்சி, இலங்கையர் ஒருவர் ஐ.எஸ்.ஐ.எஸ் தீவிரவாதிகளுடன் இணைந்திருந்தார் என்று கூறப்பட்டபோதும், அந்த அமைப்பு இலங்கையில் இயங்குவது தொடர்பில் எவ்வித சாட்சியங்களும் இல்லை என்று குறிப்பிட்டுள்ளார்.

இந்தநிலையில் ஐ.எஸ்.ஐ.எஸ் தீவிரவாதிகளின் தாக்குதல்களை தாம் கண்டிப்பதாக அவர் தெரிவித்துள்ளார்.

கண்டியில் நேற்று பௌத்த பீடாதிபதிகளை சந்தித்த பின்னரே அவர் இந்தக்கருத்துக்களை வெளிப்படுத்தினார். திருடன் வீட்டுக்குள் புகுந்து திருடும் வரை பார்த்துக் கொண்டு இருந்து விட்டு பின்னர் நடவடிக்கை எடுப்பது சாத்தியமாகாது. எனவே படையினர் எந்தநேரமும் விழிப்பாகவே செயற்பட்டு வருவதாக ஹெட்டியாராச்சி குறிப்பிட்டார். (செ-12)

## அரச சொத்து துஷ்பிரயோகம்; முறைபாடுகள் கோரப்படுகின்றன

(கொழும்பு)

அரசாங்க சொத்துக்களை துஷபிரயோகம் செய்தமை குறித்த முறைப்பாடுகள் இருப்பின், அவற்றை முன்வைக்குமாறு பாரிய ஊழல் மற்றும் மோசடிகளை விசாரணை செய்யும் ஜனாதிபதி ஆணைக்குழு பொது மக்களிடம் கோரியுள்ளது.

அதன் செயலாளர் லெசில் டி சில்வா இதனைத் தெரிவித்துள்ளார்.

பொது மக்களால் வழங்கப்படுகின்ற முறைப்பாடுகளின் அடிப்படையில் விசாரணைகளை தொடர ஆணைக்குழு தயாராக இருப்பதாக அவர் கூறியுள்ளார்.

கடந்த ஐந்து மாதங்களில், முன்னாள் அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட அரச சொத்துக்களின் துஷபிரயோகம் குறித்த 900க்கும் அதிகமான முறைபாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன.

அவற்றில் 250 முறைபாடுகள் குறித்த விசாரணைகள் தற்போதும் இடம்பெற்று வருவதாக அவர் கூறியுள்ளார். (செ-12)

## யோகாசனம், தியானம் புதிய பிரிவுகள் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.கந்தர்மடம் சிவகுருநாதகுரு பீடம் வேதாந்த மடத்தில் தினமும் காலை 6 மணி தொடக்கம் 7 மணிவரை யோகாசன மற்றும் தியான வகுப்புக்கள் நடத்தப்பட்டு வருகின்றன.

மேலதிகமாக மாணவர்கள் மற்றும் தொழில்புரிவோரது கோரிக்கைக்கு அமைவாக புதிய பிரிவுகள் ஆரம்பிக்கப படவுள்ளதால் ஆர்வமுள்ளவர்கள் தமது பதிவுகளை வேதாந்த மடத்திற்கு நேரடியாக வந்து மேற்கொள்ளுமாறு யோகாசன ஆசிரியர் அறிவித்துள்ளார். (செ)

## வேதாத்திரி மகரிஷியின் நற்சிந்தனை

### தாய் சேய் நலம்




தாய், சேய் நலம் என்று சொல்கிறபோது அது பெண்களுக்கோ, குழந்தைகளுக்கோ மாத்திரம் அல்ல் மனித குலத்திற்கே ஒரு பொதுவான, ஒரு மதிப்புடைய விஞ்ஞானம் அது. மனிதகுல மேன்மைக்காகவே, தாய்-சேய் நலம் என்ற ஒரு பிரிவை எல்லோரும் மதித்து அதற்கு ஒவ்வொருவராலும் ஆகவேண்டிய செயலைச் செய்ய வேண்டியது அவசியம். தாய்க்கும், சேய்க்கும் நோய் வராமல் தடுக்க வேண்டுமானால் கருவுற்ற நாள் முதற் கொண்டு பிரசவம் ஆகிற வரையிலே் அதைக் கவனிக்க வேண்டியது பெண்களுடைய கடமை. ஆனால், பெண்கள் மாத்திரம் அதைக் கவனித்துக் கொள்ள முடியாது. குடும்பத்திலே முக்கியமாக உள்ள கணவன் இன்னும் பெரியவர்கள் எல்லோருடைய கடமையும் உள்ளது. அதற்கேற்ற அறிவு அனைவருக்கும் அவசியம்.

கருவுற்ற காலத்தில் ஒரு பெண்ணினுடைய மனம் சோர்வு அடையுமேயானால், பிணக்கு அடையுமேயானால், வருத்தம் அடையச் செய்வோமே யானால், ஒவ்வொரு வருத்தமும் அவர்களின் குழந்தைகளை மனத்தாலே பாதிக்கும். மனம் என்பது கருமையம், சீவகாந்த ஆற்றல், இருப்பு நிலையான அறிவு, இயக்க நிலையான மனம் என்ற அனைத்தும் அடக்கம் பெற்ற ஒரு இயற்கை நிதி. இதைத் தெரிந்து கொள்ள வேண்டும்.

கருவுற்ற காலத்திலே எந்த விதத்திலே ஒரு பெண் ஒரு குடும்பத்திலே இருக்கப் பார்த்துக் கொள்ள வேண்டும் கணவன் எவ்வாறு அக்கருவுற்ற பெண்ணோடு நடந்து கொள்ள வேண்டும் என்று தெரிந்து கொண்டார்களா என்றால் தெரிந்து கொள்ளவே இல்லை. அந்தகாலத்திலே ஏற்படக் கூடிய மனநிலை குழந்தைகளை எப்படி பாதிக்கும் என்பதைத் தெரிந்து கொள்ளாதவர்கள் தான் அதிகமாக இருக்கிறார்கள். எனவே, விளைவறிந்து செயல்புரிந்து நலம் காண்போம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முல்லை மாவட்ட தேசிய இளைஞர் வி.விழா








27-வது தேசிய இளைஞர் விளையாட்டு விழாவின் முல்லைத் தீவு மாவட்டமட்ட எல்லே, உதை பந்து, மென்பந்துப் போட்டிகள் புதுக் குடியிருப்பு பிரதேசசபை மைதானம் மற்றும் மாங்குளம் மகா வித்தியாலய மைதானங்களில் இடம் பெற்றது.

இதில் புதுக்குடியிருப்பு பிர தேச சபை மைதானத்தில் இடம் பெற்ற உதைபந்து போட்டியிலே புதுக் குடியிருப்பு பிரதேச அணியினர் முதலாமிடத்தையும் ஒட்டுசுட்டான் பிரதேச அணியினர் இரண்டாமிடத்தையும் பெற்றுக்கொண்டனர்.

அதேபோல் மாங்குளம் மகா வித்தியாலய் மைதானத்தில் இடம் பெற்ற எல்லே ஆண்களுக்கான போட்டியிலே மணலாறு பிரதேச அணியினர் முதலாமிடத்தையும் மாந்தை கிழக்கு பிரதேச அணியினர் இரண்டாமிடத்தையும் பெற்றுக் கொண்டனர்.

பெண்களுக்கான எல்லை போட்டியிலே மணலாறு பிரதேச அணியினர் முதலாமிடத்தையும் ஒட்டுசுட்டான் பிரதேச அணியினர் இரண்டாமிடத்தையும் பெற்றுக் கொண்டனர்.

பெண்களுக்கான மென்பந்து போட்டியிலே ஒட்டுசுட்டான் பிரதேச அணியினர் முதலாமிடத்தையும் மணலாறு பிரதேச அணியினர் இரண்டாமிடத்தையும் பெற்றுக் கொண்டனர்.

ஆண்களுக்கான மென்பந்து போட்டியிலே கரைதுறைப்பற்று பிரதேச அணியினர் முதலாமிடத்தையும் புதுக்குடியிருப்பு பிரதேச அணியினர் இரண்டாமிடத்தையும் பெற்றுக்கொண்டனர்.

தொடர்ந்து ஏனைய குழு போட்டிகளும் தடகள போட்டிகளும் இடம்பெற்ற பின்னர் இவர்களுக்கான இறுதிப்போட்டிகள், பரிசளிப்பு சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் இடம்பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (க-281)

## இன்றைய போட்டிகள்

வடமராட்சி உதைபந்தாட்ட லீக்கின அனுமதியுடன் சமரபாகுநியூட்டன் விளையாட்டுக் கழகம் நடத்தும் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு நடைபெறவுள்ள போட்டியில் அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து தொண்டைமானாறு ஒற்றுமை விளையாட்டுக் கழகமும்.

மாலை 4.30 மணிக்கு நடைபெறவுள்ள போட்டியில் மணற்காடு சென்.அன்ரனீஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து கரவை சுடர் விளையாட்டுக் கழகம் மோதவுள்ளது. (க)

# இருபாலை முழுமதி வி.கழக மென்பந்து சுற்றுப் போட்டி

## இணுவில் கலைஒளி சம்பியன்



இருபாலை முழுமதி கிண்ணத்தை கைப்பற்றியது இணுவில் கலைஒளி விளையாட்டுக்கழகம்.

இருபாலை முழுமதி விளையாட்டுக் கழகம் நடத்திய 6 பேர் 5 ஓவர்கள் கொண்ட துடுப்பாட்ட சுற்றுப்போட்டியின் இறுதிப் போட்டியின் இறுதிப் போட்டி அண்மையில் நடைபெற்றது.

இப் போட்டியில் கொக்குவில் பொற்பதி விளையாட்டுக் கழகமும் இணுவில் கலைஒளி விளையாட்டுக் கழகமும் மோதிக் கொண்டன.

இதில் கொக்குவில் பொற்பதி விளையாட்டுக் கழகத்தை வீழ்த்தி சம்பியனாகியது இணுவில் கலை ஒளி விளையாட்டுக்கழகம்.

இப் போட்டியின் சிறந்த பந்து வீச்சாளராக இணுவில் கலை ஒளி விளையாட்டுக்கழக வீரர் ஸ்ரீதாசனும் சிறந்த துடுப்பாட்ட வீரராக கலைஒளி வீரர் பிரதீஸ்சும் தெரிவாகினர். (க)




## மேசைப்பந்தாட்ட பயிற்சி முகாம்

வடமாகாண விளையாட்டுத் திணைக்களத்தின் அனுசரணையுடன் யாழ்.மேசைப்பந்தாட்டச் சங்கம் நடத்தும் மேசைப்பந்தாட்ட பயிற்சி முகாம் இன்று 14, நாளை 15, நாளை மறுதினம் 16 ஆம் திகதிகளில் யாழ். மத்திய கல்லூரியில் காலை 8.30 மணி தொடக்கம் மாலை 4.30 மணி வரை இடம்பெறவுள்ளது.

குறித்த பயிற்சி முகாமில் வட மாகாணத்தை சேர்ந்த 100 இற்கு மேற்பட்ட மேசைப்பந்தாட்ட வீர, வீராங்கனைகள் கலந்து கொள்ளவுள்ளனர். (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சீர்மேவு யாழ்ப்பாணம் கோண்டாவில் - தில்லையம்பதி

## அருள்மிகு ஸ்ரீ சிவகாமி அம்மாள் திருக்கோயில்

## பாலஸ்தாபன கும்பாபிஷேக விஞ்ஞாபனம்

மான்பான தெய்வீகமாட்சி நிறைந்த தலமான கோண்டாவில் தில்லையம் பதியில் அருளாட்சி புரிகின்ற ஆதிமகாசக்தியாம் அன்னை ஸ்ரீ சிவகாமி அம்பாளுக்கு நிகழும் மன்மத வருடம் 16.09.2015 ஆவணி மாதம் 30 ஆம் திகதி புதன்கிழமை சித்திரை நட்சத்திரமும் சித்த யோகமும் கூடிய காலை 6.22 மணிமுதல் 8.17 மணி வரையுள்ள கன்னி லக்கின சுப முகூர்த்தத்தில் பாலஸ்தாபன கும்பாபிஷேகம் நடைபெற அம்பாள் திரு வருள் கைகூடியுள்ளது. அடியார்கள் அன்றும் அதற்கு முன் நடைபெறும் கிரியை களிலும் பங்குபற்றி அம்பாள் திருவருள் பெற்றுய்வீர்களாக.


**14.09.2015 ஆவணி 28 திங்கட்கிழமை**
**இன்று அதிகாலை 4.00 மணிக்கு பூர்வாங்க கிரியைகள் ஆரம்பம்.**
**15.09.2015 ஆவணி 29 செவ்வாய்க்கிழமை**
**காலை சாந்தி கிரியைகள் நடைபெறும்.**

பாலஸ்தாபன கும்பாபிஷேக பிரதம குரு
**பிரம்மஸ்ரீ. நா.திவாகரக் குருக்கள்** (தில்லையம்பதி)

'தில்லையம்பதியாளே சிவகாமசுந்தரியே சரணம்'

இங்ஙனம்
05.09.2015 திருக்கோயில் பரிபாலன சபை

# மரண அறிவித்தல்



மண்ணில் 01 - 07 - 1939

விண்ணில் 13 - 09 - 2015

## துரையப்பா ஜெயபதி

**(முன்னாள் காகிதாலை ஊழியர், வாழைச்சேனை)**

ஏழாலை மேற்கைப் பிறப்பிடமாகவும் சிறுப்பிட்டி, மட்டக்களப்பு கறுவாக்கேணி வாழைச்சேனையை வசிப்பிடமாகவும் கொண்ட துரையப்பா-ஜெயபதி நேற்று 13-09-2015 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் மகேஸ்வரியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான துரையப்பா-செல்லமுத்து தம்பதியரின் மகனும் காலஞ்சென்றவர்களான ஆசைப்பிள்ளை-அன்னப்பிள்ளை தம்பதியரின் பாச மருமகனும் ஜெயரூபன் (அவுஸ்ரேலியா),ஜெயதீபன் (மட்/செங்கலடி மத்திய கல்லூரி) ஜெயசீலன் (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஆரணி (அவுஸ்ரேலியா), பாலகௌரி(மட்/ஆரையம்பதி மகா வித்தியாலயம்),சர்மிளா (கனடா) ஆகியோரின் மாமனாரும் காலஞ்சென்றவர்களான ஜெயமணி, ஹரிச்சந்திரா, பொன்மணி,வேல்சந்திரன்,ஞானமணி ஆகியோரின் சகோதரனும் சறோஜினிதேவி, ராஜேஸ்வரி தவரட்ணம், மகேந்திரன் (இலங்கை மின்சார சபை, யாழ்ப்பாணம்),கணேசநாதன்,சீவரெட்ணம் திரவியராணி, காலஞ்சென்றவர்களான பொன்னையா, கமலநாயகி ராஜலிங்கம் ஆகியோரின் மைத்துனரும், கதிர்காமநாதன், ஆனந்தராஜா ஆகியோரின் பாசமிகு சகலனும் சுகந்தினி, மாலா, ஜெகதா ஆகியோரின் உடன் பெறா சகோதரனும், சரணா, கிருஷிகன்,பவந்தி,ஓவியா,சனாளன்,இனியா ஆகியோரின் பாசமிகு பாட்டனும் ஆவார்.


அன்னாரின் பூதவுடல் 13-09-2015 அன்று ஞாயிற்றுக்கிழமை அவரின் இல்லத்தில் வைக்கப்பட்டு 14-09-2015 திங்கட்கிழமை சிறுப்பிட்டி இல்லத்தில் வைக்கப்பட்டு 15-09-2015 செவ்வாய்க்கிழமை முற்பகல் 11 மணியளவில் இறுதிக் கிரியைகள் நடைபெற்று தகனக்கிரியைக்காக ஏழாலை உசத்தியோடை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும். (1763)

**கலைவாணி**
**சனசமூக நிலைய வீதி,**
**சிறுப்பிட்டி வடக்கு, நீர்வேலி.**
**0773397795 / 021 2058802**

**தகவல்:**
**ஆ.மகேந்திரன்**
**(இலங்கை மின்சார சபை)**
**செ.கனேந்திரன்**

# கண்ணீர் அஞ்சலி

## சாய்ந்து போனதே சந்தன மரம்



மாமனிதர் வாழ்நாள் பேராசிரியர்

## கந்தையா குணரத்தினம்

B.sc(Cey) ph.D(Lond,) FRCS(Lond,)
F.Inst.P.(lond),C.phy,(Lond)
முன்னாள் 3வது உபவேந்தர் யாழ்.பல்கலைக்கழகம்.

**மூளாய் தனியார் மருத்துவக் கல்லூரியில் படித்த**
**எங்களை யாழ் பல்கலைக்கழக மருத்துவபீடத்துடன்**
**இணைவதற்கு அயராது பாடுபட்ட சிலரில் நீங்கள்**
**முதன்மையானவர் ஐயா!**
**தக்க நேரத்தில் நீங்கள் எடுத்த முடிவு எங்களைத் தலை**
**நிமிர்ந்து வாழ வைத்தது ஐயா!**
**நறுமணம் வீசி நிழல் கொடுக்கும் சந்தன மரம்**
**சாய்ந்து போனது மரத்துக்கல்ல நஷ்டம் – அதில்**
**குளிர் காய்ந்து மனம் மகிழ்ந்து தலை நிமிர்ந்த**
**எங்களுக்குத் தான் நஷ்டம் ஐயா!**
**பலருக்கு பயன்படும் நிலைத்து நின்று பலன் கொடுக்கும்**
**மாமனிதர்களை இறைவன்**
**தன்னிடம் சீக்கிரமே அழைப்பதன் காரணம்தான்**
**எங்களுக்குப் புரியவில்லையே ஐயா!**

Dr. ச. ஸ்ரீபவானந்தராஜா - பிரதிப்பணிப்பாளர் - யாழ்.போதனா வைத்தியசாலை.
Dr. இ.மணிவாசகன் - பொறுப்பதிகாரி - காசநோய் வைத்தியசாலை, பண்ணை.
Dr. ஆ.கமலநாதன் - பொறுப்பதிகாரி - பிரதேச வைத்தியசாலை, அளவெட்டி.
Dr. ந.இரவீந்திரன் - பொறுப்பதிகாரி - பிரதேச வைத்தியசாலை, இளவாலை.
Dr. அ.அசோக்குமார் - பொறுப்பதிகாரி - உரும்பிராய் வைத்தியசாலை
Dr. ம.மனோகரன் - வைத்தியகலாநிதி - யாழ்.போதனா வைத்தியசாலை
Dr. ந.ஜெயக்குமார் - வைத்தியகலாநிதி - ஆதார வைத்தியசாலை, மந்திகை.
Dr. செ.சிறீதரன் - வைத்தியகலாநிதி - ஆதார வைத்தியசாலை, மந்திகை.
Dr. வ.முரளி - வைத்தியகலாநிதி - ஆதார வைத்தியசாலை, மந்திகை.
Dr. க.ராஜேஸ்வரி - வைத்தியகலாநிதி - ஆதார வைத்தியசாலை, தெல்லிப்பளை.
Dr. சகாதேவன் - வைத்தியகலாநிதி - தேசிய வைத்தியசாலை, கொழும்பு.
Dr. க.சந்திரமோகன் - வைத்தியகலாநிதி - போதனா வைத்தியசாலை, கண்டி.
Dr. து.சந்திரமோகன் - வைத்தியகலாநிதி - கனடா
Dr. இ.கலைவாணி - வைத்தியகலாநிதி - சுவிஸ்சலாந்து
Dr. உ.மேனகா - வைத்தியகலாநிதி - அமெரிக்கா
Dr. ந.நித்தியா - வைத்தியகலாநிதி - அமெரிக்கா
Dr. ச.ஜெயசுந்தரம் - வைத்திய கலாநிதி - சீமாட்டி றிச்வே சிறுவர் வைத்தியசாலை - கொழும்பு

(1761)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆயுத குழு...

இந்த ஆயுதங்கள துணை ஆயுதக் குழுவுக்கு எதற்காக வழங்கப்பட்டன போன்ற விபரங்களைக் கண்டறியும் விசாரணைகளை குற்றப்புலனாய்வுப் பிரிவினர் தீவிரப்படுத்தியுள்ளனர்.

இந்நிலையில் இலங்கையில் இடம்பெற்ற பல்வேறு குற்றச்செயல்களுக்கு இந்தத் துப்பாக்கிகள் பயன்படுத்தப்பட்டிருக்கலாம் என்ற சந்தேகம் வலுப்பெற்றுள்ளது.

அத்துடன் பாதாள உலக குழுக்களிடம் இந்த ஆயுதங்கள் கையளிக்கப்பட்டதா என்பன போன்ற விபரங்களையும் குற்றப்புலனாய்வுப் பிரிவினர் திரட்டி வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (செ-12)

## ஐ.நா கூட்டத்...

இந்த மாநாட்டில் கலந்து கொள்ளவுள்ள வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர, இன்றைய கூட்டத்தின் போது விசேட உரையொன்றை நிகழ்த்தவுள்ளதாக கூறப்படுகிறது.

இதன்போது இலங்கையின் உள்நாட்டு பொறிமுறை தொடர்பான முழுமையான விளக்கமளிப்பை அவர் முன்வைப்பார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, யுத்தக்குற்றங்கள் குறித்த அறிக்கையின் இரண்டு பிரதிகள் இலங்கை அரசாங்கத்திடம் கையளிக்கப்பட்டுள்ளன.

இந்த அறிக்கைக்கு 5 தினங்களுக்குள் பதில் வழங்க வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (செ-12)

## ஐ.நா விசாரணை...

பெயர்களும் குறிப்பிடப்படவில்லை என்றபோதிலும், எங்கு மீறல்கள் இடம்பெற்றது என்பதை வைத்து குற்றம் இழைத்தவர்களை அடையாளம் காண்பது கடினமல்ல என்று தெரிவிக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகின்றது. (செ-12)

## நடைபயணம்...

மனித உரிமை மீறல்களுக்கு உள்ளக பொறிமுறை பொருத்தமற்றது என்பதை சுட்டிக்காட்டியும் சர்வதேச விசாரணை கொண்டுவர வேண்டும் என வலியுறுத்தியும் வட மாகாண சபை உறுப்பினர்களான கே.சிவாஜிலிங்கம் மற்றும் திருமதி அனந்தி சசிதரன் ஆகியோர் குறித்த நடைபயணத்தை நேற்று முன்தினம் ஆரம்பித்திருந்தனர். இதற்கு தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியும் ஆதரவு வழங்கிருந்தது.

கிளிநொச்சியில் 10 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட குறித்த நடைப்பயணம், பிற்பகல் ஆனையிறவுடன் நிறுத்தப்பட்டது. பின்பு பளை-கொடிகாமம்-கைதடி ஊடாக குறித்த நடைபயணம் இன்றைய தினம் யாழ்.கிட்டுப்பூங்காவில் நிறைவடையவுள்ளது. (செ-4)

O/L பரீட்சைக்கு இன்னும் இருப்பது 90 நாட்களே
விஞ்ஞான பாட துரித மீட்டல் வகுப்புகள் ஆங்கில, தமிழ்மொழி மூலம் வீடு வந்து கற்பிக்கப்படும்.
தொடர்பு : 0772473201
(1753)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532

A/L க்குப் பின்னர் என்ன கற்பதாக இருந்தாலும் ஒரு தொழிலைப் பெற்றுக்கொள்வதே மிக அவசியம்!
6 மாதங்களில்
உள்நாட்டில் ஒரு தொழில்வாய்ப்பு
அல்லது
வெளிநாட்டு விசா உத்தரவாதத்துடன்
சுவிஸ், நியூசிலாந்து, சிங்கப்பூர், மலேசியாவில் மாதம் 3 இலட்சம் வரையில் சம்பாதிக்கக்கூடிய
Business & Hotel Management With ENGLISH
அடிப்படையிலிருந்து ஆங்கிலத்தில் அச்சமின்றிப் பேசக் கற்றுக்கொள்ள
ENGLISH for Beginners
இலக்கண நுணுக்கங்களுடன் சரளமாக பேச, எழுதக் கற்றுக்கொள்ள
ENGLISH for Advance Learners
IELTS பரீட்சையில் அதியுச்ச புள்ளிகளைப் பெற்றுக்கொள்ள
Rapid IELTS Preparatory Course
50% Discount
கற்கைநெறிக் காலத்திலேயே மாதம் 15,000/= வரை சம்பாதிக்கலாம்
SIKARAM Any Visa to Any Country
வகுப்புக்கள் திங்கள், புதன், வெள்ளி 9.00 AM - 1.00 PM
அனுமதிகளுக்கு - 077 36 16 798
Sikaram Institute of Hospitality & English
இல.275-2/1, மணிக்கூட்டுக்கோபுர வீதி, யாழ்ப்பாணம்.
வைத்தியசாலை பின்புறம் - பஸ் நிலையத்தில் இருந்து 100m



AFTER A/Levels
எதிர்கால தொழில்வாய்ப்பினை உறுதிப்படுத்தும் கற்கைநெறிகள்
2015 SEPTEMBER INTAKE
PEARSON edexcel advancing learning, changing lives
BTEC HND Business Management
PEARSON edexcel advancing learning, changing lives
BTEC HND Computing & Systems Development
UGC APPROVED
MBA M.Sc
Degree - Final Year
B.A(Hons)Business Administration
B.Eng. (Hons) in Software Engineering
B.Sc. (Hons) in Computing
HND in Computing & Systems Development in Business Management
OL's / AL's / DiTEC
Final Year
BEng (Hons) in Software Engineering
BSc (Hons) in Computing
BA (Hons) in Business Administration
LONDON metropolitan university
Entry Requirements
A-Levels With 2 Pass + Credit for English at O-Levels OR
O-Levels with Credit for English + Minimum of a recognized
Diploma (DiTec / DiBM) of a duration of 4-6 months
AND Age should be at least 16 years
Gajanan 077 309 9 308
ESOFT Shaping Lives, Creating Futures.



FREE Samsung GALAXY Tab4
ESOFT METRO CAMPUS - JAFFNA
No. 137, K.K.S Road, Jaffna, Sri Lanka. Tel : 021 - 222 4142
(இ-2133)

NEW SCIENCE HALL
SINCE 1988 KANNATHIDDY ROAD, JAFFNA.
DAY CLASSES
திங்கள் – வெள்ளி
2015 A/L பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களுக்குரியது
PHYSICS — திரு. S.சோதிலிங்கம், திரு. G.பிரபா
CHEMISTRY — திரு. K.சிவத்திரன் (PAST PAPER), திரு. S.T.உமாசங்கர் (MODEL PAPER), திரு. T.சுசாந்தன், திரு. G.BENO
BIOLOGY — வழமையான ஆசிரியருடன் திரு. T.செங்காதரன்
COM.MATHS — திரு. P.செந்தில் நாதன், திரு. S.சிவகரன்
ஆரம்பம் - 16/09/2015 WEDNESDAY 7.30AM
தொடர்புக்கு :- 0777917611
https://facebook.com/newsciencehalljaffna
(இ-2149)

வடமராட்சியில் ...
தெளிவான தமிழ் விளக்கத்துடன் மிக இலகு முறையில் குறுகிய காலத்தில் ...
SPOKEN ENGLISH WITH GRAMMAR
பிரபல ஆசிரியர் MR. B. JOTHY
புதிய பிரிவுகள் ஆரம்பம் - 16.09.2015 ( புதன் - 4.00pm )
★ A/L எழுதியவர்களுக்கான தனிப்பிரிவுகள்
கலை, வர்த்தக மாணவர்களுக்காக பிரிவு -I
கணித, விஞ்ஞான மாணவர்களுக்காக பிரிவு -II
★ மேலும், வெளிவாரி பட்டப்படிப்பு மாணவர்கள், பல்கலை புதுமுக மாணவர்கள் மற்றும் தொழில் புரிவோருக்காக பிரிவு -III
★ அத்துடன் வெளிநாடு செல்வோருக்காக விசேட பேச்சுப் பயிற்சியைக் கொண்ட பிரிவு -IV




OXFORD ENGLISH ACADEMY
P.K. Lane Point Pedro
( மேலதிக விபரங்களை அலுவலகத்தில் பெறவும்)
(C-2153)

## மகிந்தவின் இணையத்தளம்...

தரரான பல்லேவத்த கமராலகே குமாரசிங்க சிறிசேன பணியாற்றி வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது. (செ-12)

## ஐ.நா ஆணையாளருக்கு சம்பந்தன்...

என்ற நிலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன், ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளருக்கு அனுப்புவதற்கான கடிதம் ஒன்றை வரைந்துள்ளார். ஜெனிவா சென்றுள்ள கூட்டமைப்பு எம்.பி. சுமந்திரன் ஊடாகவே இந்தக் கடிதத்தை அவர் அனுப்பிவைத்துள்ளார். (செ-12)

## விபத்துக்குள்ளானவர் நேற்று மரணம்

மோட்டார் சைக்கிள் மோதி படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த இளைப்பாறிய அதிபர் ஒருவர் சிகிச்சை பலனின்றி 6 நாட்களின் பின் நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளார்.

காரைநகர் நடுத்தெருவை சேர்ந்த சீவரட்ணம் நவரட்ணம் (வயது - 76) என்பவரே இவ்வாறு உயிரிழந்தவராவார். இது தொடர்பாக யாழ். போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மரண விசாரணைகளை மேற்கொண்ட பின் சடலம் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது (செ-9)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 14.09.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org